Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

டி.ச.19-25,1999

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 337

## இறுதி நேரத் தேர்தல் வியூகம்

## வாக்கு வேட்டைக்கு வஞ்சகத் திட்டங்கள்

## மிலேனியம் ஜனாதிபதி யார்?



# முரசம்

## ஜனாதிபதித் தேர்தல்

*அன்புள்ள உங்களுக்கு,*
*வணக்கம்.*

தேர்தல்!
அதன் இறுதிக் கட்டத்தை
நெருங்கிவிட்டது
ஜனாதிபதித் தேர்தல்!
விரும்பியோ விரும்பாமலோ
மிக முக்கியத்துவம்
வாய்ந்த தேர்தல்!
இன்று இலங்கையிலுள்ள
அரசியலமைப்புச் சட்டத்தின்படி
இந்நாட்டின் ஜனாதிபதி
ஆசனத்தில்
அமரப்போகும் ஒரு
அப்பாவிக்குக்கூட
அனைத்து
அதிகார மையங்களையும்
தன் கீழ் அடங்கி ஒடுங்கி
நிற்கச் செய்யும்
சக்தி கிடைக்கிறது!

பதுங்கியிருந்த
விஜயதுங்காகூட,
ஜனாதிபதியானதும்,
யாரும் வாலாட்ட
முடியாது மாறிப்போனதை
நாமே கண்டோம்.

அதனால் இதைத்
துச்சமாய் நினைத்து
உதாசீனம் செய்வது
முட்டாள் தனம்.

தமிழருக்கு இதில்
நன்மை- தீமை
இல்லையென்றோ,
அக்கறைப் படத்
தேவையில்லையென்றோ
ஒதுங்கி நிற்பது
மதியூகமற்றது!

ஏனெனில்
இந்தப் பதவிக்கு
வரப்போகும் நபரோடுதான்
எமது கணக்குகள்
தீர்க்கப்பட வேண்டியதாயிருக்கும்!

இனப்பிரச்சனைக்குத்
தீர்வு காண்பதாயிருந்தாலென்ன,
பேச்சுவார்த்தையானாலென்ன,
பேரமாயிருந்தாலென்ன
அல்லது இறுதியில்
போராட்டமாகத்தான் இருந்தால்கூட,
இவரோடுதான் எமக்கு
உறவும்-பகையும்!

அவரை நாம்
எதிர்கொண்டே ஆகவேண்டும்!

அதனால்
எதிரியையோ நண்பனையோ
நாமேதான் தீர்மானிப்பது
உசிதம்.
அதன்படி
இத்தேர்தலின்
விளைவைத் தீர்மானிப்பதில்
எமக்கும் ஒரு
பங்கிருக்கும்போது,
அதைப்
பயனுள்ள வகையில்
பாவிப்பதற்கே
முயற்சிக்க வேண்டும்!

அதேவேளை,
தமிழ்மக்களையும்
திருப்தி செய்தால்தான்
தங்கள் அரசியல் எதிர்காலம்
நிலைக்கும் என்ற
ஒரு வலுவான உண்மையை
நாம் சிங்களத் தலைமைகளுக்கு
உறைக்கச் செய்யவும்
வேண்டும்!

முன்னரெல்லாம் இனவாதம் பேசியே
அரசியல் நடத்திய
பிரதான கட்சிகள்
யாவற்றினதும்
முதலாவது அம்சமாக இன்று
இனப் பிரச்சினைக்குத்
தீர்வு காணும் விடயமே
இடம்பிடித்து நிற்கிறது.

இது விருப்பத்தால் வந்ததா,
நெருக்கடியால் வந்ததா
என்பது எமக்குப் புரியுமாயினும்,
வந்துள்ள நிலைமையை
நாம் வரவேற்பது
நல்லது.

இதில்
போட்டியிடும் கட்சிகளில்
பதவிக்கு வரப்போவது
ரணில் அல்லது சந்திரிக்கா
என்ற இருவரில்
ஒருவர் மட்டுமே!

சந்திரிக்கா
தீர்வொன்றை வைத்தார்.
அதை ஏற்புடையதாக்கவுமில்லை;
நடைமுறைப்படுத்தவுமில்லை.

ரணில்
தீர்வு எதுவென்றே
சொல்லவில்லை.
வெறுமனே
"பேசுவேன்" என்று மட்டும்
சொல்கிறார்.

இருவருமே
தீர்வுக்கான
வழியெதுவென இன்னும்
தெரிவிக்கவில்லை.

இறுதி நேரத்திலாவது
யாராவது
காத்திரமான
வழியொன்றைக்
காண்பிக்கிறார்களா என்பதைக்
கடைசிவரை அவதானித்து
மக்கள் ஒரு
முடிவுக்கு வரலாம்.

*மீண்டும் மறுமடலில்*
*வந்து கலக்கும்வரை*

*என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்.*

# ஆன்மீகம்



## ஆன்மீக வாழ்விற்கு அத்திவாரமிடல்

இறைவனை உங்களுடைய இருதயத்தில் இருத்தி விட்டீர்களானால் நீங்கள் கடவுளை எங்கும் காணலாம். உலகத்தில் காணப்படும் பல்வேறுவகைப் பொருட்களிலும்கூடக் காணலாம். நீங்கள் விழிப்பாயிருக்கும் காலங்களில் ஓர் இமைப்பொழுதையாவது பயனற்ற வார்த்தைகளைப் பேசுவதிலும், வீண்புழுகுகளிலும், தன்னையே குறைத்துக் கொள்ளும் விளையாட்டுக்களிலும் வீணாக்கக்கூடாது. சாக்காடு உங்களைப் பின் தொடருகிறது. அது எந்த நேரமும் உங்களை வீழ்த்திக் கவர்ந்து கொண்டுபோய்விடும்.

உயிருடன் வாழும் பொழுதே நல்ல கருமங்களைச் செய்யுங்கள். மேன்மையாகவும், இனிமையாகவும் பேசுங்கள். மற்றவரை நிந்திக்காதீர்கள். தீங்கு விளைவிக்காதீர்கள். தேவையானவர்களுக்குச் சேவை செய்யுங்கள். இறைவனின் திருவுருவத்தை உங்களுடைய மனக்கண்ணில் எப்போதும் நிறுத்திவையுங்கள்.

விளக்கெரிவதற்கு எண்ணெய் எப்படி அவசியமோ, அப்படியேதான் ஞான விளக்கு எரிவதற்கு இறைவனிடம் பக்தி கொள்ளல் அவசியம். தேவைகளைப் பெருக்கக் கூடாது. நேரத்தை ஒரு நிமிடத்தைக்கூட வீணாக்கக்கூடாது. ஒரு சந்தோசகரமான விசயத்தில் வைக்கும் இச்சையானது அதிலும் பார்க்கக்கூடிய சந்தோசகரமான விசயத்தில் இச்சையைச் செலுத்தும். இச்சையை மூலவேரோடு வெட்டியெறிந்துவிட்டு நீங்கள் உங்களுக்கே அதிகாரிகளாகுங்கள். எப்பொழுதும் அன்பு செய்யுங்கள். சத்தியத்தைப் பின்பற்றுங்கள். பொய் ஒரு பொழுதும் நன்மை பயக்காது. மேற்கூறிய நற்சிந்தனைகளைப் பின்பற்றினால் நாம் ஆன்மீக வாழ்விற்கு அத்திவாரம் இட்டவர்களாவோம்.

தொகுப்பு:- அ.அரசரெத்தினம்,சேனையூர்-06, மூதூர்.

## உமர்றலி ஸஅத் ரலிக்கு கூறிய அறிவுரை

ஸஅதே! நீர் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் தாய் மாமன் உறவு முறையிலிருக்கின்றீரென்றோ, அண்ணலாரின் நெருக்கமான தோழர்களிலொருவராக இருக்கின்றீரென்றோ, மமதையிலிருந்து விடாதீர்! அல்லாஹ் கெட்டதைக் கொண்டு சுத்தப்படுத்துவதில்லை. கெட்டதை நல்லதைக் கொண்டுதான் சுத்தப்படுத்துவான்!

அல்லாஹ்விற்கும் அவனது அடியார்களுக்குமிடையே எந்தவித உறவு முறையும் கிடையாது. அவனிடத்தில் அடியானுடைய வணக்கம்தான் ஏற்றம் பெறுகிறது. அவனிடத்தில் உயர்ந்தவன் தாழ்ந்தவன் என்ற பாகுபாடு கிடையாது. அவனுடைய வெகுமதிகள் அவனை வணங்குவதைக் கொண்டே கிடைக்கும்.

உளத் தூய்மையோடு சத்தியத்தின் அடிப்படையில்தான் அதனை சாதிக்க முடியும். வேறு எதைக் கொண்டும் முடியாது. எனவே உம்மையும், உம்மைச் சார்ந்தோரையும் நலவின் பக்கமே பழக்கிக் கொள்ளவும். அல்லாஹ்வின் அச்சத்தை உள்ளத்திலே உறுதியாக்கிக் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் அச்சம் இரண்டு விஷயங்களைக் கொண்டுதான் உறுதிப்படும். ஒன்று! அவனை வணங்குவதில்! இரண்டாவது: பாவங்களை விட்டுத் தவிர்த்துக் கொள்வதில்!

இம்மையை வெறுத்து மறுமையை நேசித்தவர்களுக்கே அல்லாஹ்விற்கு அடி பணியும் பாக்கியம் உண்டு.

தொகுப்பு: வை.எம்.தாஹிர்கரீம், கல்முனை-06.

## கவிதைப் போட்டி இல.334

### பரிசுக்குரிய கவிதை

### பட்டமரம்

ஓடோடி அலுத்துவிட்டோம்!
ஓரிடத்தில் உட்கார்ந்தோம்!
அண்ணாந்து பார்த்தோம்!
அதுவும் பட்ட மரம்!
மீண்டும் தலை கவிழ்ந்தோம்!


சசிகலா செல்வராஜா- வத்தளை.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:**

### உதிர்தல்

இலைகள் போல்
உதிருதய்யா
அரசியல்வாதிகளின்
வாக்குறுதிகள்!
ஆம்
இது தேர்தல் காலம்!

எஸ்.ஐ.எம். இர்ஷாத்-
அலவதுகொட.



### இ(கொ)லையுதிர் காலம்!

இம்மரத்திற்கு இது
இலையுதிர் காலம்!
இந்நாட்டிற்கு இது
கொலையுதிர் காலம்!

ஆர். பாலகிருஷ்ணன்- மாத்தளை.

### நீயும் நாமும்!

இலையில்லை,
பூவில்லை,
காயில்லை
கனியில்லை
உனக்கு...!
தாயில்லை
தந்தையில்லை,
உற்றாரில்லை
உறவினரில்லை
எமக்கு...!

அ. யாழினி-
மட்டக்களப்பு.

### அ(இ)துவுமில்லை

மனையை இழந்து வந்து
மரநிழலில் வசிக்கவென்றால்,
துரத்திவந்த ஷெல் பட்டு
அதுவும் பறிபோனதிப்போ!

வீ. ஜெயராஜ்-கோரகல்லிமடு, கிரான்.

### எலும்பு

தமிழனின் பூமியில்
இருந்ததால்
என்னையும்
எலும்பாக்கி
விட்டார்கள்!

பி. சுரேஸ் கண்ணா-
வெள்ளவத்தை.

### அ(ழி)ந்த (ப)சுமை!

பசுமையழிந்த
மண்ணில்-
பட்ட மரத்தடியில்
பட்ட துன்பங்களை
பகிர்ந்து கொள்ளும்
பாவிகளா(க)
நீங்கள்?!

கே. சுப்ரமணியம் (மகாவளையூர்
மணியன்)-ஹோப்,ஹேவா எட்டை.

### காலம்(?)!

மரத்துக்கு
இலையுதிர் காலம்!
எங்களுக்கோ
கிளையுதிர் காலம்!!
எப்போது பொற்காலம்?

என். தனுசுஜன்-
யாழ்ப்பாணம்.

### பட்ட மரங்கள்!!

பட்ட மரங்களோ தளிர்ப்பதில்லை!
பாழ்பட்ட நெஞ்சங்கள் முகிழ்ப்பதில்லை!
மார்தட்டும் போரினால் மக்களெல்லாம்
மண்ணோடு மண்ணாகிப் போவதும்
முறையோ??

காரைதீவூர் சிவம்-
குருக்கள்மடம்.

### நீருயர...!

'நீருயர' எனப் பாடிய காலம்
நீறுபோல் மறைந்ததடி!
நெருப்புயர வந்தது காலம்-
ஐயகோ
பட்டுப் போனது வன்னிமரம்!

கவிஞர் 'திக்கவயல்'-
அம்பாறை.

## கவிதைப் போட்டி இல.337



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள்.
அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 25.12.1999

கவிதைப் போட்டி இல.337
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772,
கொழும்பு.

# வாசக(ர்)சாலை

என் உயிர்தொட்டு தாலாட்டும் உறவே...
உன் ஆக்கக் குழந்தைகளின் அரவணைப்பில் இவ்வுலகில் மிதக்கிறேன். மோனிக்காவின் வெள்ளை மாளிகை இரகசியம் என் மனதை வெள்ளையடிக்கிறது. தொடர்கதைகளும், குறுங்கதைகளும் நெஞ்சைத் தொடும் இன்னிசை ராகங்கள்.
உனக்கு நிகர் நீயே!
வாழ்க நீ! வளர்க உன் பணி!

ப. இர்பான்ராசா, பாலாவி.



வாரந்தோறும் பூக்கும் இனிய தினமுரசே. நீ தொகுத்துத் தருபவை எல்லாம் என்னைக் கவர்ந்துள்ளன. தொடர்கதைகள் என் நெஞ்சைத் தொட்டு விட்டன. உன்னில் வரும் 'நில் கவனி முன்னேறு' சிந்தித்து செயல்படுவதற்கு நன்றாக உதவுகின்றது. இன்னும் இது போல் சிந்திக்கக்கூடியவற்றை தர வேண்டும். உன் சேவை என்றென்றும் உயர்ந்திருக்க என் வாழ்த்துக்கள்.

ரூமியா பன்கொள்ளாமட.

தித்திக்கும் தினமுரசே!
உன்னை போற்ற வார்த்தைகள் இல்லை.
என்னைக் கவர்ந்தவை 'இடி அமீனி'ன் கதையும் 'மோனிக்கா என் மோனிக்கா' தொடர்கதையும். இவை விறுவிறுப்பாகவும் உள்ளன. உன்னைப் பாராட்ட வார்த்தைகளே இல்லை.

லெத்திபு சரீனா,
புதிய காத்தான்குடி.

வாரம் தோறும் வெற்றிநடை போடும் இனிய முரசே! முதற்கண் மறைந்த உன் ஆசிரியர் அற்புத ராஜா அவர்களுக்கு எனது கண்ணீர் அஞ்சலி உரித்தாகட்டும்.
என் இனிய முரசே! மறுபடி உன் வருகைக்கு மிக்க நன்றி. மேலும் 21ம் நூற்றாண்டிலும் உன் வெற்றிநடை தொடர எனது வாழ்த்துக்கள்.
இப்படிக்கு உன் வாசகரில்

ஒருவன், அமலராஜன்.

அன்பின் முரசே!
வாரம் ஒருமுறை வானத்தில் நீந்தி வந்து என் கண்களையும் கைகளையும் துடிக்க வைத்த முரசே, ஆகா... நீ மறுபடி வந்துவிட்டாய். அன்பு முரசே!
நீ தாமதமாக இங்கு வந்து சேர்ந்தாலும், உன்னை நான் அன்போடு அணைக்கிறேன். உன்னைப் படிப்பதற்கு.

ச. ஜெயராணி, சுவிற்ஸர்லாந்து.

தினமுரசின் ஆயிரமாயிரம் வாசகர்களில் நானும் ஒருவன் என்பதில் பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் காலத்தின் தேவையறிந்து முக்காலங்களையும் இக்கால சந்ததிக்கு படம்பிடித்து காட்டும் தினமுரசே நீ வாழ்க உன் பணி தொடரட்டும்.
'திருமறைதரும் பொதுநெறி'யில் பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு இரண்டும் எல்லோரும் விளங்கத்தக்க முறையில் தந்து வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் விளங்குகிறாய்.

யூட் மணிவண்ணன், முல்லைத்தீவு.

அன்பு முரசே!
நீ கொண்டு வரும் அனைத்து அம்சங்களும் என் நெஞ்சை தொட்டுவிட்டன. முக்கியமாக 'இடி அமீனி'ன் கதை, 'மோனிக்கா என் மோனிக்கா', 'நில் கவனி முன்னேறு' என்பன படு சூப்பர்.

டி. சின்னத்தம்பி, அக்கரைப்பற்று.

டியர் முரசே!
நான் நீண்ட கால இடைவேளையின் பின்பு உன்னை சந்தித்ததில் மிக பெருமை அடைகிறேன். உன்னைப் பார்க்காமல் நான் கொண்ட கவலை நீ அறிந்திட மாட்டாய். எப்போது உன்னை மீண்டும் சந்திக்க வாய்ப்பு தருவாய் என காத்திருந்தேன். இப்போது தந்து விட்டாய். வாழ்க உன் புகழ்! வளர்க உன் பணி!

கே. புவனலோஜினி, இறக்குவானை.

## ஏன் தாமதம்?

அன்பின் முரசே!
வியாழன் தோறும் காலையில் என் கையில் தவழ்ந்த முரசே! இப்போது சிறிது தாமதமாக வருகிறாய். முன்னைப் போன்று தாமதிக்காமல் எப்போது வருவாய்? மீண்டும் முன்போல் உன் பணி தொடர வேண்டும் என்று வாழ்த்தி விடைபெறும்.
வாசகன்.

ரி. ரமேஷ், கொழும்பு-5.

தித்திக்கும் தேனமுதாம் தினமுரசே!
உனது படைப்புக்கள் அருமை. 'இடி அமீன்' இடித்துக்கொண்டு செல்கிறான். 'சிகப்பு வணக்கம்' சிகப்பாய்தான் செல்லும் போல. 'அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை' தொடரையும் அந்நியப்படுத்திவிட்டார்கள். அற்புதன் போல் இனியொருவர் இல்லை முரசே!

த. லக்ஸ்மன், மட்/ சத்துருக்கொண்டான்.

## பயன்பெறத்தக்கவை

முத்து முரசுக்கு;
தித்திக்கும் தேன் கிண்ணம்
அதிசயம் ஆனால் உண்மை
புத்தி புகட்டும் நில் கவனி முன்னேறு!
வியப்பூட்டும் தகவல் பெட்டி
சிந்திக்க வைக்கும் நகைச்சுவை கருத்துப்படங்கள்
நன்று நன்று! மொத்தத்தில் தினமுரசு தரும் எல்லா ஆக்கங்களும் படித்துப் பயன் பெறத்தக்கவை
எனது பாராட்டுக்கள்!

அ. அரசரெத்தினம்- சேனையூர்.

## பணி தொடரட்டும்

காலத்திற்கேற்ப பச்சோந்திகளாய் இல்லாமல், தரணியில் உண்மைகளை ஒளிக்காமல் உறுதியுடன் கூறுபவர்களை வல்லூறுகளுக்கு வால் பிடிப்பவர்களுக்கு பிடிக்காது. உனது உண்மையான சேவையை வாசகர்கள் நன்கு அறிவார்கள். தலைவனின் இழப்பை ஈடுசெய்ய இயலாது. உனது சேவை தடையில்லாமல் தரணியில் தவழ்ந்துவந்து எதிரிகளுக்கு உணர்த்தட்டும். உனது பணி தொடர வேண்டும்.
உன் வாசக பிரியன்

ருத்ரா, சின்னசெல்வக்கந்தை.

தித்திக்கும் தினமுரசே!
நீ சுமந்துவரும் அனைத்து அம்சங்களிலும் சூடு-சுவை-சுவாரசியம் என்பன கலந்திருக்கின்றன. வாரம் ஒருமுறை மலர்ந்தாலும் அரசியல் கட்டுரைகளை சுவைபட தொகுத்துத் தருவதில் உனக்கு நிகர் நீயே.

எம்.எச்.எம்.அவுப்,
உக்குவளை பஸார்.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலை நகல் (Fax):- 074-513266

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு,வேறுபிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு. -நிர்வாகி.

# அமைதியாக நடைபெறுமா?

## பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ள அச்சப்பாடு!

ஜனாதிபதித் தேர்தல் நீதியாகவும் அமைதியாகவும் நடைபெறுவதற்கான சகல ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. ஆனால் வன்முறைச் சம்பவங்கள் நாடெங்கணும் அதிகரித்த வண்ணமுள்ளன. இந்நிலையில் வாக்காளர்கள் தங்கள் வாக்குகளைச் செலுத்துவதற்கான சூழ்நிலை சீரானதாக இருக்குமா என்று மக்கள் மத்தியில் அச்சம் தோன்றியுள்ளது. தேர்தல் மோசடிகளும் அதிகரிக்கலாம் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

எமது சிறப்பு நிருபர்

ஜனாதிபதித் தேர்தலுக்கு இன்னும் சில தினங்களே உள்ளன. இதேவேளையில் தேர்தலை ஒட்டிய வன்முறைச் சம்பவங்கள் நாட்டின் பல பாகங்களிலும் விசுவரூபமெடுத்து வருகின்றன. வளர்ந்துவரும் வன்முறைச் சம்பவங்களைப் பார்க்கும்போது, தேர்தல் சுமுகமாக நடைபெறுமா, தேர்தலைத் தொடர்ந்து அமைதியான சூழ்நிலை ஏற்படுமா என்றெல்லாம் பொதுமக்கள் கவலைகொள்ள ஆரம்பித்துவிட்டனர்.

'பூஜை வேளையில் கரடி புகுந்ததுபோல்,' தேர்தலின் உச்சக்கட்ட வேளையில் நாட்டில் பாரிய வேலை நிறுத்தங்கள் தோன்றியுள்ளன. அரச மருத்துவர் சங்கம் நாடளாவிய ரீதியில் தனது தொழிற்சங்க நடவடிக்கையை ஆரம்பித்துள்ளது. நாடு முழுவதுமுள்ள அரச மருத்துவமனைகள் மூடப்பட்ட நிலையிலுள்ளன. பல்லாயிரக் கணக்கான நோயாளர்களின் உயிர் ஊசலாடும் நிலையிலுள்ளன. அவசர சிகிச்சைப் பிரிவும் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

நாடெங்குமுள்ள தொழில்நுட்பவியலாளர்களும் வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர். இதனால் முக்கியமான போக்குவரத்துச் சாதனமான ரயில்கள் ஓடவில்லை. நாட்டின் பலபாகங்களிலிருந்து கொழும்பு நகருக்கும் ஏனைய பகுதிகளுக்கும் ரயில்மூலம் சென்று கடமைகளிலீடுபடும் ஊழியர்கள் தத்தமது பணிகளுக்குச் செல்ல முடியவில்லை.

இத்தகைய சூழ்நிலையில் தொழிற்சங்க நடவடிக்கைகள் மென்மேலும் பரவி, வேறு பல தொழிற்கூடங்களுக்கும் விஸ்தரிக்கப்பட்டுவிடுமோ என்ற அச்சம் தோன்றியுள்ளது.

இதன் பயனாக அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயர்ந்தவண்ணம் உள்ளன.

### திட்டமிட்ட செயலா?

இவ்வாறான நெருக்கடிகளுக்கு மத்தியில் தேர்தலில் வாக்களிக்கப்போகும் வாக்காளர்களின் மனோநிலையில் நிச்சயமாகப் பெரும்பாதிப்பினை ஏற்படுத்தலாம் என்று அவதானிகள் கூறுகின்றனர். ஆளும் கட்சி வேட்பாளரான ஜனாதிபதி சந்திரிக்கா அவர்களுக்கு மக்கள் மத்தியில் செல்வாக்கினை இல்லாமல் செய்வதற்காகவே, திட்டமிட்டு இத்தகைய சூழ்நிலையினை சிலர் ஏற்படுத்தியுள்ளனரோ என்றும் கருத வேண்டியுள்ளது.

தேர்தலுக்கான நாட்கள் நெருங்க நெருங்க வேட்பாளர்களின் பிரசார மேடைகளில் ஒருவரை ஒருவர் காரசாரமாகத் திட்டித் தீர்க்கும் பாணி சற்று நாகரிகமற்ற தன்மையில் போய்க் கொண்டிருப்பதையும் அவதானிக்க முடிகிறது. ஆளும் தரப்பிலுள்ளவர்கள் எதிர்க்கட்சி வேட்பாளர்களை விட பல சிறப்பு வசதிகளைக் கொண்டிருப்பதனால் எத்தகைய முறையைக் கையாண்டும் தமது தரப்புக்கு வெற்றி கிட்ட வேண்டும் என்பதில் முனைப்பாகவுள்ளனர்.

சுவரொட்டிகள் ஒட்டுவதும், பதாதைகள் கட்டுவது போன்ற முறைகள் தேர்தல் சட்டத்தின்படி தடை செய்யப்பட்டுள்ளன. ஆனால் ஜனாதிபதி சந்திரிக்காவின் சார்பாக ஒவ்வொரு நாளும் பல்பல வகையான சுவரொட்டிகள் வெளிவந்த வண்ணமுள்ளன.

தேர்தல் ஆணையாளரின் பணிப்புரையின் பேரில், சட்டவிரோதச் சுவரொட்டிகளைக் கிழித்தழிக்கும் பணியிலீடுபடும் கூலித் தொழிலாளர்கள், தங்களுக்குரிய கடமைகளைச் செய்யும்போது, மாற்றுக் கட்சிக்காரர்கள் அவர்களைத் தாக்கித் துரத்தி அடிக்கும் சம்பவங்களும் நடந்துள்ளன.

### யாழ்குடாநாட்டில்

யாழ் குடாநாட்டில் அமைதியாகவும் நேர்மையாகவும் தேர்தல் நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையம் உத்தரவாதம் அளித்துள்ளது. ஆனால் வடபுலத்தில் விடுதலைப் புலிகள் தொடர்ந்து நடத்தி வரும் ஷெல் வீச்சுக்களும், கிராமங்களை தங்கள் வசமாக்க மேற்கொண்டுவரும் முயற்சிகளும் தேர்தல் ஆணையத்தின் உத்தரவாதத்துக்கு உறுதுணையாக நிற்கப்போவதில்லை என்று கருதத் தூண்டுகிறது.

வடக்கே தொடர்ந்து பல நாட்களாக புலிகளின் ஆக்ரோஷமான தாக்குதல்கள் இடம்பெற்று வருகின்றன. இருதரப்பினருக்கும் பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளன. தணிக்கை அமுலிலிருப்பதனால் உண்மை நிலையினை நாட்டு மக்கள் அறிந்துகொள்ள முடியாதிருக்கிறது. அரச வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமும், அரசினால் வெளியிடப்பட்டு, செய்தித் தாள்கள் மூலமும் பிரசுரமாகும் செய்திகளையும் பொதுமக்கள் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாதிருக்கிறது.

இந்நாட்டில் இதுவரை காலமும் நடைபெற்று வந்த பொதுத் தேர்தல்களில் வாக்கு மோசடிகள் நடைபெறாத சம்பவங்கள் இருந்ததில்லை. இம்முறை நடைபெறவிருக்கும் தேர்தலில் முன் எப்போதுமே இடம் பெறாத அளவு கள்ள வோட்டுச் சம்பவங்கள் மிகக் கூடுதலாகவே நடைபெறும் என்றும் அதேபோல் வன்முறைச் சம்பவங்களும் அதிகரிக்கவே செய்யும் என்றும் நோக்கர்கள் கருதுகிறார்கள். ■

## தமிழோசை நிகழ்ச்சி தடுக்கப்படுகிறதா?

நாட்டு நடப்புக்களை மூடி மறைப்பதற்காக அரசினால் மிகக் கடுமையான செய்தித் தணிக்கை கொண்டு வரப்பட்டது தெரிந்ததே.

ஆனால் இந்த வித தணிக்கைகள் வெளிநாட்டுச் செய்தி நிறுவனங்களுக்குப் பொருந்தாது.

பி.பி.சி. தமிழோசை நிகழ்ச்சிகள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்துக்கு ஊடாகவே ஒலிபரப்பாகின்றன. அரச வானொலிக் கூடாகவே பி.பி.சியின் தணிக்கையற்ற செய்திகள் மக்களைச் சென்றடைகின்றன. இதனால் ஆட்சியாளர்கள் பி.பி.சி வெளியிடும் செய்திகளைப் பற்றி தமது தேர்தல் பிரச்சார மேடைகளில் கண்டனம் செய்து வருகின்றனர்.

சென்ற 15.12.99 அன்று மட்டக்களப்பு ஏறாவூரில் நடந்த கூட்டமொன்றின்போது, போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி பி.பி.சி.யைக் கடுமையாகச் சாடினார். "பி.பி.சி. தற்போது ஸ்ரீலங்கா அரசுக்கு எதிராகச் செயற்பட்டு வருகின்றது!" என்று கூறினார்.

இதனிடையே சென்ற 14.12.99 அன்றிரவு இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்துக் கூடாக பி.பி.சி செய்திகள் ஒலிபரப்பப் படவில்லை. அதற்கு முந்திய தினம் யாழ் குடாநாட்டில் உக்கிரமடைந்துள்ள போர் நிலைமைகளைப் பற்றியும் படைமுகாம்கள் இரண்டைப் புலிகள் கைப்பற்றியிருந்ததையும் பி.பி.சி. தமிழோசை செய்தியாக வெளியிட்டது தெரிந்ததே. தொழில் நுட்பக் கோளாறு என்று சாக்குச் சொன்னபோதும், பி.பி.சி. நிகழ்ச்சிகளை வேண்டுமென்றே தடுத்திருக்கலாம் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள்.

உண்மையில் அன்று மாலைபெய்த பெருமழை, இடி மின்னல் காரணமாக வானொலி நிலைய ஒலிபரப்புக் கோபுரம் ஒன்றும் தாக்கப்பட்டதாகத் தெரிகிறது. இதனால்தான் அன்று தமிழோசை நிகழ்ச்சிகளை ஒலிபரப்ப முடியாமற்போய்விட்டதாக, கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர்.

## முஸ்லிம்களை வெளியேறுமாறு எச்சரிக்கை பிரசுரங்கள்?

கிழக்கு மாகாணத்தின் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் புலிகளின் பேரில் அநாமதேய எச்சரிக்கைப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

"எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன் முஸ்லிம்கள் கிழக்குப் பகுதியை விட்டு வெளியேற வேண்டும் அல்லது வரி செலுத்த வேண்டும். அல்லாவிடில் வெளியேற்றுவோம்!" என்று முஸ்லிம்களை அச்சுறுத்தும் விதத்தில் பிரசுரம் வெளியிடப்பட்டுள்ளது.

புலிகளின் கடிதத் தலைப்போ, அடிக்குறிப்போ இல்லாது வெறுமனே வெள்ளை, சிகப்பு, மற்றும் பச்சை நிறக் கடதாசிகளில் தட்டச்சு செய்யப்பட்டு போலியாக இத்துண்டுப் பிரசுரங்கள் உள்ளன.

பிக்கப் மற்றும் வெள்ளை நிற வேன் ஒன்றில் வந்த உள்ளூர் அரசியல் குழு ஒன்றின் இளைஞர்களே இப்பிரசுரங்களை வீதியில் வீசிவிட்டுச்சென்றதாக மக்கள் கூறுகிறார்கள்.

கிழக்கு மாகாணத்தில் அரசுக்கு ஆதரவு தெரிவிக்கும் பங்காளிக் கட்சியினரே முஸ்லிம் மக்களின் வாக்குகளை அரசுக்கு சார்பாக்கிக் கொள்ளும் விதத்தில் இத்தகைய சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது.

1994 ஆம் ஆண்டுத் தேர்தலின் போதும் இத்தகைய போலிப்பிரசுரங்கள் புலிகளின் பேரால் முஸ்லிம்களை அச்சுறுத்தும் விதத்தில் வெளியிடப்பட்டிருந்தது 'முரசு' வாசகர்கள் அறிந்ததே. முரசு அந்தக் கடிதத்தைப் பிரசுரித்து உண்மையை வெளிக் கொண்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

முஸ்லிம் மக்களின் வாக்குகளை சூறையாடும் விதத்தில் இந்தப் பிரசுரம் வெளியிடப்பட்டிருக்கலாம் என்று நோக்கர்கள் கருதுகிறார்கள். ■

### வாசகர்களுக்கு........

தவிர்க்க முடியாத காரணங்களினால் இம்முறையும் முரசு தாமதமாகவே உங்களிடம் வருகிறது. அடுத்த இதழான 338வது முரசு இம்மாதம் 30ம் திகதியன்றுதான் உங்கள் கரம் சேரும்.

-ஆசிரியர்-

## புலிகள்—புளொட் மோதல்!

### பொதுமக்கள் இருவர், புளொட் ஒருவர் பலி

மட்டக்களப்பு- வவுணதீவுப் பகுதியில் 13.12.99 அன்று காலை இடம்பெற்ற சம்பவமொன்றில் ஒரு 'புளொட் உறுப்பினரும், பொதுமக்கள் இருவரும் பலியாகினர்.

புளொட் உறுப்பினர்கள் வவுணதீவுக்கு வந்திருப்பதை அறிந்த புலிகள் தாக்குதல் நடாத்தினர். இதில் எஸ். சற்குணநாதன் (37) எனும் புளொட் உறுப்பினரும், இரு தரப்பு மோதலினிடையே அகப்பட்டு மா. சிவகுமார் (40) வே. அருளம்மா(45) எனும் இரு பொதுமக்களும் கொல்லப்பட்டனர்.

இதனிடையே மட்டக்களப்பு-ஞானசூரியம் சதுக்கத்தில் இடம்பெற்ற பிஸ்டல் தாக்குதலின்போது எஸ். ஜெகதீஸ்வரன் (23) எனும் வவுனியா கல்விக் கல்லூரி மாணவன் கொல்லப்பட்டார். இவர் மட்டக்களப்பு குருக்கள்மடத்தைச் சேர்ந்தவர். புலிகளின் பிஸ்டல் குழுவினரே இத்தாக்குதலை நடத்தியதாக பொலிஸார் சந்தேகிக்கின்றனர். இச்சம்பவம் 12.12.99 அன்று காலை நடந்தது. ■

## வாகரை, கஜுவத்த முகாம்கள் மீது தாக்குதல்!

### 11 புலிகள் 3 படையினர் பலி

மட்டக்களப்பு-வாகரை, கஜுவத்த ஆகிய படை முகாம்கள் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் இழப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

11 புலிகள் கொல்லப்பட்டுள்ளனர். 3 படையினரும் பலியாகினர். மேலும் 16 படையினரும் 3 பொதுமக்களும் காயமடைந்தனர். காயமடைந்த 3 பொதுமக்களும் தாக்குதலுக்குள்ளான இராணுவ முகாம்களில் ஊழியம் செய்பவர்களாகும்.

14.12.99 அன்று அதிகாலை 2.10 அளவில் ஆரம்பித்த தாக்குதல் பொழுது புலரும்வரை நீடித்தது. அருகிலுள்ள வாகரை முகாமிலிருந்து படையினர் கஜுவத்தை முகாமுக்கு உதவிக்குச் செல்வதைத் தடுக்கும் முகமாகப் புலிகள் அங்கும் 81 மி.மீ.மோட்டார்களை ஏவினர்.

சுமார் 15 மோட்டார் குண்டுகள் இவ்விதம் அங்கு விழுந்த போதிலும் வ்ாகரை முகாமுக்கு பெரிய அளவில் பாதிப்பெதுவும் ஏற்படவில்லை.

காலையில் அப்பகுதியில் தேடுதலில் ஈடுபட்ட படையினர், புலிகளின் 11 சடலங்களைக் கண்டெடுத்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினரிடம் ஒப்படைத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவத்திற்கு முன்னரும் பல தடவைகள் வாகரை முகாம்மீது புலிகளின் அச்சுறுத்தல் இருந்து வந்துள்ளது. அயலிலுள்ள காடுகளில் இருந்து புலிகள் 81 மி.மீ. மோட்டார்களால் சிறிய அளவில் தாக்கி வந்துள்ளனர். அவ்வாறான தாக்குதல்களால் இதுவரை 4 இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்தனர்.

வாகரை, கஜுவத்த முகாம்கள் மீது தாக்குதல் அச்சுறுத்தல்கள் இருந்து வந்ததால் அவை உஷார் நிலையிலேயே வைக்கப்பட்டிருந்தன.

இதனிடையே கடந்த ஆகஸ்ட் மாதம் வாகரையைத் தாண்டி கொமத்தலாமடு, கதிரவெளி ஆகிய இடங்களைக் கைப்பற்றியிருந்த இராணுவத்தினர் நவம்பர் மாதம் 09ஆம் திகதி மீண்டும் அந்த முகாம்களைக் காலி செய்தனர் என்பது தெரிந்ததே. ■

## ஆசிரியர்கள் தபால்மூலம் வாக்களிக்க வாய்ப்பில்லை

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆசிரியர்களுக்கான தபால் மூல வாக்களிப்பில் பல ஆசிரியர்கள் கலந்து கொள்ள முடியவில்லை. முழு மாவட்டத்துக்கும் மட்டக்களப்பு கல்விக் காரியாலயத்தில் மட்டுமே ஒரேயொரு வாக்களிப்பு நிலையம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தபால் மூலம் வாக்களிக்க விண்ணப்பித்திருந்த ஆசிரியர்கள் அனைவரும் குறிப்பிட்ட நேரத்துக்குள் வாக்களிப்பு நிலையத்துக்கு வந்து சேர்வதற்கு முடியாமற் போய்விட்டதென ஆசிரியர் சங்கம் ஆட்சேபனை தெரிவித்துள்ளது.

ஏனைய அரச திணைக்கள ஊழியர்களுக்கு பல்வேறு பகுதிகளில் வாக்களிப்பு நிலையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் ஆசிரியர்களுக்கு மட்டும் ஏன் இவ்வாறு பாரபட்சம் காட்ட வேண்டும் என்றும் ஆசிரியர் சங்கம் வினவுகிறது. புனித றமழான் நோன்பு காலமாகையாலும் க.பொ.த. (சா/த) பரீட்சைக் கடமையில் ஈடுபட்டுள்ளமையினாலும் பல ஆசிரியர்கள் பயணம் செய்ய முடியாத நிலையிலிருந்தனர். இதன் பயனாக அவர்கள் வாக்களிக்க முடியாமற் போய்விட்டது என ஆசிரியர் சங்கம் தேர்தல் ஆணையாளர், ஜனாதிபதி கல்வி அமைச்சகம் ஆகியவற்றுக்கு ஆட்சேபனைக் கடிதங்களை அனுப்பியுள்ளது. ■

## கிராம சேவகர் சுட்டுக் கொலை!

அக்கரைப்பற்று-திருக்கோவில் பிரதேச செயலகப் பிரிவின் தம்பிலுவில் கிராம சேவை உத்தியோகத்தரான மார்க்கண்டு தங்கராஜா (33) புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார். 13.12.99 அன்றிரவு இச்சம்பவம் நடந்துள்ளது.

சம்பவம் நடப்பதற்கு மூன்று நாட்களுக்கு முன்னர் கடமைக்காகச் சென்றவர் வீடு திரும்பவில்லை. பின்னர் வினாயகர்புரம் பாடசாலைக்குப் பக்கத்தில் சடலம் காணப்பட்டது. கைகள் கட்டப்பட்ட நிலையில் நெற்றியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட சடலத்தை மனைவி அடையாளம் காட்டினார். இறந்தவர் ஒரு பிள்ளைக்குத் தந்தையாவார். ●

## ஜனாதிபதி சந்திரிக்கா கூறுவது 'முழுப்பொய்'—அனுரா பண்டாரநாயக்கா

பிரதமர் திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா சில மாதங்களுக்கு முன்னர் உடல் நலக் குறைவாக இருந்தபோது, குடும்பத்துக்குச் சொந்தமான தங்க நகைகளை அடகு வைத்தே செலவு செய்யப்பட்டது, என்று ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்கா கூறியிருப்பது 'முழுப் பொய்' என்று அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்துள்ளார்.

"நாட்டின் உயர் பதவிகளில் தனது தாயும் தானும் இருந்த போதிலும் பொருளாதாரக் கஷ்டங்கள் தமக்கும் இருப்பதாக பொது மக்களிடம் கூறி, அவர்களுடைய அனுதாபத்தைச் சம்பாதிக்கவே இத்தகைய பொய்யான கதைகளை எனது சகோதரி கூறிவருகிறார். இதனால் எமது குடும்பத்துக்கே பெரும் அபகீர்த்தியை அவர் தேடித் தருகிறார்." இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சகோதரருமான அநுரா பண்டாரநாயக்கா அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கூறியுள்ளார்.

தமது குடும்பத்துக்குச் சொந்தமான நகைகளை அடகு வைத்தே திருமதி பண்டாரநாயக்காவின் மருத்துவச் செலவுகளுக்குப் பணம் திரட்டப்பட்டதாக ஜனாதிபதி சந்திரிக்கா ரூபவாஹினி தொலைக்காட்சியில் தெரிவித்ததாக அனுரா கூறினார். தங்கள் குடும்பத்துக்கு பரம்பரைச் சொத்துக்களே ஏராளமாக இருக்கும்போது, நகைகளை அடகு வைக்க வேண்டிய அவசியமே கிடையாது என்றார்.

நாட்டின் ஜனாதிபதியின் தாயாரும் முன்னாள் பிரதமரின் மனைவியும் தற்போதைய பிரதமருமான திருமதி பண்டாரநாயக்காவுக்கு மருத்துவச் செலவுக்கே பணம் இல்லை என்றால், நாட்டின் நிதிநிலமையே படுமோசமான நிலையில் உள்ளது என்பது புலனாகின்றது. நாட்டின் பொருளாதாரம் சீரிய முறையில் நிர்வகிக்கப்படவில்லை என்பதனையும் இக்கூற்று எடுத்துக்காட்டுகிறது, என்றார் திரு அநுரா பண்டாரநாயக்கா.

அநுரா தொடர்ந்து பேசும்போது, "எனது சகோதரியின் உயிருக்கே ஆபத்து ஏற்பட்டிருப்பதால், அலரி மாளிகையின் நான்கு சுவர்களுக்குள் அடைந்து கிடக்க வேண்டியிருப்பதாகவும் கூறுகிறார். ஏனையோர் அனுபவிக்கும் வாழ்க்கையைத் தன்னால் நிம்மதியாக அனுபவிக்க முடியாதிருப்பதாகவும் சொல்கிறார். எனது சகோதரியின் மீது நான் கொண்டுள்ள பாசத்தின் பேரால் கூறுகிறேன். அவருடைய துன்பதுயரங்களை நீக்கி வைக்க நான் ஆசைப்படுகிறேன். ஆகவே இம்மாதம் 22ம் திகதியன்று அவரை அலரிமாளிகையிலிருந்து வெளியே அழைத்துச் செல்லவும் சித்தமாக இருக்கிறேன் என்று அவருக்குத் தெரியப்படுத்த விரும்புகிறேன்."

இவ்வாறு அநுரா பண்டாரநாயக்கா தெரிவித்தார். ■

## சந்திரிக்காவின் சுவரொட்டி ஒட்டியவருக்குத் தண்டனை!

மட்டக்களப்பு-ஏறாவூர் 5ஆம் குறிச்சித் தமிழ்ப் பகுதியில் ஜனாதிபதி சந்திரிக்காவின் தேர்தல் சுவரொட்டிகளை ஒட்டிக் கொண்டிருந்த தமிழ் வாலிபர்- இளைஞர் குழுவொன்றினால் மரத்தில் கட்டி வைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். இச்சம்பவம் 10.12.99 அன்று இரவு இடம்பெற்றது.

சந்திரிக்காவின் உருவப்படத்தைத் தாங்கிய தேர்தல் சுவரொட்டிகளை அந்த வாலிபர் இரகசியமாக ஒட்டிக்கொண்டிருந்ததைக் கேள்வியுற்ற இளைஞர் குழுவொன்று அங்கு விரைந்து சென்று சம்பந்தப்பட்ட இளைஞரைப் பிடித்து தாக்கியதுடன், அந்நபரை மரத்திலும் கட்டிவைத்தனர். அவருக்குப் பக்கத்தில் 'தேசத் துரோகி' என்று எழுதிய அறிவித்தலையும் தொங்கவிட்டிருந்தனர்.

தான் கூலிக்கே சந்திரிக்காவின் பிரசுரங்களை ஒட்டும் வேலைகளில் ஈடுபட்டதாக சம்பந்தப்பட்ட வாலிபர் கூறினார்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆட்சியாளர் சம்பந்தப்பட்ட தேர்தல் வேலைகளில் தமிழ்ப் பொதுமக்கள் எவரும் தாமாக முன்வந்து ஈடுபடவில்லை. சிலர் கூலி வேலைக்கு அமர்த்தப்பட்டிருக்கிறார்கள். சோதனைச் சாவடிகள் உள்ள இடங்களில் மாத்திரம் ஆட்சியாளரின் தேர்தல் சுவரொட்டிகள் காணப்படுகின்றன. வேறெந்த தமிழ்ப்பகுதியிலும் ஆட்சியாளரின் சுவரொட்டிகள் காணப்படவில்லை என்று கூறப்படுகிறது.

## புலிகளால் வாகனங்கள் கடத்தல்


அக்கரைப்பற்று-ஆலையடிவேம்பு பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரமொன்று புலிகளால் கடத்தப்பட்டுள்ளது.

பட்டப் பகலில் உழவு இயந்திரத்தைக் கடத்திய புலிகள் அவற்றைத் தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குக் கொண்டு சென்றனர். கடந்தவாரம் இச்சம்பவம் இடம்பெற்றது.

இதனிடையே தங்களுக்கு வழமையாகக் கிடைத்து வரும் வரித் தொகை கிடைக்கவில்லையென்பதனால் சாராய லொறியொன்றைப் புலிகள் சமீபத்தில் கடத்திச் சென்றிருந்தனர். மட்டக்களப்பு-வந்தாறுமூலையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இதற்கு முன்னரும் அரச வடிசாலைக் கூட்டுத் தாபனத்திற்குச் சொந்தமான சாராய லொறியொன்றைப் புலிகள் கடத்தியிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ■

# 1வது பிறந்தநாள் வாழ்த்து



**ர. நிதுஷன்** | **10.12.1999**

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த ரவிராஜ்-சுசீலா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ர.நிதுஷன் தனது முதலாவது பிறந்தநாளை 10.12.1999 அன்று ST.GALLEN, SWISSஇல் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார். இவரை அன்பு அப்பா, அம்மா, அக்கா விபுஷா, இலங்கையிலிருக்கும் அப்பப்பா, அப்பம்மா, ஜேர்மனியிலிருக்கும் அம்மப்பா, அம்மம்மா, அஜந்தா சித்தி, சுவிஸிலிருக்கும் பெரியப்பா, பெரியம்மா, விபியன் அண்ணா, விபித்திரா அக்கா, அனுசா சித்தி, இந்திரன் சித்தப்பா, துவிஷா அக்கா, கொலண்டில் வசிக்கும் பத்மன் சித்தப்பா, இலண்டனில் வசிக்கும் தீசன் மாமா, பாரிஸிலிருக்கும் தஞ்சி சித்தி, கணேசன் சித்தப்பா, யூலி அக்கா, இலங்கையில் வசிக்கும் வதி அம்மம்மா, அன்பு பூட்டி அனைவரும் கொக்குவில் மணியர்பதி முருகன் அருள்பெயர் பெற்று சீரும், சிறப்புடனும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

*தகவல்: வீ.ப. பரணீதரன் (கொழும்பு)*


## மலையாள மாந்திரிகம்





மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே! இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது, பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலேயும் இன் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.

தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

**தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி**
**Dr.P.K. SAAMI J.P.G.A.N&JP**
**SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM**
**NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.**

நுவரெலியாவிலும் வழமையான சேவைகள் நடைபெறுகின்றன.

வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி
Fax-00941342464.
Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
342463-344831



# சிந்தித்துப் பாருங்கள்

நோவு, வலி ஏற்படுகின்றபோது வைத்தியரின் ஆலோசனையின் படி, மருந்து வில்லைகளை பாவிப்பதே சிறந்தது. எனினும், எல்லாவகையான வலி, நோவுகளுக்கும் மருந்து வில்லைகளை உட்கொள்வது சிறந்ததா?

மரம், செடி, வேர், மலர், பட்டை ஆகியவற்றின் சாரைக்கொண்டு உற்பத்தி செய்யப்படும் **சித்தாலேபயை** தடவி வலி, நோவுகளில் இருந்து நிவாரணம் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை இலங்கையில் இலட்சக்கணக்கான **சித்தாலேப** பாவனையாளர்கள் உறுதி செய்துள்ளனர்.

இலங்கை சுகாதாரத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற **சித்தாலேப** ஐ.எஸ்.ஓ. 9002 (ISO 9002) சர்வதேச தர நிர்ணயத்தின் மேற்பார்வையின் கீழ் உற்பத்திசெய்யப்படுகின்றது.

**சித்தாலேப**

ஹெட்டிகொட இண்டஸ்ரீஸ் (பிரைவெட்) லிமிட்டெட்.
33/3, ஸ்ரீ தர்மாராம வீதி, இரத்மலான.
டெலிபோன்: 736910 பெக்ஸ்: 735465

TALENT A&M


# பிறந்தநாள் வாழ்த்து

**செல்வி அனுஜா** | **27.11.99**

திரு. திருமதி நடராஜா- வசந்தி அவர்களின் மூத்த புதல்வி **செல்வி அனுஜா** தனது 14வது பிறந்த தினத்தை 27.11.99 அன்று திருமலை பாரதிபுரத்தில் தனது வீட்டில் கொண்டாடினார். அவரை, அப்பா, அம்மா, அப்பம்மா, தம்பிமார்கள், தங்கை மற்றும் பெரியமாமா சந்தனம் குடும்பம், வசந்தா மாமி, யேசுதாஸ் மாமா, ரிசி, யுகன், விஜிதா, பெரியம்மா குடும்பத்தினர், கோபால் குடும்பத்தினர், திலக் மாமா, பாஸ்கரன், புவனேஷ், கப்பல் கண்ணா, மற்றும் ஜேர்மன் சிவா சித்தப்பா, வள்ளி சித்தி, கஜன், சங்கர், பபின், முத்தழகு, ரஜினி, கிருஸ்லா, பிரான்ஸ் புவனா, சித்தப்பா, வளர்மதி சித்தி, தனுஜா, சரண்யா, சருஜன், லண்டன் குரு சித்தப்பா, ஆகியோர் பல்லாண்டு வாழ வாழ்த்துகிறோம்.

தகவல்: இலண்டன் குரு.


## ஜேர்மன்-தமிழ் அகராதி

- ☆ 30 ஆயிரத்திற்கும் அதிகமான ஜேர்மன் மொழிச் சொற்களுக்கான தமிழ் மொழிச் சொற்கள்.
- ☆ இலக்கண விளக்கம்.
- ☆ புதிய அணுகுமுறைமையிலான சரியான உச்சரிப்பு விளக்கம்.
- ☆ மாதிரிக்கடிதங்கள்.

தொடர்பு கொள்ளவும்-

K.Chandrasegaran (Swiss) 01/461 57.49, 01/241 16 30
Natel 079/285 83 09, Kanonengasse 19,8004 Zurich
V.Sivanesarajah (Swiss) 01/492 02 61

தமிழ் விற்பனை நிலையங்களிலும் பெற்றுக் கொள்ளலாம்.



## CIMA ASIAN TAKE AWAY

Indische Spezialitäten

இந்திய-இலங்கை அறுசுவை உணவுகளை சுவைத்து மகிழ்ந்திட நாடுங்கள்
CIMA ASIAN TAKE AWAY
Kanonengasse 19, 8004 Zurich. Zurich Kaserne யின் பின்புறம்

தினசரி சைவ-அசைவ உணவுகள்

புரியாணி, தந்தூரி வகைகள், சப்பாத்தி

கொத்து ரொட்டி, நாண், சமோசா மற்றும்

அனைத்துவகை தமிழ் உணவுகள்

Take away & Party Service

**CIMA ASIAN TAKE AWAY**

Kanonengasse-19,
8004 Zurich.
Tel: 01/241 16 30 Natel 079/ 285 83 09


## மாணிக்கவாசகர் சிறுவர் பராமரிப்பு இல்லம்

MANIKKAVASAGAR BOYS HOME, SANTHIVELI, MUROKKOTTANCHENAI, E.P., SRI LANKA. Regd No KP/DS/SS/03



யுத்தத்தினால் தாய், தந்தையரை இழந்த சிறுவர்களைப் பராமரிப்பதற்காக நிதியுதவி கோரல்

எம் அருமை தமிழ்ச் சகோதரர்களே! கருணை உள்ளங்களே! இவ் இல்லம் கிழக்கு மாகாணத்தில், யுத்தக் கெடுபிடியிலகப்பட்டு பெற்றோரை இழந்து நிர்க்கதியான அனாதைச் சிறுவர்களைப் புகலிடம் கொடுத்து அரவணைத்து பேணிக்காத்து வருகின்றது. நாளுக்குநாள் அதிகரித்துவரும் இவர்களது உணவு, உடை, கல்வி, சுகாதாரம் போன்ற அடிப்படைத் தேவைகட்கான செலவுகளை ஈடுசெய்வதில் பெரும் தளம்பல் நிலை ஏற்படுகிறது. எனவே இக்குழந்தைகளின் வளர்ச்சிக்கும் அவர்களது எதிர்கால மேம்பாட்டிற்கும் தயாள சிந்தை கொண்டவர்களது உதவியை வேண்டுகிறோம்.

இலங்கையிலும் வெளிநாடுகளிலும் வசிக்கின்ற அன்பர்கள், கனவான்கள், அறவாளர்கள் இக்குழந்தைகளின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு தங்களால் இயன்ற நிதியுதவிகளை கீழேயுள்ள எமது நடைமுறைக் கணக்கிற்கு அனுப்பி, எமது பணி தளப்பமில்லாது தொடர்வதற்கு உதவுமாறு மிக பணிவுடன் வேண்டுகிறோம்.

இங்குள்ள பிள்ளைகளின் ஒருநாள் உணவுக்கான செலவு ரூ.600 ஆகும். இறந்தோரின் நினைவாக சிரார்த்த தினத்தன்றோ அல்லது உங்கள் அன்புக் குழந்தைகளின் பிறந்த நாட்களிலோ ஒருநாள் உணவை வழங்கலாம்.

இக் குழந்தைகளின் மனநிறைவில் உங்கள் வாழ்வு சிறக்கும். உதவிபுரிய விரும்பி நீங்கள் அனுப்பி வைக்கும் பணத்துக்கு நன்றியுடன் பற்றுச்சீட்டு அனுப்பி வைக்கப்படும்.

நன்றியுடன்
*திரு.க. நாகலிங்கம் J.P. (இல்லத் தலைவர்)*

MANIKKAVASAGAR BOYS HOME
AC.NO. 1955
PEOPLES BANK, CHENKALADI.


## மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**


50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349



## TINY TOTS' MONTERSSORI

USING AMI MONTESSORI METHOD AND PRE SCHOOL METHOD

2000ம் ஆண்டுக்கான அனுமதிகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.



- ✦ முதலாவது மொழி ஆங்கிலம். இரண்டாவது மொழி தமிழ்/ சிங்களம்
- ✦ குறிக்கப்பட்ட அனுமதிகள் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.
- ✦ வயதெல்லை 21/2 வருடம் முதல் 4 வயது வரை

ACA 55, St. Lucia's St, Kotahena.
Tel : 335287



வீடியோ
போட்டோ

ஸ்டூடியோ
**சாயா**
Col-6, P-594492


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு ★★★ 13 . 04 . 19 33 ★★★



உதிர்வு ★★★ 21 . 12 . 19 98 ★★★

**காத்தமுத்து கனகசபை (மூதூர்)** / திதி 10.12.1999


அன்பிற்கும் பண்பிற்கும் பாசத்திற்கும்
உறைவிடமாய் விளங்கிய எமது தெய்வமே!
எம் மனங்களில் நீங்காது நிறைந்திருக்கும்
எம் குடும்ப விளக்கே! உங்கள் ஆத்மா
சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால்
துயருறும் அன்பு
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*தகவல்: க. கஜேந்திரா (மகன்)*
*36, பாரதி வீதி, திருகோணமலை. T.P. 026201112*

## 3ம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1975 ★ 03 ★ 30



விண்ணில் 1996 ★ 11 ★ 23

**கனகரெட்ணம் துஷ்யந்தன்**

பண்புக்கு அடைக்கலமாய் பாரினிலே
உதித்திட்ட பொக்கிஷமே என் மகனே!
பாசத்தைக் காட்டி எம்மையெல்லாம்
பரிதவிக்க விட்டு பிரிந்துவிட்டாய்!
தேசத்தை விட்டு நீ சென்று
மூன்றாண்டுகள் சென்றிடினும்
நேசத்தால் உன்னை என்றும்
நெஞ்சினிலே தீபமாய் ஏந்துகிறோம்
உன் நினைவால் நாம் என்றும்!

**உன் பிரிவால் வாடும்**
**அப்பா, அம்மா, தம்பிமார், தங்கை, உற்றார், உறவினர், நண்பர்கள்.**

# இறுதிநேரத் தேர்தல் வியூகம்

ஜனாதிபதித் தேர்தல் தன் உச்சக் கட்டத்தை நெருங்கிவிட்டது. இதில் குதித்துள்ள கட்சிகளின் பிரச்சார முழக்கங்கள், கூக்குரல்கள், கெஞ்சல்கள், கதறல்கள், ஊளைகள், ஒப்பாரிகள் எல்லாம் அடித்தொண்டை வற்றும் நிலையைத் தாண்டிவிட்டன. சில பெருமுச்சுக்களாகவும் சேடங்களாகவும் ஈனஸ்வரங்களாகவும் தொய்ந்து தேய்ந்து கேட்கின்றன.

பல்வேறு கட்சிகளும் வேட்பாளர்களும் இப்பெரும்பதவிக்கான பகீரதப் போட்டியில் குதித்திருந்தாலும் இப்போட்டியின் விறுவிறுப்பு இரு முனைகளின் இழுபறியில் மட்டுமே மையப்பட்டு நிற்பதால் ஏனையவை அதிக கவனத்தை ஈர்ப்பவையாக இல்லாது விலகுண்டு சென்றுவிட்டன.

சந்திரிக்காவா, ரணிலா என்ற கேள்வியே இத் தேர்தலுக்கான ஒரேயொரு கேள்வியாக நிலை பெற்றுவிட்டது. அதுவே இன்றைய யதார்த்தமென்பது பால்குடிக்கும் பச்சைக் குழந்தைக்கும் தெரிந்த விடயம்.

இதில் போட்டியிடும் மற்றவர்கள், ஒன்றில் பிரபலயத்துக்காகப் போட்டியிடுகிறார்கள்; அல்லது தமது கொள்கையை வலியுறுத்திப் போட்டியிடுகிறார்கள் அல்லது பொதுத் தேர்தலில் தமது வாக்குகள் சிதறிப் போய்விடாதிருப்பதை உறுதிப்படுத்தப் போட்டியிடுகிறார்கள். அதேவேளை அமையப்போகும் ஆட்சிக்கு தமது கட்சியின் முக்கியத்துவத்தை உணர்த்துமுகமாகவும் போட்டியிடுகிறார்கள். இன்னும் சிலர் இரு பிரதான கட்சிகளின் வெவ்வேறு வாக்கு வங்கிகளை உடைப்பதற்காக ஒன்றுக்கொன்று எதிராகத் திட்டமிட்டு தேர்தலில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். ஆனால் தேர்தல் கயிறிழுப்பில் அம்மையாரும் அண்ணலும்தான் இருபுறத்திலும். மற்றையோர் ஏதோ ஒரு விதத்தில் இவ்விரு புறங்களின் பலம், பலஹீனங்களைப் பாதிப்பவர்களாக மட்டுமே இருக்க முடியும்.

இந்நிலையில்தான் வெற்றி வாய்ப்புக்கான அனைத்து எத்தனங்களும் இருவராலும் கையாளப்படுகின்றன. இது அம்மையாரைப் பொறுத்தவரை வாழ்வா சாவா என்ற போராட்டம். ஆனால் அண்ணலுக்கு அப்படியில்லை. 'வந்தால் மலையாச்சு, போனால் மயிராச்சு' என்ற கணக்குத்தான்.

அம்மையாரோ அரசியல் சிகரத்தின் உச்ச நிலையில் இருந்துகொண்டு இக் கயிற்றை இழுக்கிறார். அவர் வென்றால் அதே நிலையில் நிற்பார். வீழ்ந்தாலோ கவிழ்ந்து பள்ளத்தில் வீழ்வார். அதனால் இது அவரைப் பொறுத்தவரை தன்னைத் தக்கவைக்கும் போராட்டம்.

அண்ணலோ அவ்வாறில்லை. அவர் இப்போதே பள்ளத்தில்தான் இருக்கிறார். அதனால் வீழ்வது பற்றிய பயம் அவருக்கில்லை. அவரைப் பொறுத்தவரை இது ஒரு முயற்சியே. வென்றால் மலை!

இந்த இரு நிலைகளிலும் அதிக சௌகரியம் வாய்ந்த நிலை ரணிலுக்கே. ஏனெனில் அவரைப் பொறுத்தவரை எதையும் பேசலாம். என்னவித வாக்குறுதியையும் அள்ளி வீசலாம். எதற்கும் பொறுப்புச் சொல்லத் தேவையில்லை. அவரைப் பொறுத்தவரை வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா என்ற ஒரு கேள்வி மட்டுமே உள்ளது. ஆனால் சந்திரிக்காவுக்கோ, இரண்டு கேள்விகள் உள்ளன. அதாவது அவர் 'வாக்குறுதிகளை நிறைவேற்றுவாரா' என்பது மட்டுமல்ல 'வாக்குறுதிகளை நிறைவேற்றினாரா' என்ற மற்றொரு கேள்வியும் சேர்ந்தே உள்ளது.

அதனால் இந்தத் தடைதாண்டி ஓட்டத்தில் அம்மையாருக்கு இரண்டு தடை.

அதேவேளை அவர் ஓர் அதியுயர் அரச பதிவியில் இருப்பவர், நமது ஆட்சியின் சகல செயற்பாடுகளுக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர், நாட்டு மக்களின் நன்மை தீமைகளுக்கான பங்கை வகிப்பவர். அதோடு உள்நாட்டு யுத்தமொன்றைக் கடுமையாக முகம் கொடுக்கும் அரசு என்ற வகையில் அந்த யுத்தத்தைக் கையாளும் முறை சரியா? அதிலிருந்து நாட்டை மீட்பதற்கான அவரது முயற்சி என்ன? யாவற்றையும் விடப் பிரதானமாக இந்த யுத்தத்தின் மூலகாரணமாக இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர் மேற்கொண்ட அரசியல் அணுகுமுறை ஏற்கக்கூடியதா? என்ற கேள்விகளுக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இருக்கிறார்.

அதனால்தான் அம்மையாரின் முகம் 'சீரியஸ்' முகமாக இருக்கிறது. அண்ணலின் முகமோ 'விளையாட்டுப் பிள்ளைபோல் உள்ளது. அவரது பேச்சுக்களும் அவ்வாறே.

ஆனாலும் ரணில் மீதும் கேள்விகள் இல்லாமல் இல்லை. அவருக்கும் இதில் பெருத்த சங்கடங்கள் உள்ளன. அப்படியான ஒரு பிரதான சங்கடம் யாதெனில், அம்மையாரின் முகம் இப்போது தெரிந்த முகம், ஆனால் ரணிலாரின் முகமோ தெரியாத முகம்.

'தெரியாத பேயைவிட தெரிந்த பேய் பரவாயில்லை' என்று கணிக்கப்படும் அபாயத்தையும் அவர் எதிர் நோக்குகிறார். உண்மையில் அவரது செயற்பாடுகளால் அந்தக் கணிப்புக்கான வாய்ப்புகளையே கூட்டிச் செல்கிறார். காரணம் அவர் அள்ளியெறியும் வாக்குறுதிகளே மறுபுறத்தில் அவருக்கான பொறிகளாக மாறிவருகின்றன. அதனால் ரணில் தன் மீதான நம்பகத்தன்மையைக் கட்டியெழுப்பத் தவறி வருகிறார்.

கடந்த பொதுத் தேர்தலில் சந்திரிக்காவுக்கான வெற்றி வாய்ப்பை உந்தித் தள்ளிய காரணிகளில் பிரதான அம்சம் இத்தகைய ஒரு நம்பிக்கை வடிவத்தை அவர் நிலைநிறுத்தியது. அதனால் அவர் 'கரிஸ்மா' என்று ஆங்கிலத்தில் கூறப்படும் ஆர்கர்ஷணத்தை ஈட்டிக் கொண்டிருந்தார்.

ஒரு தலைவருக்கு அவசியமான அடிப்படையாக இருக்கும் இத்தன்மையை ரணில் கொண்டிருக்கவில்லை. அதை உருவாக்கவும் சிரத்தை காட்டவில்லை.

ஆர்கஷணத் தன்மை பெற்ற தலைவர்களிடம் மக்கள் 'இவன்தான் என் தலைவன்' என்று சொல்லக்கூடிய ஒரு காந்தத் தன்மை இருக்கும். 'என்னை நம்பிப் பின்தொடருங்கள்' என்றுணர்த்தும் தற்துணிவும், அபயமளிக்கும் தெய்வீகத் தன்மையும் அதில் கலந்திருக்கும். அது பக்தியாகவோ, கவர்ச்சியாகவோ, பிரமிப்பாகவோ, விசுவாசமாகவோ மாந்திரீக விளைவொன்றை மக்கள்மீது செலுத்துவதாய்த் திகழும்.

அரசியல் தலைவர்களாக இருந்தாலும் அல்லது மதத் தலைவர்களாக இருந்தாலும் சித்தாந்தத் தலைவர்களானாலும் இத்தகைய காந்த வசீகரம் அவர்களிடத்தில் இருக்கும்.

ஆனால் ரணிலிடம் அது இல்லை. ஏற்கெனவே இல்லாத இவ்வியல்பை அவர் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பயன்படுத்திக் கட்டியமைத்திருக்கலாம். ஆனால் அதையும் அவர் தவறவிட்டுவிட்டார். பதிலாக அதைச் சிதைக்கும் வகையிலேயே தன்னை வெளிப்படுத்தி வருகிறார்.

சந்திரிக்காவைப் பொறுத்தவரை எவரும் பெரிய அளவில் தெரிந்திராத குடும்பப் பெண்ணாகவே முதலில் இருந்தார். அவரது கணவன் விஜய குமாரதுங்கவே அரசியலில் பிரகாசித்து வந்தார். அவரின் படுகொலையை அடுத்துகூட சந்திரிக்கா அரசியலிலிருந்து ஒதுங்கியவர்போல் வெளிநாடு சென்றுவிட்டார். அப்படியிருந்த அவர் சரியான சந்தர்ப்பத்தில் அரசியலில் பிரவேசித்து தன் மீதான பாரிய எதிர்பார்ப்பை வளர்த்து நம்பிக்கைக் குரியவராக உயர்ந்து கொண்டார். ஆனால் அவர்மீது இப்போது உள்ள கேள்வி, அந்தத் தருணத்தில் பெற்ற நம்பிக்கையை எவ்வளவுதூரம் தற்போது தக்க வைத்துக் கொண்டிருக்கிறார் என்பதே.

ஆனால் ரணிலோ தனக்கு கிடைத்த ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் பதவியையும், எதிர்க் கட்சித் தலைவர் வாய்ப்பையும் தன்மீதான நம்பிக்கையைக் கட்டியெழுப்பச் செவ்வனே பயன்படுத்தத் தவறியிருந்தார். எனினும் இப்போது வந்துள்ள ஜனாதிபதித் தேர்தல் வாய்ப்பையும் அத்தகைய ஒரு 'மாபுருஷராக' தன்னை நிலைநாட்டிக்கூடிய முறையில் பயன்படுத்தவில்லை.

அதற்குப் பதிலாக அவரது எத்தனங்கள் வெறுமனே சந்திரிக்காவுக்கு அபகீர்த்தி ஏற்படுத்துமுகமானதாகவே வடிவமைந்துள்ளன.

ரணில் இத் தேர்தலில் எடுத்துக் கொண்டுள்ள உத்திகள் மூன்று அடிப்படைகளைக் கொண்டன.

ஒன்று அதிகாரத்திலிருக்கும் அம்மையாரை இழிவுபடுத்தி அவரது ஆகர்ஷணத் தன்மையைச் சிதைப்பது.

அடுத்தது தனது பக்கம் மக்களைக் கவருவதற்கான வகை தொகையான தேர்தல் வாக்குறுதிகளை அள்ளி வீசுவது.

மூன்றாவது இத் தேர்தலில் ஒருவகையில் நிர்ணயமான காரணியாக அமையக்கூடிய சிறுபான்மையினரின் ஆதரவைக் குறிவைத்த சில அரசியல் தந்திரங்களை மேற்கொள்ளுவது.

அம்யைாரை இழிவு படுத்துவது என்ற முனைப்பில் அவர் ஒரு கட்டம்வரை ஏறுமுகமாகச் சென்றுகொண்டிருந்தார். ஆனால் அதன் சுவைக்கு அவரே பலியாகி சில கட்டங்களில் இக்கட்டுக்குள் சிக்கிக் கொண்டார். அதற்கான சிறந்த உதாரணம்தான், அவர் "நான் ஆட்சிக்கு வந்தால் சந்திரிக்காவை பிரபாகரனிடம் கொடுப்பேன்" என்று பேசியது. இப்பேச்சு சிங்கள மக்களிடையே எழுப்பக்கூடிய மன உணர்வுகளைக் கருதாமல் அவர் உற்சாக மிகுதியில் தன்னை மறந்து பேசத் தொடங்கி விட்டார். இதை வசதியான வாய்ப்பாகப் பற்றிக் கொண்ட பொதுஜன ஐக்கிய முன்னணியோ பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சியாவற்றிலும், பெருத்த ஒப்பாரியாகக் காவித்திரிந்தன.

## விளையாட்டுப் பிள்ளை

களம் அறியாது ஆடும் விளையாட்டு வீரன் போல-அல்ல 'விளையாட்டுப் பிள்ளை போல'-அவர் தேர்தல் மேடையில் முட்டாள்தனமாக நடந்துகொண்டார். இதேபோல்தான், தான் ஆட்சிக்கு வந்தால் வடக்கு கிழக்கு நிர்வாகத்தை 2 வருடங்களுக்கு புலிகளிடம் கொடுப்பதாக வெளிவந்த செய்தியும். இப்படி அவர் சொன்னது உண்மையா பொய்யா என்பது தெரியவில்லை.

ஆனால் அவரோ, அப்படிச் சொல்லவில்லை என மறுத்தார். மறுத்ததுடன் நின்றுவிடாமல் அப்படிச் செய்தால் என்ன தவறு என்று கேள்வியும் எழுப்பினார். அதனால் இவர் மறுக்கிறாரா அல்லது அதே எண்ணத்தைத்தான் கொண்டிருக்கிறாரா என்ற மயக்கத்தையே சிங்கள மக்களுக்கு ஏற்படுத்தியிருந்தார். இதை விடுமா ஆளும் கட்சி. இந்தக் கதையோடு சற்று இனவாத வாடையைக் கலந்து 'ரணில் நாட்டைப் பயங்கரவாதிகளுக்குக் தாரைவார்க்கப் போகிறார்' என்ற பீதியை முடிந்தவரை கிளற முயன்றனர். அதேவேளை இதனால் ரணில் சிறுபான்மையினரைத் தன்னும் சரிவரக் கவர்ந்தாரா என்பதும் கேள்விக் குரியதே. ஏனெனில் அவ்வாறு அவர் வழங்குவதற்கான விடயம் எதுவும் 'தட்டில்' வைக்கப்படவில்லை.

இதைவிட அடுத்ததாக ரணில் அள்ளி வீசும் வாக்குறுதிகள் நம்பக்கூடியதாக இல்லாதிருக்கின்றன. அவர் நினைத்த நினைத்ததையெல்லாம் பேசிக்கொண்டு செல்கிறார். பலசமயங்களில் அவை நகைப்புக்கிடமானவையாக உள்ளன. ஓரிடத்தில், வெற்றிலை போடுபவர்களைப் பார்த்து "நான் ஆட்சிக்கு வந்தால் நீங்கள் வெற்றிலை போடத் தேவையில்லை; நான் உங்களுக்கு சுவிங்கம் தருவேன் " என்றார். இது முன்னர் ஒருகாலத்தில் ஃபிரான்ஸ் இராணி பட்டினியில் வாடிய மக்களிடம் "பாண் இல்லையென்றால் கேக்கைச் சாப்பிடுங்கள்" என்று கூறியதைப் போல் கேலிக்கிடமானதாக உள்ளது. கூட்டங்களில் முன் வரிசையிலுள்ள யாராவது ஒரு பையனைப்பார்த்து கையில் என்ன கட்டியிருக்கிறாய்? கடிகாரமா? பொறு, நான் வந்தால் உங்களுக்கு 'பிரஸ்லெட்' (தங்க வளையம்) தருகிறேன் என்கிறார்.

விவசாயிகளிடம் அவர்கள் கமம் செய்யும் போது கட்டும் கொடுக்கை (கோவணத்தை) இனிக் கட்டத் தேவையில்லையென்றும் தான் வந்ததும் அவர்களுக்கு கால்சட்டை கொடுப்பாரென்றும் கூறுகிறார்.

இளைஞர்களுக்குதான் 'டெக்கும் டீவியும் கொடுப்பாராம் என்கிறார்.

இவ்வகைப் பேச்சுக்கள் அவரை, புத்தி பேதலித்து உளறுபவராகத்தான் சித்தரிக்கின்றன.

கடந்த தேர்தலில் சந்திரிக்கா அம்மையார் இவ்வாறுதான் பாணின் விலையை மூன்று ரூபாய் ஐம்பது சதமாக்குவேன் என்றார். அதை அமுல் படுத்தவும் முயன்றார். ஆனால் அவரால் அது சொற்பகாலத்துக்கே முடியுமாய் இருந்தது.

அப்படியிருக்க ரணில் உளறும் இத்தகைய விடயங்கள் எத்துணை அபத்தமானவை என்பதை மக்கள் சுலபத்தில் புரிந்துகொள்வர். இதனால் விளையும் ஆபத்து என்னவென்றால், அவர் சீரியஸாகக் கூறும் மற்றைய சில விடயங்களும் பொய் வாக்குறுதிகளே என்ற எண்ணத்தை இவை ஏற்படுத்திவிடும்.

அந்த வகையில் அவர் ஜி.எஸ்.ரி வரியை நீக்கப்போவதாகவும் பல்கலைக் கழக நுளைவுப் பரீட்சைத் திட்டத்தை இல்லாது செய்யப் போவதாகவும் கூறுவனகூட அர்த்தமுள்ளவையாகத் தெரியவில்லை. ஏனெனில் சந்திரிக்கா அரசாங்கமும் கடந்த யு.என்.பி. அரசாங்கத்தின் வரியை நீக்கிவிட்டு புதிய வரியாக ஜி.எஸ்.ரி.யை அறிமுகப்படுத்தியது. அதுபோல் ரணில் ஜி.எஸ்.ரி.யை நீக்கிவிட்டு சும்மா இருந்துவிடப் போவதில்லை. புதிதாக மற்றொரு வரியைப் போடத்தான் போகிறார். அது ஒருவேளை தற்போதையதைவிட மோசமானதாகவும் இருக்கலாம். ஏனெனில் நிட்சயம் அரசாங்கச் செலவுகளுக்குப் பணம் தேவை. அத்தோடு இராணுவத்தை நவீனமயப் படுத்தப்போவதாக வேறு சொல்கிறார். ஏது பணம்?

இது போல் பல்கலைக்கழக நுளைவுப் பரீட்சைக்கான திட்டத்தை இல்லாதொழிப்பதால் வேலையில்லாத் திண்டாட்டம் நீங்கிவிடப் போவதுமில்லை.

இப்படிப் பார்க்கையில் அவர் அள்ளியெறியும் வாக்குறுதிகளில் விடயக்கனதி அதிகம் இல்லாத வெறும் காகிதக் கத்தைகளாகக் காற்றில் பறக்கின்றன. அவரில் எஞ்சியிருக்கும் ஒரே நம்பிக்கை, அவர் வந்தால் வர்த்தக சமூகத்துக்கு வசதி, வாய்ப்பு, வருமானங்கள் பெருகும் என்பதே. இதுகூட ஐ.தே.க வர்த்தகர்களுக்கு வாய்ப்பானதென்றும் எஸ்.எல்.எப்.பி. விவசாயிகளுக்கு வாய்ப்பானதென்றும் பொதுவில் நிலவும் ஒரு நம்பிக்கையின் அடிப்படையிலானதே.

அதற்கான திட்டங்கள் "எண்ணங்கள் எதையும் அவர் வெளியிடவில்லை. வெறுமனே நான் வந்தால் இந்நாட்டை சிங்கப்பூர் போலாக்குவேன்." என்று மட்டுமே கூறி வருகிறார். சிங்கப்பூரை உருவாக்குவதற்கு சிங்கப்பூரின் வர்த்தகக் கொள்கையைப் பார்ப்ப தற்கு முன்னர் அதன் தேசியக் கொள்கையைப் பார்க்க வேண்டும். அங்கு இனப்பிரச்சனை என்பது மருந்துக்கும்கூட இல்லாதவாறு ஆரம்பத்திலேயே அடியோடு ஒழிக்கப்பட்டுவிட்டது. சகல இனங்களுக்கும், மொழிகளுக்கும் சம அந்தஸ்து நிலவுகிறது. மதம் அரசியலில் தலையிடாதவாறு செய்யப்பட்டுள்ளது. இவ்வடிப்படை நிலைமைகளின்றி ஒரு சிங்கப்பூர் உருவாகியிருக்க முடியாது. அதனால் இந் நிமையை இங்கு தோற்றுவிக்கும் வழிவகைகள் பற்றிக் கூறாது வெறும் பிரச்சார வார்த்தையாகச் சொல்லப்படும் ரணிலின் இந்தச் சிங்கப்பூர் வாதம் எந்த அடிப்படையுமற்றது.

இவையெல்லாம் எப்படியிருந்தாலும் அவை யாவும் சிங்கள சமூகத்தின் வாக்குகளை வெல்வதற்கான வலை விரிப்புகள்தான். சிங்கள சமூகத்தைத் திருப்தி செய்யாது ரணில் வெற்றி வாய்ப்பை நினைத்துப் பார்க்க முடியாது என்பது யதார்த்தம்தான். ஆனால் அது மட்டுமே யதார்த்தமில்லை. சிறுபான்மை மக்களின் ஆதரவைப் பெற வேண்டிய அவசியமும் அவருக்கு ஒரு பெரும்தேவையாக உள்ளது. ஏனெனில் சிங்கள மக்களின் ஆதரவு ரணிலுக்கும் சந்திரிக்காவுக்கும் ஓரளவு சரிக்குச் சரி என்ற அளவுக்கு வருமானால் வெற்றியைத் தீர்மானிக்கும் வாக்குகளாக அமையப்போவது சிறுபான்மை வாக்குகளே.

எனவே சிறுபான்மையினருக்கு இவர் என்ன நம்பிக்கையைக் கொடுக்கிறார் என்பது அதிக அக்கறைக்குரியதாகியுள்ளது. அவர் இனப் பிரச்சனைக்கான தீர்வு தொடர்பாக முன்வைத்துள்ள விடயம் இதுதான்.

தான் ஆட்சிக்கு வந்தால் விடுதலைப் புலிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துவேனென்றும் விடுதலைப்புலிகளும் உள்ளடங்கிய ஒரு இடைக்கால நிர்வாக சபையை வடக்கு கிழக்குப் பகுதிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பேன் என்றும் கூறுகிறார்.

நல்ல விடயம்தான். ஆனால் நம்பிக்கை வைக்கக்கூடிய விடமா?

ஏனெனில் 'பேசுவேன்', என்னும் அவர், எதை வழங்கத் தயாராக உள்ளேன்' என்று குறிப்பாகத்தன்னும் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. சந்திரிக்கா வைத்த தீர்வுப் பொதியையே புலிகள் நிராகரித்து விட்டார்கள். சந்திரிக்காவின் தீர்வுப் பொதியிலுள்ள சில சாதகமான விடயங்களுக்குக்கூட இவர் எதிர்ப்புத் தெரிவிக்கிறார். குறிப்பாக ஒற்றையாட்சியை நீங்குவது, காணி, பொலிஸ், போன்ற விடயங்களுக்கு அதிகாரப் பகிர்வை அதிகரிப்பது போன்றவற்றையே எதிர்க்கிறார். அத்தோடு வடக்கு கிழக்கு இணைப்பை அடிப்படையில் அவர் மறுக்கிறார். இத்தகைய நிலைப்பாடுகளைக் கொண்ட இவர் புலிகளுடன் பேசினாலும் எதை அவர்களுக்கு வழங்கப்போகிறார் என்ற கேள்வி இயல்பாகவே அனைவருக்கும் எழும். அதனால் தான் அவர் வழங்கப்போகும் விடயத்தை முன் வைக்க வேண்டும் என யாவரும் எதிர்பார்த்தார்கள். ஆனால் அவர் அதை முன்வைக்கவில்லை.

அப்படியான ஒரு தீர்வு ஏற்பட்டால் மட்டுமே அவர் அடுத்ததாக கூறும் இடைக்கால நிர்வாக சபை என்ற விடயத்தைச் சிந்திக்கக்கூடியதாக இருக்கும். இல்லாத தீர்வுக்கு ஏது இடைக்கால நிர்வாகம்? இப்போது இருக்கும் மாகாண சபையைத்தான் அவர் கருதியிருப்பாராக இருந்தால் இம் மாகாண சபையை புலிகள் எப்போதோ நிராகரித்து விட்டார்கள். அப்படியிருக்க எப்படி அதற்கான இடைக்கால நிர்வாகத்திற்கு அவர்கள் சம்மதிப்பார்களென எதிர்பார்க்கிறார்? (அவர்களின் இத்தனை கால யுத்தத்தையும் அர்த்தமில்லாததாகவல்லவா அது ஆக்கிவிடும்?

அதேவேளை இம்மாதம் 12ம் திகதி யுக்திய பத்திரிகைக்கு ரணில் வழங்கிய பேட்டியில் ஒற்றையாட்சியின் கீழேயே இனப்பிரச்சனைக்குத் தீர்வு என உறுதியாகக் கூறியுள்ளார். விடுதலைப் புலிகள் ஒற்றையாட்சியை ஏற்கவில்லை. அண்மையில், மாவீரர் தினத்தில் லண்டனில் உரையாற்றிய புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கம், இலங்கை அரசாங்கத்தின் அரசியல் சட்டத்தில் தமக்கு நம்பிக்கை இல்லை என்று திட்டவட்டமாக இவ் ஒற்றையாட்சி முறையை நிராகருத்துள்ளார். இந்நிலையில் இப் பேச்சுவார்த்தை பற்றி இப்போதே அவநம்பிக்கைக்கான அறிகுறிகள் முளைவிட்டுவிட்டன.

அத்தோடு விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் பிரபாகரன் தனது மாவீரர் உரையில் பேச்சுவார்த்தையையிட்டு வெளியிட்ட மூன்று நிபந்தனைகளில் முக்கியமான ஒரு நிபந்தனை ஆக்கிரமிப்புப் படைகள் தமிழ்ப் பகுதிகளைவிட்டு வெளியேற வேண்டும் எனக் கூறுகிறது. அதற்கு ரணில் இணங்கப் போவதில்லை. இந்நிலையில் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதானால் அதற்கு பிரபாகரன் தனது நிபந்தனையைத் தளர்த்த முன்வரவேண்டும். அவர் அதற்கு முன்வருவாரா என்பது அடுத்த விடயம்.

இத் தடைகளை மீறி ஒரு பேச்சுவார்த்தை ஏற்பட்டாலும் முன்னர் பிரேமதாஸாவுடன் பேசியதைப்போல எதையுமே சாதிக்காது ஒரு ஆறு, ஏழு, மாதத்திற்குப் பின் மீண்டும் யுத்தம் வெடிக்காதென்பதற்கு எந்த உத்தரவாதமுமில்லை. அதையே பலரும் எதிர்வு கூறுகின்றனர்.

இதேவேளை ரணில் இராணுவத்தை நவீனமயப்படுத்தப்போவதாகவும் பேசி வருகிறார். சமாதானத்தை நிலைநாட்டுவதில் நம்பிக்கை இருக்குமானால் ரணிலுக்கு இராணுவத்தை நவீனமயப்படுத்தும் தேவை எதற்கு? எனவே ரணிலும் யுத்தத்தில் நம்பிக்கை வைத்துக் கொண்டுதான் இப் பேச்சுவார்த்தையிலும் இறங்குகிறார் என்ற சந்தேகத்தை இது தோற்றுவிக்கிறது.

எவ்வாறாயினும் ரணிலின் வரவு புலிகளுக்கு பல அனுகூலங்களைக் கொடுக்கலாம். தற்போதய சந்திரிக்கா ஆட்சியை இதுவரையிலான ஆட்சிகளில் மிகக் கொடிதென மாவீரர் உரையில் தெரிவித்திருக்கும் பிரபாகரனின் கருத்துப்படி இவ் ஆட்சி தூக்கி வீசப்படுவதையே புலிகள் எதிர்பார்ப்பதாகத் தோன்றுகிறது. அவர் இத்தேர்தல் பற்றி எதுவும் கூறாவிட்டாலும், சிங்கள தேசத்தின் தலைவர்களைத் தெரிவு செய்யும் இத் தேர்தலில் தமிழீழ மக்களுக்கு அக்கறையில்லையெனப் புலிகள் கூறுயிருந்தாலும் இந்த ஆட்சி மாறுவதையே அவர்கள் விரும்புவர். இவ் ஆட்சி மாற்றப்படவேண்டுமாயின் ரணில் அதிகாரத்துக்கு வருவதே ஒரே வழி.

ரணில் வந்தால் உடனடியாக புலிகளின் ஏனைய இரு நிபந்தனைகளான யுத்த நிறுத்தம், பொருளாதாரத் தடை நீக்கம் ஆகியவற்றுக்கு இணங்கி பேச்சுவார்த்தைக்கு முற்பட்டே ஆகவேண்டியிருக்கும். அப்படியான சூழ்நிலையில்,

1. படைகளின் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசங்களுக்குள்- குறிப்பாக யாழ்ப்பாணம், வவுனியா பகுதிகளுக்குள் புலிகள் திரும்பவும் செல்லக்கூடியதாக இருக்கலாம்.

2. சர்வதேச ரீதியில் தமக்கான அரசியல் அங்கீகாரத்தை புலிகள் ஏற்படுத்திக் கொள்ளலாம். இலங்கை அரசாங்கத்தின் பிரசாரத்தால் அமெரிக்கா போன்ற சில நாடுகளில் ஏற்பட்டுள்ள பாதகமான நிலைமைகளை மாற்றியமைக்க முயற்சிசெய்யலாம்.

3. சர்வதேச நாடுகளிலுள்ள புலம்பெயர்ந்த தமிழர்கள் மத்தியில் ஆதரவைப் பெருக்கிக் கொண்டு, நிதிதிரட்டல்களை மேற்கொண்டபடியே திரும்பவும் ஒரு யுத்தம் ஏற்படுமானால் அதை எதிர்கொள்ளுமுகமாகத் தம்மைப் பலப்படுத்தித் தயார்ப்படுத்திக் கொள்ளலாம்.

4. தற்காலிகமாகவேனும், தங்கள் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களுக்கான பொருளாதாரத் தடைகளை நீக்கி பொருட்களைச் சேமித்துக் கொள்ளலாம்.

5. ஒருஆட்சி மாற்றத்தால் இராணுவத்திலும் பாதுகாப்புத் துறையிலும் ஏற்படும் தலைமைப்பீட மாற்றங்கள் இன்றைய இராணுவத்தின் போர்த் தந்திரோபாயங்களைத் தற்காலிகமாகத் தேக்கமடையச் செய்யலாம்.

6. ஜனாதிபதித் தேர்தல் முடிந்தாலும் அடுத்து ஒரு பாராளுமன்றத் தேர்தலை மிக விரைவில் எதிர் நோக்க வேண்டியிருப்பதால் புதிய அரசாங்கத்தால் கடுமையான கெடுபிடிகள் எதிலும் உடனடியாக இறங்க முடியாதிருக்கும்.

7. இலங்கைத் தமிழ் மக்களின் தலைமைத்துவத்துக்கான சக்தியாக புலிகள் தம்மை அடையாளப் படுத்திக் கொள்ளலாம்.

8. இதேவளை யுத்தம் மீண்டும் ஆரம்பிக்கும் பட்சத்தில் தமது கட்டுப்பாடுகளிலில்லாத பிரதேசங்களிலும் நகர்வுகளைச் செய்யக்கூடிய, இராணுவ ரீதியில் முன்னேறிய ஒரு உயர்ந்த நிலையிலிருந்து யுத்தத்துக்கு முகம் கொடுக்கலாம்.

எனவே ரணில் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒரு தீர்வைத் தருவார் என்ற நம்பிக்கை எதுவும் இல்லாவிட்டாலும் புலிகளுக்கு ரணில் வருவது சாதகமானதே. எனவேதான் கிழக்கு மாகாணத்தின் புலிகளின் செல்வாக்குமிக்க பகுதிகளில் கூட ரணிலுக்கான பிரச்சாரம் நடப்பதை அவர்கள் கண்டும் காணாமல் விட்டுவிட்டார்கள்.

இந்தவகையில் தமிழ் மக்களின் வாக்குகளை ஈட்டிக்கொள்ள ரணில் திட்டம் வகுத்திருந்தாலும் அதில் ஒரு பிரதான தடை உள்ளது. அதாவது யாழ்ப்பாண வாக்குகளை எவ்வாறு கைப்பற்றுவது என்பதே அது. அவ் வாக்குகள் டக்ளஸ் தேவானந்தாவின் கையில்தான் உள்ளன. விரும்பியோ விரும்பாமலோ அங்குள்ள மக்களை நிர்ப்பந்திக்கவும், அல்லது அவர்களது வாக்குகளை ஏதோ ஒரு வகையில் தான் ஆதரிக்கும் வேட்பாளருக்குப் போடவைக்கவும் கூடிய திறன் இப்போது அவரிடம்தான் உள்ளதாக இருதரப்புமே நம்புகிறது. ஆனால் டக்ளஸ் சந்திரிக்காவை ஆதரிப்பதாக உறுதியளித்து விட்டார். எனினும் ரணிலும் இறுதிவரை டக்ளஸிடம் தன்னை ஆதரிக்கும்படி, அல்லது வாக்களிப்பில் கலந்து கொள்ளாது இருக்கும்படி தூதுக்குமேல் தூது அனுப்பியபடியே இருக்கிறார். அதற்கு இதுவரை டக்ளஸ் இணங்கியதாகத் தெரியவில்லை. இந்நிலையில் சரிக்குச் சரியாக அமையக்கூடிய இத் தேர்தல் போட்டியின் வெற்றி தோல்வி டக்ளஸின் கையாய் தீர்மானிக்கப்படும் வாய்ப்பும் உண்டு.

இதற்கிடையேதான் புலிகள் யாழ்ப்பாணத்தின் மீதான புதிய தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள். இத் தாக்குதல்களால் யாழ்ப்பாணத்தில் சூழ்நிலை மாறி வாக்களிப்பு குழப்பப்படுமானால் டக்ளஸின் மூலம் வெற்றியைத் தேடிக் கொள்ளும் சந்திரிக்காவின் எண்ணம் நிறை வேறாமல் போகலாம்.

சந்திரிக்காவைப் பொறுத்தவரை பெரும்பான்மைச் சிங்கள மக்களிடையே முன்னர் இருந்த ஆதரவு பெருமளவு சரிந்துவிட்டது. எனினும் அது தலைகீழாக மாறிவிட்டதென்று கணிக்க முடியாது. ரணில் வெளிநாட்டு நிபுணர்களின் ஆலோசனையில் மேற்கொள்ளும் திட்டமிட்ட ஒருவகைப் பிரசாரம் 'ரணிலே ஆட்சிக்கு வரப்போகிறார்' என்ற ஒரு எண்ணத்தை செயற்கையாகத்தன்னும் ஏற்படுத்திவிடும் தந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டுவருகிறது. இன்று ஆதிக்கம் வகிக்கும் தனியார் ஊடகங்கள் இப் பிரசாரத்துக்கான வசதியான வழியாக ரணிலுக்கு கிட்டியுள்ளன. ஆனால் அவை நகரங்களில் செயற்படுமளவு கிராமங்களில் எவ்வளவு தாக்கமுள்ளதாகச் செயற்படுகின்றன என்பது கேள்விக்குறியே. எனவே இந்த மாயைத் தன்மையான உணர்விலிருந்து விலகி ஊடறுத்துப் பார்த்தால்தான் உண்மை நிலை புரியும்.

ஆனால் சந்திரிக்காவுக்கு கடந்த பொதுத் தேர்தலில் பேராதரவு வழங்கிய பல முகாம்கள் இன்று முகம் சுழிக்கின்றன. குறிப்பாக ராவய, யுக்திய போன்ற சிறுபத்திரிகைகளும், பல அரச சார்பற்ற நிறுவனங்களும் இவ்வாறு பின்வாங்கி விட்டன. சில எதிராகவும் செயற்படுகின்றன. ஒரு சில ரணிலுக்கு ஆதரவாக மாறியும் சென்று விட்டன.

அவர் கடந்த பொதுத்தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியமையே-குறிப்பாக இனப்பிரச்சனையைத் தீர்த்து நாட்டை அழிவுகரை யுத்தத்திலிருந்து காக்கத் தவறியமையே-பிரதான காரணம்.

அத்தோடு அவரது செயற்பாட்டு முறை மற்றொரு காரணம். அவர் நெருங்க முடியாதவராகவும், எவரது ஆலோசனைகளையும் ஏற்கத் தயாரில்லாத சொந்த வழியில் செயற்படுபவராகவும், இலகுவில் பகைத்துக் கொள்பவராகவும் விளங்குவது இக் கசப்புணர்வு வளர்வதில் பெரும் பங்கு வகித்துள்ளன.

இதேவேளை சிறுபான்மைக் கட்சிகளைப் பொறுத்தவரையிலும் அதே சூழ்நிலையே கடந்த ஜனாதிபதித் தேர்தலில் டெலோவையும், தொண்டமானின் இ.தோ.க.வையும் தவிர அனைத்து சிறுபான்மையினக் கட்சிகளும் அவருக்கு ஆதரவாய் நின்றன. இப்போதோ தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகியன பின்வாங்கி விட்டன. அதே வேளை பிரதியமைச்சர் சந்திரசேகரனின் மலையக மக்கள் முன்னணியும் டெலோவும் ரணிலை ஆதரிக்க முன்வந்துள்ளன. கூட்டணியில் ஒரு பகுதி ரணிலுக்கு ஆதரவாகவும் மறுபகுதி சந்திரிக்காவுக்கு ஆதரவாகவும் இழுபறிப்பட்டதில் இறுதியில் யாருக்குமில்லாமல் சுயநிர்ணய உரிமையை ஆதரிக்கும் ஒருவருக்கு வாக்களிக்குமாறு கூறி வாசுதேவ நாணயக்காராவை குறிப்பால் உணர்த்தியுள்ளன. ஆனால் வாசுக்கு விழும் வாக்குகள் சந்திரிக்காவுக்கு எதிராக விழவிருந்த, அல்லது ரணிலுக்கு ஆதரவாக விழவிருந்த வாக்குகளாகவே இருக்குமாதலால் அது ரணிலையே அதிகம் பாதிக்கும். எனினும் கூட்டணியின் தெளிவற்ற முடிவுக்கு தமிழ் மக்கள் செவிமடுப்பார்களா என்பது கேள்வி. இத் தடுமாற்றத்தால் கூட்டணி தனது இரண்டு பலஹீனங்களை வெளிக்காட்டியுள்ளது.

1. கட்சிக்குள் ஒருமித்த கருத்தின்மை

2. தன்னால் ஒரு உறுதியான தலைமைத்துவத்தைக் கொடுக்க முடியாதென்ற தன்மை.

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எப். இதற்குள்ளும் இரண்டுபட்ட கருத்துக்கள் உருவாகி அக் கட்சியையே இரண்டாகக் கிழிக்கும் அளவுக்குச் சென்றுவிட்டது. அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமசந்திரன் "மூன்றாம் தரப்பு மத்தியஸ்தத்தை ஆதரிக்கும் ஒருவருக்கு வாக்களியுங்கள்" என்று கூறி ரணிலை நோக்கி சைகை காட்டிவிட்டாலும் வரதராஜபெருமாள் ஏனைய மத்திய குழு உறுப்பினர்களைத் தன் பக்கம் வளைத்துப் போட்டுக்கொண்டு சந்திரிக்காவை ஆதரிப்பதாகத் தெரிவித்துள்ளார்.

**-நரன்-**

புளொட்டும் நீண்டகால மௌனத்தின்பின் இறுதியாக சந்திரிக்காவை ஆதரிப்பதாக அறிவித்துள்ளது. ஆனாலும் இக்கட்சிகள் யாவும் இருக்கும் நிலையிலும், அவற்றின் இருப்புக்கு அரசாங்கத் தயவு தேவைப்படும் நிலையிலும் தவிர்க்க முடியாதே இம்முடிவுகளுக்கு வர நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளன. ஆயினும் அவற்றால் முழு மனதாக சந்திரிக்காவை ஆதரிக்க முடியவில்லை என்பது கண்கூடு.


இருப்பினும் தமிழ் மக்கள் இக்கட்சிகளின் வழிகாட்டிலின்படிதான் நடப்பார்கள் என்று கூறுவதற்கில்லை. அவர்கள் சுதந்திரமாகவே முடிவெடுப்பார்கள். எனினும் சந்திரிக்கா தனது கடைசி நேர ஆயுதமாக பாராளுமன்றத்தை அரசியல் சாசன நிர்ணய சபையாக மாற்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண ஒரு மக்கள் ஆணையைக் கோரியுள்ளார். இதன் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இன்றியே தீர்வை ஏற்படுத்தக்கூடிய வகையில் புதிய அரசியல் யாப்பை உருவாக்கலாம் என்று ஒரு வழியை முன்வைத்துள்ளார்.

கடைசி நேரத்தில் எறியப்பட்ட இந்தத் துருப்புச்சீட்டு ரணிலின் 'பேச்சுவார்த்தை' என்ற துருப்பை வெட்டுமா என்பதும், ஓரளவுக்கு உருவாகிவிட்ட தமிழர் மனோநிலையை மாற்றி இதைக்குறித்துச் சிந்திக்கவைக்குமா என்பதும் கேள்விக்குரியதே. அத்தோடு அவர் தனது இந்த மக்கள் ஆணை கோரிக்கையை பெரிய அளவில் பிரசாரப் படுத்தாமல் இருப்பதாலும் அது தமிழ் மக்களின் கருத்தைக் கவரத் தவறிவிடலாம். சிங்கள மக்கள் பீதிகொண்டு விடுவார்களோ என்ற அச்சம் மிக முக்கியமான ஒரு முடிவான இதைப் பிரசாரம் செய்யாமல் விடக் காரணமாக இருக்கலாம். ஆனால் அதுவே, எதற்காக இதை வெளியிட்டாரோ அதை-தமிழர் மனதைக் கவர்வதை-சாதிக்க முடியாது போக வழிவகுக்கலாம்.

~ஸ்பெஷல் ரிப்போர்ட்~

# இயக்கப் பிளவுகள்
# தமிழ் அரசியலின் சாபக்கேடு

இலங்கைத் தமிழ் இயக்கங்களில் காணப்பட்ட சாபக்கேடுகளில் விசனந்தரக்கூடிய ஒரு போக்குத்தான் இந்த இயக்கப் பிளவுகள். இந்தப் பிளவுகள் ஏறக்குறைய எல்லாத் தமிழ் இயக்கங்களிலும் நடந்துள்ளன; நடந்து வருகின்றன. ஆனால் தமிழ் மக்களின் ஆதங்கமோ, இவை எல்லாம் ஒன்றுபட மாட்டாதா என்றிருக்க, நிகழ்வதோ தலை கீழாக இருக்கிறது. இறுதியாக இப்போது நிகழ்ந்துள்ள இயக்கப் பிளவுதான் ஈ.பி.ஆர்.எல். எஃப்.பில் நிகழ்ந்த வரதராசப் பெருமாளின் இடைநிறுத்தம்.



சுரேஷ் பிரேமச்சந்திரன்

ஒரே இலட்சியத்தை முன்னிறுத்திப் போராடப் புறப்பட்ட இந்த இயக்கங்கள் தமக்கு இடையேயும் ஒற்றுமையைப் பேணவில்லை, கடைசி- தத்தம் இயக்கத்துக்கு உள்ளேகூட ஒற்றுமையைப் பேண முடியாதவையாக ஏன் ஆகிப் போய்விட்டன?

தம்மிடையேயும் தமக்குள்ளும் ஒற்றுமையைப் பேண முடியாத இவர்கள், மக்களாகிய எங்களை ஒன்றுபட்டுப் போராட முன்வாருங்கள் என்று அறைகூவ லாயக்கானவர்கள்தானா என்ற கேள்வி மக்களிடம் தோன்றுவது நியாயந்தான்.

ஆனால் தமிழ் இயக்கங்களில் மட்டுமல்ல, எமது பழம் தமிழ்க் கட்சிகளிலும் இதே வகையில் பிளவுகள், பிரிவுகள் ஏற்பட்டுத்தான் உள்ளன. இப்போதும் அத்தகைய உள் முரண்பாடுகள் தொனித்துக் கொண்டுதான் இருக்கின்றன. ஆரம்பத்தில் தமிழ்க் காங்கிரசிலிருந்து தமிழரசுக் கட்சி உதயமானதே ஒரு உதய சூரியனாக அல்ல, உடைந்த சூரியனாகத்தான். பின்னரும் தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற வடிவத்தில் எம் மிதவாதத் தலைமைகளின் உதிரிப் போக்குகளுக்கு நங்கூரமிடப்பட்டாலும் தந்தை செல்வாவின் மறைவுக்குப் பின் தலைமைத்துவப் போட்டிகள் உள்ளூரப்



சித்தார்த்தன்

பொருக்கு வெடிக்கத் தொடங்கின. அந்தக் கசப்புணர்வின் வெளிப்பாடே தலைமைப் பதவிக்கு உரித்துடையவராக இருந்த இராசதுரையின் வெளியேற்றம்.

வெளியேறிய இராசதுரை ஐ.தே.க.வில் இணைந்தமையைத் துரோகம் என்று முத்திரை குத்தத் தெரிந்த 'தமிழ் விசுவாசி'களுக்கு அவரைக் கழுத்தறுத்த உட்கச்சிக் குழி பறிப்புக்கள் அநியாயமாகத் தென்படவில்லை.

எமது தமிழ்ப் பாரம்பரியமாகிவிட்ட ஓர் இலகுவான மனப்போக்குத்தான் உள்ளே என்ன நிகழ்ந்தது என்று ஆராயாமல், விலகியவரை, அல்லது விலத்தப்பட்டவரை உடனடியாகத் 'துரோகி' என்று முத்திரை குத்திவிடுவது. வயிற்றுக்குள் இருக்கும்வரை இரை. வெளியே வந்துவிட்டால் வாந்தி. இரை வாந்தியாவதற்கு உடலுக்குள் நிகழ்ந்த கோளாறென்ன என்று நாம் ஆராய்வதில்லை. அதனால் நாம் வாந்தி யெடுத்துக்கொண்டே இருக்கிறோம். வருத்தம் தொடர்கிறது.

இந்த வருத்தம் மிதவாதக் கட்சிகளிடம் இருந்ததில் வியப்பில்லாவிட்டாலும் சமூக மாற்றம் பற்றியும் புரட்சிபற்றியும் கருத்து ரீதியான தெளிவுகளுடன்- ஓரளவு அர்ப்பண உணர்வுடன் செயலாற்றப் புறப்பட்ட இடது சாரிக் கட்சிகளுக்கும் நேர்ந்த கதி அதுதான். இங்கே பிளவுகள் இன்னும் அதிகப்படியானதாகக் காணப்பட்டன. அதற்கு, உள்ளும் புறமும் காரணிகள் இருந்தன. புறத்தே, வெளியுலகில் பிளவுபட்ட ரஷ்ய, சீன, ரொஸ்கிவாத முகாம்களுக்கேற்ப இங்கேயும் கூடாரங்கள் பிரிந்து போவது ஒரு காரணம். அத்தோடு அகத்தேயும் இணக்கமின்மைகள் மறு காரணம்.

இப்படியாக எல்லா அரசியல் முன்னெடுப்புகளிலும் காணப்பட்ட இப்போக்கு விதிவிலக்கின்றி தமிழ் இயக்கங்களிலும் படிந்துவிட்டது. ஆனால் மக்களால் இந்தப் பொதுத் தன்மையை அவதானிக்க முடிந்தாலும் விடுதலை இயக்கங்கள் என்று தோன்றியவற்றில் இப்படியான பிளவுகளும் பிரிவுகளும் ஏற்படுவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. காரணமென்னவென்றால் இங்கே ஆயிரக் கணக்கான இளைஞர்களின் உயிர்கள் பணயமாக வைக்கப்பட்டுள்ளன.

ஆரம்பத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் அணியான தமிழ் இளைஞர் பேரவைக்குள் எழுந்த முரண்பாட்டில் உருவான மாணவர் பேரவையின் பங்கோடு ஆயுதப் போராட்ட இயக்கமாக 'புதிய புலிகள்' பரிணமித்து, பின்னர் தமிழீழ விடுதலைப் புலிகளாக வடிவம் பெற்றது. அது தங்கத்துரை, குட்டிமணி ஆகியோர் தலைமையில் ஏற்பட்ட தமிழீழ விடுதலை இயக்கத்தோடு இணைந்து செயற்பட்டு பின்னர் பிரிந்து தனித்துச் செயற்பட்டது. அப்போது புலிகளின் இயக்கத்தில் ஏற்பட்ட முதலாவது இயக்கப் பிரிவுதான் உமா-பிரபா பிரிவு எனப்பட்ட புலிகள்- புளொட் பிரிவு. அதுவே புலிகளில் நிகழ்ந்த முதலும் கடைசியுமான இயக்கப் பிரிவு. அதனபின் ஒரு கட்டத்தில் புலிகளின் இரண்டாவது தலைமை மட்டத்திலிருந்த ராகவனோடு, நித்தியானந்தன், நிர்மலா நித்தியானந்தன் அகியோரடங்கிய ஓர் அதிருப்தியாளர் வட்டம் ஒதுங்கிக் கொண்டது. அதன்பின் அதற்குள் கிட்டு-மாத்தையா முரண்பாடு தோன்றி கிட்டு மதான தாக்குதலாய்ப் பிரதிபலித்தாலும் பின்னர் நிலமை கட்டுக் கோப்புக்குள் கொண்டு வரப்பட்டுவிட்டது. அதுபோல் மாத்தையாவோடு எழுந்த முரண்பாடும் அதற்குள் சுலபமாக அடக்கப்பட்டுவிட்டது.

இவை தவிர புலிகள் இயக்கம்- இயக்கப் பிளவு, இயக்கப் பிரிவு என்ற போக்கினால் அதிகம் பாதிக்கப்படவில்லை. அதைவிட பாதிக்க விடவில்லை என்பது பொருத்தமானது.

ரெலோ இயக்கத்தின் தலைமை, குட்டிமணி, தங்கத்துரை ஆகியோரின் கைதினால் சிறீசபாரத்தினத்திடம் மாறியபின் நிகழ்ந்த முதலாவது இயக்க முரண்பாடு- தாஸ் குழுவினர் தொடர்பாக ஏற் பட்ட முரண்பாடு. அதை அவர் கள் தீர்த்த விதம் சுவையானது. யாழ் ஆஸ்பத்திரிக்குள் பேச்சுவார்த்தை நடத்த வரும்படி தாஸ் குழுவை அழைத்தனர். ஆஸ்பத்திரியாகையால் ஆயுதம் களைந்துவிட்டு உள்ளே சென்ற அவர்களை அங்குவைத்துச் சுட்டுக் கொன்றனர். (இதனைச் 'சுவையானது' எனக் குறிப்பிட்டதற்கு கோபிக்காதீர்கள். இத்தகைய பல சம்பவங்களை நாம் மெச்சிக்கொண்டுதான் இருக்கிறோம்)


இதையடுத்து சிலகாலத்துள் புலிகளின் தாக்குதலுக்கு ரெலோ இலக்காகிப் பலவீனமடைந்துவிட்டதால் சிலர் தாமாக ஒதுங்கிச் சென்றதைத் தவிர குறிப்பிடத்தக்க பிளவுகள் என்று எதுவும் ஏற்படவில்லை.

பிளவுகளின் மோசமான விளைவுகளைச் சந்தித்த ஒரு இயக்கம் புளொட். புளொட்டில் எழுந்த உள்முரண்பாடுகளின் முதலாவது வெளிப்பாடு சந்ததியாரின் வெளியேற்றமும், தொடர்ந்து நிகழ்ந்த அவரது கொலையும். இந்நிலையில் முதலாவது சிறு பிளவாக அதில் ஏற்பட்ட நிகழ்வுதான் 'தீப்பொறி' என்ற குழுவினரின் வெளியேற்றம். இக்குழுவினரில் ஒருவரான கோவிந்தன் எழுதிய 'புதியதோர் உலகம்' என்ற புத்தகம்தான் உள்ளியக்கப்படுகொலைகளை முதலில் வெளிக் கொணர்ந்த ஓர் ஆவணம்.


இதையடுத்து புளொட்டுக்குள் நிகழ்ந்த பாரிய இயக்கப் பிரிவுதான் அதன் இராணுவப் பொறுப்பாளராயிருந்த பரந்தன் ராஜன் தலைமையில் ஏற்பட்ட ஈ.என்.டி.எல்.எஃப். என்ற குழுவின் பிரிவு.

இதன்பின் புளொட்டில் ஏற்பட்ட உள்ளியக்க முரண்பாடுகளின் உச்சக்கட்ட வெளிப்பாடாக நிகழ்ந்ததுதான் அதன் தலைவர் உமா மகேஸ்வரனின் படுகொலை. ஒரு விடுதலை இயக்கத்தின் தலைவரை அந்த இயக்கத்தவரே கொன்றதாக நம்பப்படும் ஓர் அவலமான சம்பவம் தமிழ் விடுதலை இயக்கவரலாற்றில் இந்த இயக்கத்தில்தான் நிகழ்ந்தது. அமிர்தலிங்கத்தின் மரணச் சடங்கில் கலந்துவிட்டுத் திரும்பிய கையோடு காணாமல்போன உமாமகேஸ்வரன், ஒருகாலத்தில் இலங்கை வானொலியும் பத்திரிகைகளும் அடிக்கடி உச்சரித்துக் கொண்டிருந்த அந்தப் பிரபல்யமான பெயரக்குரியவர், போராட்ட வரலாற்றின் ஒரு மிக ஆரம்பகாலத்துத் தலைவர் வெள்ளவத்தைக் கடற்கரையில் அனாதைப் பிணமாகச் சுடப்பட்டுக் கிடந்தார்.

இதையடுத்து புளொட் இயக்கத்தின் செயற்பாட்டுக்கான கட்டுப்பாடு மாணிக்கதாசனின் கைகளுக்கு மாறிய பின் அடுத்து ஏற்பட்ட இயக்கப் பிளவுதான் உமாப்பிரகாஷின் முரண்பாடு. ஆனால் அது மிக லாவகமாக மாணிக்கதாசனால் முறியடிக்கப்பட்டது. பேச்சுவார்த்தைக்கு வருகிறோம் என்று கூறிக்கொண்டு சென்று சுட்டுக் கொன்றுவிட்டு வந்து விட்டார்கள். இதைவிட இதில் ஏற்பட்ட மற்றொரு பிரிவுதான் மோகன் குழு. இவர்கள் தற்போது இராணுவத்தின் ஒரு துணைப் படைபோல் இயங்கிக் கொண்டிருக்கிறார்கள்.




டக்ளஸ் தேவானந்தா



வரதராஜப்பெருமாள்

இதேவேளை மாணிக்கதாசனுக்கும் புளொட்டின் அரசியல் தலைவர் சித்தார்த்தனுக்குமிடையில் முரண்பாடுகள் நிலவி வந்தன. எனினும் மாணிக்கதாசன் படுகொலை செய்யப்பட்டதால் அது விபரீதமாக வெடிக்கவில்லை. ஆயினும் தாசன் விசுவாசிகளுக்கும் சித்தார்த்தன் விசுவாசிகளுக்குமிடையிலான பலப்பரீட்சை நிலவியபோதும் அரசாங்கத்தின் அனுசரணையுடன் புளொட், சித்தார்த்தனின் கட்டுப்பாட்டுக்குள் தற்போது கொண்டுவரப்பட்டுவிட்டது.



செல்லையா இராசதுரை

அதுபோல ஈரோஸ் இயக்கத்தின் இரண்டு கட்டங்களில் இயக்கப் பிரிவுகள் நிகழ்ந்தன. முதலாவது பிரிவாக ஈரோஸிலிருந்து பத்மநாபா தலைமையில் ஈ.பி.ஆர்.எல்.எஃப். பிரிந்து சென்றது. இரண்டாவதாக புலிகள் ஈரோசைத் தம்முடன் இணைந்துவிடும்படி கூறியதையடுத்து ஒரு பகுதியினர் இணைய, இன்னும் சிலர் ஒதுங்க இன்னொரு பகுதியினர் தாமே ஈரோஸ் என்ற பெயருடன் செயற்படுகின்றனர்.

இதேவேளை ஈ.பி.ஆர்.எல்.எஃப்.பையும் முரண்பாடுகள் விட்டுவைக்கவில்லை. முன்னணியில் நின்று இயங்கிய பலர் அதிருப்தியாளர்களாய் ஒதுங்கிவிட, இக்கட்சிக்குள் நிகழ்ந்த முதலாவது பெரிய பிளவு டக்ளஸ் தேவானந்தா தலைமையிலான ஈ.பி.டி.பி. பிரிந்து சென்றமை. இதன்பின் மாகாணசபை காலத்தில் சிலர் ஒதுங்கிக்கொள்ள மாகாணசபை வீழ்ச்சியின் பின் சிலர் ஒதுங்கிச் செல்ல, பத்மநாபா கொலையுடன் தலைமை சுரேஷ் பிரேமச்சந்திரன் கைக்கு மாறியது. அதன்பின் ஏற்பட்ட முக்கியமான பிரிவு-அல்லது விலகல் ராசீக் குழுவினர் இராணுவத்துடன் இணைந்து கொண்டது. ஆயினும் தற்போது ஏற்பட்டிருக்கும் பிளவுதான் அதற்கு அதிக சோதனையைத் தரப்போகும் மற்றோர் நிகழ்வாகத் தோன்றியுள்ளது. ஈ.பி.ஆர்.எல்.எஃப். இல் மட்டுமல்ல இலங்கையின் முதலாவது தமிழ் முதலமைச்சராக தமிழ் மக்களுக்கும், சர்வதேச மட்டத்திலும் நன்கு பிரபல்யமான பிரமுகரான வரதராஜப் பெருமாள், அதன் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரனால் இடைநிறுத்தப்பட்டுள்ளமையே அப்பிளவின் விளைவு. அதன் தொடர்ச்சியாக இனிமேல் பல சர்ச்சைகள் அரங்கேறவுள்ளதையும் இந் நிகழ்ச்சி கட்டியம் கூறியுள்ளது.

ஒன்பது மாதங்களின்முன் திடீரென இலங்கை வந்தார் வரதர். அவர் வந்ததன் காரணம் பற்றி பலவாறு ஊகிக்கப்பட்டாலும் உட்கட்சி முரண்பாடும் ஒரு காரணமாகவே கருதப்படுகிறது. அவர் வருவதற்குமுன் கட்சிக்குள் நிலவி வந்த முரண்பாடு அவர் வந்ததும் கூர்மையடைந்தது. அவர் செயற்பட ஆரம்பித்ததும் பதட்டம் ஏற்படத் தொடங்கியது. அவர் சந்திப்புக்கள் நிகழ்த்தியதும் சந்தேகம் கிளம்பியது. அவர் வெளிவந்து பேட்டி கொடுத்ததும் குளப்பம் ஏற்பட்டது. சுரேஷ் பிரேமச்சந்திரனின் தேர்தல் நிலைப்பாட்டை வரதர் அவரது தனிப்பட்ட கருத்தெனக்கூறியதுடன் பிரச்சனை வெடித்தது. வரதரை இடைநிறுத்தியுள்ளதாக சுரேஸ் அறிவித்துவிட்டார்.

இதில் வரதர் தரப்பினரின் வாதம் காங்கிரஸ் 3 வருடமாகக் கூடாத நிலையில் சுரேஷ் தற்காலிக செயலாளராகவே இயங்குகிறார், அவருக்கு வரதரை விலத் தும் அதிகாரம் இல்லை என்பதும், கட்சியின் அரசியற் பீடம், மத்தியகுழு, பொதுக்குழு அங்கத்தவர்களில் பெரும்பான்மை தம்பக்கமென்பதுமாக இருக்கிறது. சுரேஷ் தரப்பினரோ, கட்சியின் பெரும் பான்மை தம் பக்கமே உள்ளதாகவும், அங்கீகரிக்கப்பட்ட அதிகாரமுள்ள தலைவர் இன்றும் சுரேஷ்தான் எனவும் கூறி, வரதர்கட்சி முடிவின்றிய செயற்பாடுகளை மேற்கொண்டதாகக் குற்றம் சாட்டுகின்றனர். இந்த இழுபறி எப்படி முடியப்போகிறதோவென மக்கள் பதைபதைப்புடன் காத்துக் கொண்டிருக்கவில்லை. அந்தளவுக்கு மக்களின் எதிர்காலம் இவர்களில் தங்கியில்லை. மாறாக, இவர்களின் எதிர்காலம்தான் மக்களில் தங்கியுள்ளது. இவர்களா எமக்குத் தலைமை தரப்போகிறார்கள் என்ற வெறுப்பைத் தான் இத்தகைய சில்லறைத்தனமான உட்கட்சிச் சண்டைகள் சம்பாதித்துக் கொடுக்கும். இவ் உட் கட்சிச் சண்டையில் கோட்டு, வளக்கு என்று அலைந்தால் இன்னும் நாறும்.

அத்தோடு ஈ.பி.ஆர்.எல்.எஃப். என்ற பெயரைக்கூட இருவரும் பாவிக்கமுடியாதவாறு தடையுத்தரவு போடப்பட்டால் சில காலத்தில் கட்சி இருந்த இடம் தெரியாமலும் போய்விடலாம்.

இதேபோல் டக்ளஸ் தேவானந்தாவின் ஈ.பி.டி.பி கட்சிக்குள்ளும் முரண்பாடுகள் தோன்றியுள்ள. சில காலத்துக்கு முன்னர் அவரது கட்சியின் இரு பாராளுமன்ற உறுப்பினர்களான ரமேஸ்வரன் ராமமூர்த்தி ஆகியோர் கட்சிக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கி இறுதியில் கட்சியிலிருந்து விலத்தப்பட்டனர். அண்மைக் காலமாக கட்சியின் நடவடிக்கைகளிலிருந்து ஒதுங்கியிருந்த



மாணிக்கதாஸன்

அசோக்-பத்மன்- என்ற மற்றும் இரு பாராளுமன்ற உறுப்பினர்கள் இறுதியாக நடந்த அவசரகாலச்சட்ட வாக்கெடுப்பில் கட்சி முடிவை மீறி எதிர்த்து வாக்களித்துள்ளனர். அவர்கள் கட்சியை விட்டு விலகி கனடா சென்று குடியேறவுள்ளதாகவும் அதற்கான முன்னேற்பாட்டு நடவடிக்கைதான் இது வெனக் கருதப்படுகிறது.

இப்படிப் பார்க்கையில் ஏறத்தாழ எல்லாத் தமிழ்க் கட்சிகள், இயக்கங்களிலும் உட்கட்சிப் பிளவுகள் ஒரு பொதுவான வியாதியாகப் பீடித்துத் தான் உள்ளன. பெரிய இயக்கம் சிறிய இயக்கம் என்ற வேறுபாடில்லாமல் யாவற்றிலும் தொனித்துள்ளன. ஏன் சிறிய இயக்கமாக இருந்த என்.எல்.எஃப்.ரி இயக்கத்தில்கூட பிளவு ஏற்பட்டு, பி.எல்.எஃப்.ரி என்ற மற்றொன்று தோன்றியது. கட்சிகள், இயக்கங்கள் பெரிதாக வளர்ந்து சென்றாலும் பிளவுகள் ஏற்படுகின்றன. சிறிதாகச் சுருங்கிச் சென்றாலும் பிளவுகள் ஏற்படுகின்றன. எனவே இப் பிளவுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் என்ன என்பதை ஆராயத் தோன்றுகிறது. அடுத்தவாரம் அதையும் சற்று ஆராய்வோமா!

**சத்தியன்**

# மில்லேனியம் ஜனாதிபதி யார்?

# அரசியலிலும் தொடரும் 'ரோஸ்மீட் இல்ல' விளையாட்டு

அலசுவது - இராஜதந்திரி

உலகம் முழுவதுமே புதிய நூற்றாண்டை வரவேற்கத் தயாராவதை அவதானிக்க முடிகின்றது. பிறக்கப்போகும் ஆண்டு வெறுமனே ஒரு நூற்றாண்டு மட்டுமல்ல; இரண்டாயிரமாவது ஆண்டாகவும் விளங்குகின்றது. இதன் காரணமாகவே ஆங்கிலத்தில் 'மில்லேனியம்' என்ற பெயரைக்கூட புதிய ஆண்டு பெறுகிறது.

குரங்கிலிருந்தே மனிதன் தோன்றியதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் ஆதாம்-ஏவாள் என்ற ஜோடியே புவியின் முதல் மனிதப் பிறவிகள் என்று ஆன்மீக வாதிகள் குறிப்பிடுகின்றனர்.

எது எப்படியிருந்தபோதிலும், மானிட வரலாறென்பது கற்காலம் முதற்கொண்டு இன்றைய கம்பியூட்டர் காலம்வரை போரும், பூசல்களும் நிறைந்தவையாகவே காணப்படுகிறது.

கற்களை ஆயுதமாகப்பாவித்து தனது போரிடும் மனோபாவத்தை வளர்க்க ஆரம்பித்த மனிதன், இன்று கம்பியூட்டர்கள் மூலமாக இராணுவ



நடவடிக்கைகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளான்.

போரே வாழ்வாகவும், அதுவே மானிடப்பரம்பல், நாகரிகங்களை இப்புவியில் பெரிதும் நிர்ணயிப்பதாகவும் விளங்கியிருந்தது.

படையெடுப்புக்கள், மற்றும் யுத்தங்கள் என்பவை புதிய குடியேற்றங்கள், இனக்கலப்புகள் என்பவை தோன்றவும் வழியமைத்தன.

ஆயினும் காலப்போக்கில் மகான்கள் என்று கூறப்பட்ட சமயப் பெரியார்களும், தத்துவ ஞானிகள், தீர்க்க தரிசனம்மிக்க அரசியல் சிந்தனையாளர்கள், ஆக்கபூர்வமாகச் சிந்திக்கத் தெரிந்த ஆராய்ச்சியாளர்கள் ஆகியோர் இப் புவியில் அவதரித்ததையடுத்தே மனித வரலாறு விலங்கியல் தன்மையிலிருந்தும் வேறுபடத் தொடங்கியது.

இரண்டாயிரமாவது ஆண்டு தோற்றம் பெறவுள்ள இத்தருணத்தில் புவியில் இருந்து ஏனைய கிரகங்களுக்கும் செல்வது குறித்த மனோதிடத்தை பெற்றுள்ள மானிட சமூகம், வியத்தகு சாதனைகளை விஞ்ஞான உலகில் புரிந்துவருகின்றது.

அதேசமயம் எண்ணிப்பார்க்க முடியாதவாறு அழிவுகளையும், அவலங்களையும் ஏற்படுத்துவதில்கூட மானிடர்கள் முனைப்பாக இருப்பதையும் அவதானிக்க முடிகின்றது.

இன,மத, பிரதேச ரீதியான பிரச்சனைகள் அரசியல், பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் என்பவை மானிட சமூகத்தை உலகளாவிய ரீதியில் மோதல்களுக்குள்ளாக்கி வருகின்றன.

இருப்பினும் இடையறாத கெடுபிடி யுத்தங்களிலிருந்தும் விலகி, ஒரு பரிபூரண உலக சகோதரத்துவத்தைக் கொண்டிருப்பதற்கான முயற்சிகள்கூட காத்திரமாகவே சர்வதேச ரீதியாக மேற்கொள்ளப்பட்டு வருவதையும் நோக்க முடிகின்றது.

உலகில் ஒவ்வொரு நாடும் தனது அரசியல், விஞ்ஞான, பொருளாதார வளர்ச்சிக் கேற்ப புதிய மில்லேனியம் ஆண்டை வரவேற்கத்தயாராகி வருகின்றன.

ஆனால் இலங்கையைப் பொறுத்தவரை, கற்காலத்தில் மனிதர்கள் விலங்குகளைப்போன்று வாழ்ந்த ஒரு யுகத்திற்கே மீளவும் சென்றுவிட்ட தன்மையே காணப்படுகின்றது.

இலங்கையின் பண்டைய வரலாற்றின் ஒவ்வொரு கட்டத்தையும் பற்றிக்கூறும் பல்வேறு வரலாற்று நூல்களும் இருக்கின்றன.

இராஜதானிகள், சிற்றரசுகள், புகழ்பெற்ற மன்னர்கள், வீரம்மிக்க அரசர்கள் இலங்கையில் வாழ்ந்ததையும் வெளிநாட்டு படையெடுப்புக்கள், ஆக்கிரமிப்புக்கள் என்பவை இலங்கையிலும் நிகழ்ந்துள்ளதையும் அறியமுடிகின்றது.

ஆயினும் பிரிட்டிஷார் இலங்கையைக் கைப்பற்றியதையடுத்தே இலங்கையர்களது அறிவியல் சிந்தனையில் புதிய பரிமாணங்கள் தோன்றலாயின.

அரசியல், கல்வி, பொருளாதார விஞ்ஞான ரீதியாக-கட்டுக்கோப்புடன் சிந்திக்கும் சூழ்நிலைகள்கூட இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியையடுத்தே தோன்றலாயின.

இருப்பினும் இந்த அறிவியல் சிந்தனைகள் எவ்வளவு தூரம் இச்சின்னஞ்சிறிய தேசத்தில் ஆரோக்கியமான மானிட மேம்பாட்டுக்கு வழியமைத்துள்ளதென்பதே முக்கிய கேள்வியாக உள்ளது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக பிரிட்டிஷார் இலங்கையை ஆண்டிருக்கலாம். ஆனால் மறுபுறத்தே அந்த ஆட்சியே இலங்கையர்களை உலகளாவிய ரீதியான சவால்களுக்கு முகங்கொடுக்கக்கூடிய வகையிலும் தயார்படுத்தியிருந்தது.

பிரிட்டிஷ் ஆட்சியிலிருந்தும் சுதந்திரத்தைப் பெற்று இலங்கை தற்சமயம் அரை நூற்றாண்டு காலத்தைப் பூர்த்தி செய்துள்ளது. இந்த அரைநூற்றாண்டு காலத்தில்- அதாவது கடந்த 50 வருடகாலத்தில்-இரண்டாம் உலகயுத்தத்தின்போது சின்னாபின்னமாகி சிதறுண்டிருந்த நாடுகள் பலவும் தம்மை மீளவும் மிகக் காத்திரமாகவும், புதிய சவால்களைச் சந்திக்கக்கூடிய வகையிலுமே கட்டி எழுப்பியுள்ளன.

ஆனால் இலங்கையில் இனரீதியாக ஒரு போர்ச் சூழல் உருவாக்கப்பட்டு பிரிட்டிஷ் ஆட்சியில் மிக உயர்வாகவே பல்வேறு துறைகளிலும் ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்தி இன்று குன்றிக்குறுகி வருவதையே அவதானிக்க முடிகின்றது. இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சியில் சிங்களவர்களும் ஏனைய சிறுபான்மை இனமக்களும் சமத்துவமாகவே நடத்தப்பட்டனர்.

பிரிட்டிஷார் இலங்கையிலிருந்து வெளியேறியதும் தமது உரிமைகள், தனித்துவம், பிரதேசம் என்பவை பாதுகாக்கப்படவேண்டுமென்ற நியாயமான கோரிக்கைகளையே தமிழ் அரசியல் தலைவர்கள் முன்வைத்தனர்.

இக்கோரிக்கைகள் எவ்வகையிலும் உலக நியதிக்குப் புறம்பானவையோ அல்லது ஒவ்வாதவையோ அல்ல. ஆனால் பிரிட்டிஷாரிடமிருந்து பெற்ற சுதந்திரத்தை தமக்கு மட்டுமே உரியதாக சிங்களப் பேரினவாதிகள் கருதிக் கொண்டனர்.

அவர்களது இத்தகைய குறுகிய கண்ணோட்டமே இலங்கையில் இனப்பிரச்சனையை சிக்கலாக்கிவிட்டுள்ளதுடன், ஒரு நீண்ட இரத்தப் பிரவாகத்தையும் உருவாக்கிவிட்டுள்ளது.

எனவே இலங்கையில் 'மில்லேனியம்' ஆண்டென்பது இரத்தப்பிரவாகத்துடன் கூடியதாக, ஒரு புதிய நிறைவேற்று அதிகார ஜனாதிபதியின் தெரிவோடு பிறக்கவிருக்கின்றது

இப்புதிய 'மில்லேனியம் ஜனாதிபதி' யார்?

நீண்டு செல்லும் இரத்தம் தோய்ந்த இலங்கையின் இனப்பிரச்சனையை புதிய ஆண்டிலும் அவர் தொடரச் செய்வாரா? என்பவையே நாட்டு மக்கள் முன்பாக எழுந்துள்ள பிரதான வினாக்களாக இருக்கின்றன.

ஒரிருவரல்ல, பதின்மூன்றுபேர் இத்தடவை இலங்கையின் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடுகின்றனர். ஆனால் இவ் வேட்பாளர்கள் எவரிடமும் இலங்கையின் இனப்பிரச்சனையைத் தீர்ப்பதற்கான தீர்வுத்திட்டமெதுவும் இல்லை என்பதையே அவர்களது பிரசாரங்கள் வாயிலாகத் தெரியவருகின்றது.

ஆளுங்கட்சியான பொதுஜன ஐக்கிய முன்னணியின் வேட்பாளர் ஜனாதிபதி சந்திரிக்கா, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோருக்கிடையிலேயே இத்தடவை தேர்தலில் கடும்போட்டி நிலவும் என்பதை ஊகிக்கமுடிகின்றது.

இவ்விரு முக்கிய வேட்பாளர்களுமே தென்னிலங்கை அரசியலில் ஒரு புதிய அரசியல் சந்ததியை பிரதிநிதித்துவப்படுத்துவோராக இருக்கின்றனர். ஆயினும் அவர்களது அரசியல் சிந்தனைகளில் எதனையும் புதிதாகவோ அல்லது ஆக்க பூர்வமாகவோ எதிர்பார்க்க முடியாமலேயே இருக்கின்றது.

இலங்கையில் தமது பிரச்சனைகளை கௌரவமாகத் தீர்க்க விரும்பும் தமிழ் மக்கள் மட்டுமல்ல தென்னிலங்கையின் பெரும்பான்மை சிங்கள மக்கள்கூட இவ்விருதலைவர்கள் பற்றியும் அவநம்பிக்கை கொண்டுள்ளதையே காணமுடிகிறது.

சில வாரங்களுக்கு முன்னர் இலங்கையின் முக்கிய பௌத்த மதகுருவான மடியே பன்னாசிஹ தேரர் என்பவர், அரசியல் நடவடிக்கைகள் இலங்கையில் பித்துப் பிடித்துப் போயுள்ளன எனக்கூறியிருந்தார்.

அவரைத் தொடர்ந்து மற்றுமொரு பிரபல பௌத்த குருவான சோபித்த தேரர் என்பவர், எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பைப் பகிஷ்கரிக்கும்படியும், வாக்குச் சீட்டுக்களை கிழித்தெறியுமாறும் நாட்டுமக்களைக் கேட்டுள்ளார்.

தென்னிலங்கையின் அரசியல்வாதிகள் மீதும், அவர்களது நடவடிக்கைகள் குறித்தும் இப்பௌத்த குரு காரசாரமான கண்டனங்களை வெளியிட்டுள்ளதுடன், மக்களை தற்போதைய அரசியல் போக்குக்குறித்து விழிப்புடனிருக்கும்படியும் கேட்டுள்ளார்.

இவை தவிர தொடர்ந்து செல்லும் யுத்தத்தின் விளைவாகத் தோன்றிய விதவைகள், ஆதரவற்ற பெற்றோர்களின் அமைப்புக்கள் உயிரிழந்த மற்றும் ஊனமுற்ற ஆயுதப்படையினரது அமைப்புக்கள் என்பவைகூட, எதிர்வரும் தேர்தல் எவ்வகையிலும் தமக்குப் பயன்தரப்போவதில்லை என்றே தெரிவித்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் எதிரும், புதிருமாக இருக்கும் ஜனாதிபதி சந்திரிக்கா, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் சிறுபராயம் முதற்கொண்டு ஒருவரையொருவர் நன்கறிந்தவர்கள்.

ரணில் விக்கிரமசிங்கவும், அவரது கட்சியிலுள்ள ஜனாதிபதி சந்திரிக்காவின் சகோதரர் அநுரா பண்டாரநாயக்காவும், கொழும்பு ரோயல் கல்லூரியில் ஒன்றாக கல்வி பயின்றவர்கள். சிறுபராயத்தில் ரணில் விக்கிரமசிங்க கொழும்பு ரோஸ்மீட் பிளேஸிலுள்ள சந்திரிக்கா, அநுரா ஆகியோரது இல்லத்துக்குச் சென்று அவர்களுடன் ஒன்றாகக்கூடி விளையாடுவாராம்.

இன்று அரசியலில்கூட ஏதோ ஒரு வடிவில் அன்றைய 'ரோஸ்மீட்பிளேஸ்' விளையாட்டையே- அப்பாவி நாட்டுமக்களைப் பகடைக்காய்களாக வைத்து சந்திரிக்காவும், ரணிலும் விளையாடி வருவதைக் காணமுடிகின்றது.

இலங்கையின் இன்றைய முக்கிய பிரச்சனையாக இருப்பது வடக்கு-கிழக்கு இனப்பிரச்சனையாகும். நாட்டின் அனைத்து மூலவளங்களையும் இப்பிரச்சனை பாழாக்கி வருகின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வு தொடர்பாக புதிய 'மில்லேனிய'த்தினுள் பிரவேசிக்கவுள்ள இவ்விரு முக்கிய அரசியல்வாதிகளும் எத்தகைய தீர்வுத் திட்டத்தையும் கொண்டிருக்கவில்லை என்பதே தெட்டத் தெளிவு.

ஜனாதிபதி சந்திரிக்கா கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டில் இனப்பிரச்சனைக்குத் தீர்வொன்றைக் கண்டு சமாதானத்தை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டே பெருவெற்றி பெற்றார்.

ஆனால் தமிழர்களைப் பொறுத்தவரை சமாதானத்துக்குப் பதிலாக சாபக்கேடான ஓர் அரசியலே கடந்த ஐந்தாண்டுகளில் நிலவியிருந்தது.

இதேவேளை எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதித் தேர்தலுக்குப் புதியவராக இருக்கலாம். ஆயினும் கடந்த இருபது வருட காலமாக இலங்கை அரசியலில் முக்கிய பங்காற்றியவராகவே ரணில் விளங்குகின்றார்.

தமிழர் பிரச்சனை தொடர்பாக கடந்த ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி சந்திரிக்கா எதனைக் கூறினாரோ அதனையே தற்போது ரணில் கூறிவருகின்றார்.

இதன் மூலம் இலங்கைத் தமிழர் பிரச்சனையை அரசியலில் சவாரிவிடவே பெரும்பான்மை இன அரசியல் வாதிகள் பயன்படுத்துகின்றனரே தவிர, அப்பிரச்சனையைத் தீர்த்து வைக்க அவர்கள் விரும்பவில்லை என்பதே தெளிவாகியுள்ளது.

பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்ற பின்னர் கடந்த 50 வருடங்களில் மூன்று தடவைகள் இலங்கையில் அரசியலமைப்புக்கள் கொண்டுவரப்பட்டன.

இம் மூன்றிலும் தமிழ் மக்களது பிரச்சனைக்குரிய தீர்வு காணப்பட்டிருக்கவில்லை.

ஒவ்வொரு தடவையும் இனப்பிரச்சனைத் தீர்வு குறித்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் போதெல்லாம் தமிழ் மக்கள் நிறையவே எதிர்பார்ப்புகளைக் கொண்டிருந்தனர்.

அத்துடன் ஆட்சிமாற்றங்கள் ஏற்படும்போது கூட தமக்கு விமோசனம்



கிடைக்குமென்றே எதிர்பார்த்தனர். ஆனால் 'இலவுகாத்த கிளி'யின் கதையாகவே அவர்களது இந்த எதிர்பார்ப்புகள் விளங்கின.

எதிர்காலத்தில் இலங்கையின் இனப்பிரச்சனைத் தீர்வுகுறித்து செயலாற்றும் புதிய 'மில்லேனியம்' ஜனாதிபதி 'முள்ளின் மேல் வீழ்ந்த சேலை'யை அகற்றும் பாங்கிலேயே நடக்க வேண்டியிருக்கும்.

இனிமேலும் இனப்பிரச்சனையைக் காலந்தாழ்த்துவது அல்லது அப்பிரச்சனையில் சவாரி விடுவது என்ற 'ஜம்பங்கள்' எவ்வகையிலும் பலிதமாகாது என்பதையே புதிய ஜனாதிபதி உணர வேண்டியிருக்கும்.

ஏனெனில் இலங்கையின் இனப்பிரச்சனை இராணுவ ரீதியான அழுத்தங்களைப் பெரிதும் கொண்டதாகவே இருக்கின்றது.

அத்துடன் இலங்கையின் இனப்பிரச்சனை குறித்து எட்டப்படக்கூடிய தீர்வு பற்றி இலங்கையர்கள் மட்டுமல்ல, சர்வதேச சமூகமும், அச்சமூகத்தைச் சார்ந்துள்ள புலம்பெயர்ந்த தமிழர்களும்கூட மிக உன்னிப்பாகவே கவனித்து வருகின்றனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் யுத்த அநர்த்தங்களால் பாதிப்புக்களை அனுபவித்தோராகவே இருக்கின்றனர்.

இலங்கையில் இனப்பிரச்சனை கௌரவமான முறையில் தீர்க்கப்படும் பட்சத்தில் தமது பிறப்பிடங்களில் சென்று அமைதியாக மீளவும் வாழவேண்டுமென்றே புலம்பெயர்ந்தோர் எதிர்பார்த்திருக்கின்றனர்.

எனவே 'மில்லேனியம்' என்ற புதிய சகாப்தத்தில் தெரிவாகவுள்ள இலங்கையின் அடுத்த ஜனாதிபதி யார்? அவர் எப்படி நடந்து கொள்வார்? என்று தமிழ் மக்கள் பொறுத்திருந்தே பார்க்கவேண்டியுள்ளது.

முன்புபோல எவரையும் நம்பி மோசம் போக அவர்கள் தயாராக இல்லை என்பதையே வடக்கு-கிழக்குத் தமிழர்களின் உணர்வலைகள் மூலம் ஊகிக்க முடிகின்றது.

# உண்மைத் தொடர்

## அதிர் இடி 89

### கடந்தவாரம்

அந்தப்புரத்து அழகிகளை வாயில் வந்தபடி திட்டி விட்டு மாளிகை திரும்பிய அமீனுக்கு மிக முக்கியமான தகவல் வந்து சேர்ந்தது. எண்டபே விமான நிலையத்தில், ஃபிரான்ஸ் எயார் வேய்ஸ் விமானம் ஒன்றினை பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் மக்கள் முன்னணியினர் கடத்தி வந்து தரை இறக்கியிருப்பதாக அச் செய்தி கூறியது. இஸ்ரேலியப் பயணிகள் உட்பட 300 பணயக் கைதிகள் பிடிபட்டிருப்பதாகவும் அச்செய்தி தெரிவித்தது.

அரபு நாடுகளினதும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்தினதும் நல்லுறவைப் பெறக் கிடைத்த ஒரு சந்தர்ப்பமாக இதனைப் பயன்படுத்த அமீன் திட்டமிட்டான். பணயக் கைதிகளைக் கண்காணிக்க சுகாதார அமைச்சர் சியம்பா எண்டபே வருகிறார்.

இனி...

# இடி அமீன்

பாலஸ்தீன விடுதலை இயக்கத்தின் கம்பாலா கிளை அலுவலக ஊழியர்கள், எண்டபே விமான நிலையத்தை முன்னதாகவே சென்றடைந்து விட்டனர். ஃபிரான்ஸ் கநாட்டு விமானத்தில் பயணித்தவர்களில் பெரும்பாலானோர் இஸ்ரேலியர்கள் என்பதனால்தான் அவ் விமானத்தை பாலஸ்தீன விடுதலைப் படையைச் சேர்ந்தவர்கள் கடத்தியுள்ளனர். ஆனால் இவ்விமானத்தைக் கடத்திய குழுவினரில் பாலஸ்தீனர்கள் அதிகம் இருக்கவில்லை.

இக்கடத்தலுக்குத் தலைமை தாங்கியவர் ஒரு பெண், அதுவும் ஜெர்மன் நாட்டைச் சேர்ந்தவர். அத்துடன், ஏற்கனவே முரசு வாசகர்களுக்கு நன்கு அறிமுகமான வெனிஸுலா நாட்டைச் சேர்ந்த கெரில்லா போராளி கார்லோசும் இணைந்திருந்தான்.

எண்டபே விமான நிலையத்தின் பழைய கட்டடம் ஒன்றில்தான் பணயக் கைதிகள் 300 பேர் வரை வைக்கப்பட்டிருந்தனர். அக்கட்டடம் ஒரு குதமாகப் பயன்படுத்தப்பட்டு வந்தது. கதவுகள், யன்னல்கள் யாவும் உடைந்து கிடந்தன. சுவர்களும் பராமரிப்பின்றி உடைந்து, மை உரிந்து காணப்பட்டன. மலசலகூடங்கள் தண்ணீர் வசதி ஏதுமற்றுக் காய்ந்து கிடந்தன. பயணிகள் பாவினைக்காக சில வருடங்களுக்கு முன்னர் சிறப்பாகப் பொருத்தப்பட்டிருந்த இருக்கைகள் யாவும் ஒழுங்கில்லாமல் தகர்ந்து போய்க் கிடந்தன. பணயக் கைதிகள் யாவரும் தங்களுடன் எடுத்து வந்திருந்த கைப்பைகளில் வைத்திருந்த துணிமணிகளை வைத்துச் சமாளித்து, அழுக்கடைந்த தரைகளில் விரித்து, முடங்கிக் கிடந்தனர்.

கம்பாலாவிலுள்ள பா.வி.இயக்கப் பொறுப்பதிகாரி, டாக்டர் சியம்பாவையும் உடன் வந்திருந்த மருத்துவக் குழுவினரையும் வரவேற்று பணயக் கைதிகள் இருந்த இடத்துக்கு அழைத்துச் சென்றார். கடத்தல் குழுவின் தலைவர் என்று ஒருத்தரை டாக்டர் சியம்பாவிடம் பாலஸ்தீன இயக்கக் கிளைத் தலைவர் அறிமுகப்படுத்தினார். அவருக்கு கை கொடுத்த சியம்பா, அதிர்ந்தார். அவர் கை குலுக்கிய நபர் தலைவர் அல்ல; தலைவி என்பதை அறிந்து கொண்டார். 'கவர்ச்சியான உடல்வாகும், பால்வடியும் முகமும் கொண்ட இப்பெண்ணா இந்தச் சாகசச் செயலுக்குத் தலைமை தாங்கினார்?' என்று சியம்பா திகைப்படைந்தார். அப்பெண்ணின் கரத்தை ஸ்பரிசித்த டாக்டர், அதில் பெண்மைக்குரிய மென்மையைக் காணவில்லை. அக் கை கரடு முரடாக இருந்தது. கண்களில் கண்டிப்பு' பளிச்சிட்டது.

'இப்பெண் இடி அமீனின் கண்களில் அகப்படலாகாதே!' என்பதுதான் சியம்பாவின் முதல் பிரார்த்தனையாகவிருந்தது. நீலவர்ணச் சட்டையும் சிகப்பு வர்ண குட்டைப்பாவாடையும் அணிந்திருந்தாள். வலது விலாப்புறம் கைத்துப்பாக்கி ஒன்று தொங்கிக் கொண்டிருந்தது. சியம்பாவை அப்பெண்ணுக்கு அறிமுகப்படுத்தியவர், அவர் ஓர் அமைச்சர் என்பதைக் குறிப்பிட்டார். இதிலிருந்தே உகண்டா அரசாங்கம் தங்கள் கடத்தல் பணிக்கு ஆதரவு வழங்குகிறது என்பதை உணர்ந்து முறுவலித்தாள். தன்னுடைய முழுப்பெயரையும் சியம்பாவிடம் கூறுவதற்கு அவ்வம்மையாரின் உதடுவரை பெயர் வந்தது; ஆனால் திடீரென மறைந்து போயிற்று "I am Miss Hijacker "(நான்தான் செல்வி கடத்தல்காரி) என்று கூறி நிறுத்திவிட்டார்.

அப்பெண்ணின் பெயர் காபிரியல் குரோச்சே-ரியட்மான். ஜெர்மன் நாட்டுப் பயங்கரவாதக் குழு ஒன்றுடன் தொடர்புள்ளவள். ஒரு தடித்த மட்டையைக் குழல் போல் சுருட்டித் தன் வாயில் பொருத்தி, பயணிகளின் உடல் நிலையைக் கண்காணிப்பதற்காக மருத்துவ உதவியாளர்கள் வந்திருப்பதாகவும், உதவி தேவைப்பட்டவர்கள் வேண்டிய உதவிகளைப் பெற்றுக் கொள்ளுமாறும் ஆங்கிலத்திலும் அரபு மொழியிலும் காபிரியல் கூறினாள். ஓர் இஸ்ரேலியப் பயணி அதனை ஹீப்ருமொழியில் மொழிபெயர்த்துக் கூறினார்.

அறிவித்தலைக் கேட்டதும், சகல பயணிகளுமே நோயாளிகளாக மாறிவிட்டமையே வேடிக்கையாகவிருந்தது. பெரும்பாலும் அவர்களை மன நோய்தான் பாதித்திருந்தது. டாக்டர் சியம்பா ஒரு கடிதத்தை எழுதி ஒரு வண்டிச் சாரதியிடம் கொடுத்து மேலும் இரு மருத்துவர்களையும் ஐந்து தாதிமாரையும் அனுப்பி வைக்குமாறு மருத்துவத்துறை இயக்குநருக்கு அனுப்பிவைத்தார். அந்த உதவி வந்து சேர மாலையாகி விட்டது. இதற்கிடையில் பயணிகளின் மத்தியிலும் மூன்று டாக்டர்கள் இருந்தார்கள். அவர்களும் உதவினார்கள்.

பணயக் கைதிகள் அக்கட்டடத்துக்குள் வந்து 12 மணித்தியாலங்கள் ஆகிவிட்டன. அவர்களுக்கு மதிய உணவு மட்டுமே அரைகுறையாக வழங்கப்பட்டிருந்தது. பலர் அவ்வுணவை உட்கொள்ளவில்லை. பெரும்பாலானோருக்கு தலைவலிக்கான மாத்திரைகளும் மலேரியாத் தடுப்பு மாத்திரைகளுமே வழங்கப்பட்டன. இரவு முழுவதும் பலரும் தூங்காமல் முணுமுணுத்த வண்ணமே கிடந்தனர்.

சில பெண்கள் தங்கள் அதிருப்தியை வெளிப்படுத்தும் பொருட்டு, கண்ட கண்ட இடங்களில் மலம் சலம் கழித்து அசிங்கப்படுத்தினர். சில இளம் சோடிகளுக்கிடையில் காதல் மலர்ந்தது. இவர்கள் சோடி சோடியாக இணைந்து, மூலை முடுக்குகளைத் தேடிப் பிடித்து, இன்ப விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

முதல் நாள் பொழுது ஒரளவு அமைதியாக முடிந்தது. அடுத்தநாள் பொழுது ஜூன் 29, செவ்வாய்க்கிழமை, பலதரப்பட்ட பிரச்சனைகளைச் சுமந்த வண்ணம் புலர்ந்தது.

## தருவது அழகன்

ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த மூன்று பெண்கள் பலத்த சப்தம் போட்டவண்ணம் சகலரையும் துயிலெழுப்பினர். "இவ்வாறு அடங்கி ஒடுங்கி இன்னும் எத்தனை நேரம், இந்த நாற்றக் கிடங்கில் முடங்கிக் கிடப்பது? எழுந்து வாருங்கள். இங்கு காவலுக்கு நிற்கும்... வர்களை அடித்துவிட்டு விமானத்தில் ஏறுவோம்!" என்று அவர்களில் ஒரு பெண் கூக்குரலிட்டாள். அவள் பேசிய மொழி தெரிந்த சிலர் அந்த அம்மையாரின் கூக்குரலுக்கு ஆதரவு தெரிவிப்பதுபோல ஒத்துக்குரல் எழுப்பினர்.

ஒரு மூலையில் கிடந்த ஓர் உடைந்த இருக்கையில் சுருண்டு கிடந்த காப்ரியல் கண்விழித்தாள். கூக்குரலிட்ட வண்ணமிருந்த பெண் அருகில் சென்று முறைத்தாள். அப்பெண் பெட்டிப் பாம்புபோல் அடங்கி கீழே அமர்ந்து கொண்டாள்.

★★

அமீன் தனது மாளிகையின் முன் மண்டபத்தில் முன்னும் பின்னும் உலாவிய வண்ணம் பெரும் ஆலோசனையில் ஆழ்ந்திருந்தான். அவனுடைய நிர்வாக அலுவலகத்தில் புதிதாகச் சேர்த்துக் கொள்ளப்படவிருந்த தென் ஆபிரிக்காவைச் சேர்ந்த இளம் பெண் ஒருத்தி, கட்டளைக்காகக் காத்துக்கொண்டிருந்தாள்.

ஃபுளோரா என்ற பெயருடைய அப்பெண், தென் ஆபிரிக்கப் பெண்ணுக்கும் வெள்ளைக்காரத் தந்தைக்கும் பிறந்தவள். அவளுடைய கலப்பினத் தோற்றம், அமீனின் இரசனைக்கு விருந்தாக இருந்தமையினால், அவளை உடனடியாகவே வேலையில் சேர்த்துக்கொள்ள முடிவெடுத்தான். நிர்வாக அலுவலகத்தில் வரவேற்பாளர் பதவியிலிருந்த பெண் ஓய்வு பெற்றுச் சென்றமையினால், புதிதாக ஓர் ஆளை அப்பதவிக்கு நியமிக்க வேண்டியிருந்தது. அலுவலகத்தில் பல்வேறு பணிகளில் இருப்பவர்களில் ஒருத்தருக்கே வரவேற்பாளர் பதவி கொடுப்பது வழக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்டிருந்தது. தனது அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்களின் முகங்களைப் பார்த்துப் பார்த்து அமீனுக்குச் சலிப்பு ஏற்பட்டுவிட்டது. ஆகவே சில புதிய முகங்களைச் சேர்க்க விரும்பினான்.

புகைப்படங்களுடன் விண்ணப்பிக்குமாறு விளம்பரம் கொடுக்க வேண்டும் என்று அமீன் பணித்திருந்தான். நேர்முகப் பரீட்சைக்கு முன்னர், விண்ணப்பங்களையும் புகைப்படங்களையும் தன்னிடம் அனுப்பிவைக்குமாறும் அமீன் தனது அலுவலக இயக்குநருக்குக் கட்டளையிட்டிருந்தான். அதன்படி அமீனிடம் அனுப்பி வைக்கப்பட்ட விண்ணப்பங்களிலிருந்து ஃபுளோராவின் விண்ணப்பந்தை எடுத்து, அப்பெண்ணை உடனடியாக வேலைக்குச் சேர்க்கும்படி கட்டளையிட்டிருந்தான். நேர்முகப்பரீட்சைக்குத் தன்னிடம் அப்பெண்ணை அனுப்பிவைக்கும்படியும் கேட்டிருந்தான்.

ஃபுளோரா ஜனாதிபதி அலுவலகத்துக்கு வந்ததும் அவளை ஒரு வண்டியிலேற்றி, உடனடியாக அமீன் இருந்த மாளிகைக்கு அனுப்பிவைத்தார்கள். அவளை அமீனிடம் அனுப்பிவைப்பதற்கு முன்னர், அலுவலக அதிகாரி தொலைபேசி மூலம் அமீனுக்கு அறிவிக்க ஏனோ தவறிவிட்டார். இதனால்தான் அமீன் கடுங்கோபம் கொண்டிருந்தான்.

கலப்பு மணத்தில் பிறந்த அந்தக் கன்னி, அமீன், அவளுடைய படத்தில் பார்த்ததைவிட பல மடங்கு அழகுடனும் பொலிவுடனும் காணப்பட்டாள். அவளைக் கண்டதும் அமீனின் ஆசை வெறி தலைக்கேறியது. ஆனால் அந்தச் சந்தர்ப்பத்தில் எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

விமானத்தைக் கடத்திய பா.வி. இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், பணயக் கைதிகளை விடுவிக்க விதிக்கப்படவிருக்கும் நிபந்தனைகளையிட்டு அமீனுடன் ஆலோசனையிலீடுபடுவதற்காக அமீனின் மாளிகைக்கு அப்போது வந்து கொண்டிருந்தார்கள் என்ற தகவலறிந்து, அதற்கான ஆயத்தங்களைச் செய்துவிட்டுக் காத்திருந்தான். அவர்கள்தான் வருகிறார்களோ என்று தனது இருக்கையிலிருந்து எழுந்த அமீனுக்கு ஃபுளோரா வந்து இறங்கியதைக் கண்டதும் தலை சுற்றியது.

(இடி தொடரும்)



# ஸ்டைல் மன்னனும் அதிரடி மன்னனும்



புத்தாயிரம் ஆண்டில் பல புதிய திட்டங்களைச் செயல்படுத்த பலர் காத்திருக்கின்றனர். ரஜினியின் திட்டம் என்ன தெரியுமா? அரசியலில் இறங்கப் போகிறார் என்று நீங்கள் நினைத்தால் அது தவறு.

அதிரடி மன்னன் ஜாக்கிசானுடன் இணைந்து படமொன்றில் நடிக்கப் போகிறார். ரஜினிக்கு இப்போது ஜப்பானில் உள்ள செல்வாக்குப் போல, தமிழ் இரசிகர்கள் மத்தியில் ஜாக்கிசானுக்கு செல்வாக்கு உண்டு.

ஸ்டைல் மன்னனும் அதிரடி மன்னனும் விரைவில் சந்தித்துப் பேசவுள்ளார்கள். அதன்பின் இருவரும் இணைந்து நடிக்கும் படம் பற்றிய அறிவிப்பு வெளியாகும்.

# தடல்புடலான வரவேற்பு



'பே வோட்ச்' தொலைக்காட்சித் தொடர் மூலம் உலகெங்கும் பிரபலமானவர் பமீலா அண்டர்சன், செயற்கை முறையில் மார்பகங்களைப் பெரிதாக்கிக்கொண்ட பமீலா அண்டர்சன், சமீபத்தில் செயற்கை மார்பகங்களை மீண்டும் சிறிதாக்கிக் கொண்டார்.

அண்மையில் அமெரிக்காவில் நடைபெற்ற அழகுப் போட்டி ஒன்றுக்கு அழைக்கப்பட்டார் பமீலா.

அப்போது அவரை அசத்துவதற்காக, அவர் முன்பு கொண்டிருந்த பெரிய மார்பகங்களுடன் அவரைப் போன்றதொரு பிளாஸ்டிக் பொம்மை ஒன்றைச் செய்து வைத்திருந்து வரவேற்றனர்.

தடல்புடலான வரவேற்புத்தான் போங்கள்!

# அழகிப் போட்டியும், எதிர்ப்பும்




இந்த நூற்றாண்டின் இறுதி உலக அழகிப்போட்டி இந்த மாதத் தொடக்கத்தில் இலண்டனில் உள்ள ஒலிம்பியா அரங்கில் நடைபெற்றது. 94 அழகிகள் கலந்துகொண்ட இந்தப் போட்டியில் இந்தியாவைச் சேர்ந்த யுக்தா முகி உலக அழகியாகத் தெரிவு செய்யப்பட்டார்.

உலக அழகிப் பட்டத்தை வென்றதன் மூலம் யுக்தா முகிக்கு ஒரு இலட்சம் அமெரிக்க டொலர் (நம்நாட்டு மதிப்பில் 73 இலட்சம் ரூபா) பரிசாகக் கிடைத்தது.

உலக அழகிப் பட்டத்தை இதற்கு முன்னர் மூன்று இந்திய அழகிகள் வென்றுள்ளனர். யுக்தா முகி நான்காவது அழகி. 60களில் ரீட்டா ஃபரியாவும், 94ல் ஐஸ்வர்யா ராயும், 97ல் டயானா ஹெய்டனும் உலக அழகிப் பட்டத்தை வென்றவர்கள்.

இந்த முறையும் உலக அழகிப்போட்டி பலத்த எதிர்ப்புகளுக்கிடையில்தான் நடந்து முடிந்தது. போட்டி நடந்த அரங்கிற்கு வெளியே 'ஆபாசமான கால்நடைச் சந்தைகளை நிறுத்துங்கள்' என்ற சுலோகங்களை ஏந்தியவாறு மகளிர் அமைப்பைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள்.

இம்முறை அழகிகள் நீச்சலுடையில் வலம்வருவது தவிர்க்கப்பட்டது. அதற்குப் பதிலாக மால்ட்டா கடற்கரையில் அழகிகள் உலாவிய வீடியோ காட்சி படமாக்கப்பட்டுப் பார்வையாளர்களுக்குத் திரையிடப்பட்டது.




# சிங்கப்பூரில் சிம்ரான் காட்




சிங்கப்பூர் நாட்டில் உள்ள தொலைபேசி நிறுவனம் வெளியிட்டுள்ள புதிய தொலைபேசி அட்டை (காட்)யில் சிம்ரானின் படம் பிரசுரமாகியுள்ளது.

இதற்கு முன் தொலைபேசி அட்டையில் சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் படம் மட்டுமே பிரசுரமாகியிருந்தது. ரஜினிக்குப் பின் சிங்கப்பூர் தொலைபேசி அட்டையில் சிம்ரானின் படம் மட்டுமே வெளியிடப்பட்டுள்ளது.

அத்துடன் தொலைபேசி அட்டையில் வெளியிடப்பட்ட முதல் தமிழ் நடிகையின் படம் சிம்ரானுடையதுதான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# அழகுப் பாட்டி




ஒன்பது முறை திருமணம் செய்து சாதனை படைத்தவர் ஹொலிவூட் நடிகை எலிசபெத் டெய்லர். இவர் இப்போது கொள்ளுப் பாட்டி ஆகியிருக்கிறார்.


இதுவரை காலமும் இரகசியமாக இருந்து வந்த இவருடைய மகனின் மகன் மூலம் கொள்ளுப்பாட்டி ஆகியுள்ளார் எலிசபெத் டெய்லர்.

தனது உடல் நிலை சரியில்லாத நிலையிலும் கொள்ளுப் பேரனைக் காண சக்கர நாற்காலி மூலம் மருத்துவமனைக்குச் சென்றார் இந்த அழகுப்பாட்டி.

# பெரிய்ய்ய்ய்ய பந்து



↑ ‘பெரிய பந்தொன்றை வடிவமைத்திருக்கிறார்கள். இந்த இராட்சசப் பந்து உலக சாதனைகளைப் பதிவு செய்யும் கின்னஸில் இடம்பெறுவது நிச்சயம்’ என்று நினைத்திருப்பீர்கள். இப்படி நீங்கள் நினைத்திருந்தால் அது தவறு. இது பெரிய பந்து அல்ல; இங்கிலாந்து நாட்டின் வானிலை ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள சட்டர்லைட் இது. அதன் மேற்பகுதியை சுத்தம் செய்கிறார் ஒருவர்.




# குதிக்கப் போகிறார்

↑ பிரேஸில் நாட்டின் தலைநகர் ரியோ டி ஜெனிரோவில் கோர்கோவடோ என்ற மலை உச்சியில் இயேசு கிறிஸ்து நாதருடைய பெரிய சிலை ஒன்று உள்ளது.

இந்தச் சிலை 100 அடி உயரமுள்ளது. கடல் மட்டத்தில் இருந்து இது 747 மீட்டர் உயரத்தில் உள்ளது. இந்தச் சிலையின் கைப்பகுதியில் ஏறி நிற்கிறார் ஒருவர். இவரது பெயர் ஃபெலிக்ஸ் பாம் காட்னர்.

ஒஸ்ரிய நாட்டைச் சேர்ந்த ஃபெலிக்ஸ், பாரசூட்டில் மூலம் இயேசு கிறிஸ்துவின் சிலையில் இருந்து குதிப்பதற்குத் தயாரானபோது எடுக்கப் பட்டது இந்தப் படம்.


# கிட்டார் கார்



→ முரசின் தகவல்பெட்டியில் பல்வேறு விதமான கார்களைப் பார்த்திருப்பீர்கள்- வேகம், வடிவமைப்புப் போன்ற பல்வேறு விதங்களில். படத்தில் இருப்பது- கிட்டார் இசைக்கருவி வடிவில் அமைக்கப்பட்டுள்ள கார்.

கடந்தமாதம் 17ம் திகதி ஜெர்மனியில் ‘ஏசியன் மோட்டார் கண்காட்சி’ நடைபெற்றது. அந்தக் கண்காட்சியில் இந்தக் கார் அனைவராலும் கவரப்பட்டு முதலாம் இடத்தைத் தட்டிக் கொண்டது.

இந்தக் காரை அமெரிக்கா கெலீ வூட் நிறுவனம் வடிவமைத்தது. (பட உதவ. அகமட் நியாஸ்-அஸாம் அலி)



# விற்பனையில் சாதனை

↑ உலகில் இதுவரை இல்லாத விலைக்கு விற்பனையாகியுள்ளது இந்த பொக்கெட் கடிகாரம். இது 72 கோடி ரூபாய்க்கு நியூயோர்க் நகரில் ஏலத்தில் விற்கப்பட்டுள்ளது. இதற்கு முன் 1989ல் 21 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டதே சாதனையாக இருந்தது.

இவ்வளவு விலைக்கு ஏலம் போனதற்கு என்ன காரணம்?

இது 1925ம் ஆண்டு தயாரிக்கப் பட்ட கடிகாரம். இந்தக் கடிகாரத்தில் 900 தனிப்பாகங்கள் உள்ளன. இதில் 430 நட்டுக்கள், 110 சக்கரங்கள், 120 இதரவகைக் கருவிகள் உள்ளன.

பழைய கடிகாரங்களைச் சேகரிக்கும் பிரமுகர்களிடையே இக்கடிகாரத்திற்கு அதிக வரவேற்பு இருந்தது. எனவே இது பலத்த போட்டிகளுக்கிடையே ஏலம் போனது.

# தணியாத தாகம்



← தாய்லாந்து நாட்டின் லொப்பூரி நகரில் வருடந்தோறும் குரங்குகள் கலந்து கொள்ளும் குரங்குவிழா நடைபெறுகிறது.

விழாவில் கலந்து கொண்ட குட்டிக்குரங்கு ஒன்று கடைசிச் சொட்டு பெப்சி குளிர்பானத்தையும் விடாமல் குடிக்கிறது. தாகம் தணியவில்லை போலும்.

# தகவல் பெட்டி

## மந்திரக் குட்டைகள்

↘ குண்டானவர்கள் ஒல்லியாகலாம்; ஒல்லியானவர்கள் குண்டாகலாம். குழந்தையில்லாதவர்கள் குழந்தை பெற்றுக் கொள்ளலாம். அடடே இப்படிப்பட்ட திறமையான வைத்தியர்கள் உள்ள ஆஸ்பத்திரி எங்கேயுள்ளது என்று ஆச்சரியமாகவுள்ளதா?

பெருநாட்டின் தலைநகர் லீமாவுக்கு 40 கிலோ மீட்டர் தொலைவில் சிலிக்கா என்ற கிராமம் உள்ளது.

அங்கு சேறும் சகதியுமாகவுள்ள 3 குட்டைகள் உள்ளன. இந்த மந்திரக் குட்டைகளில் உள்ள சேற்றை உடல் முழுவதும் பூசிக்கொண்டு உருண்டு புரண்டால் மேற்சொன்னவை நடக்குமாம்.

வேற்றுக் கிரகவாசிகளால் இந்தக் குட்டை ஆசீர்வதிக்கப்பட்டதால் இந்தக் குட்டைகள் மந்திர சக்தி உள்ளவை என்று சிலிக்கா மக்கள் நம்புகின்றனர்.

நோய்களைத் தீர்க்கும் இந்த மந்திரக்குட்டைகளில் புரண்டு எழுவதற்காக வெளிநாடுகளில் இருந்து படையெடுத்துச் செல்கிறா,’ களாம்.



# நதிகளின் பின்னணியில்

'முதல்வன்' படத்தில் முதலில் ரீ.வி. படப்பிடிப்பாளராகவும் பின்னர் நிருபராகவும் நடித்த அர்ஜுன், தற்போது வஸந்த் இயக்கும் 'ரிதம்' படத்தில் பத்திரிகை ஒன்றின் புகைப்படப்பிடிப்பாளர் வேடத்தில் நடித்து வருகிறார்.

இப்படத்தில் கவிஞர் வைரமுத்து 'நதியே...நதியே...காதல் நதியே...' என்று தொடங்கும் பாடல் ஒன்றை எழுதியுள்ளார். இந்தப் பாடல் காட்சி இந்தியாவில் ஓடும் அனைத்து நதிகளின் பின்னணியிலும் படமாக்கப்பட்டு வருகிறது.

# தேவயாணிக்கு ஏற்பட்ட வேதனை

இதுவரை சுமார் இருபத்தைந்து படங்களுக்கு மேல் நடித்து முடித்துவிட்டார் தேவயானி. குடும்பப்பாங்கான காதல் கதை கொண்ட படங்களில் நடிப்பதால் 'காதல் தேவதை' என்ற அடைமொழி அவர் பெயருக்கு முன்னால் ஒட்டிக்கொண்டு விட்டது.

தமிழில் 'தொட்டாச்சிணுங்கி' படம் மூலம் அறிமுகமாகி முன்னணி நடிகையாகி இருக்கும் தேவயானி தனக்கு ஏற்பட்ட வேதனையைக் கூறுகிறார்.

"நான் படிக்கிறப்போதான், 'கோயல்' என்ற இந்திப் படத்தில் முத முதல்ல நடிக்கிற சான்ஸ் வந்தது. ஆனா... படம் பாதியில் நின்னு போச்சு. இப்ப நான் பிஸியா நடிச்சிக்கிட்டிருந்தாலும் அப்போ எனக்கு ஏற்பட்ட வேதனையை மறக்க முடியல."

# பாலச்சந்தரின் எண்ணம்

இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் இயக்கிய படங்களும் சரி, தயாரித்த படங்களும் சரி மேல்தட்டு மற்றும் நடுத்தட்டு இரசிகர்களைத் தாண்டி கீழ்தட்டு இரசிகர்களைச் சென்றடைவதில்லை இதில் ரஜினி நடித்த படங்கள் விதிவிலக்கு என்ற கருத்து உண்டு.

இதை நீக்க தனது அடுத்த படத்தை இராமநாராயணனை வைத்து இயக்குகிறார் கே. பாலச்சந்தர். இதன் மூலம் அனைத்துத் தரப்பு இரசிகர்களையும் சென்றடையும் என்பது பாலச்சந்தரின் எண்ணம்.


'ராஜகாளியம்மன்' என்ற இந்தப் பக்திப் படம் இராம நாராயணன் இயக்கும் 101 வது படம். இதில் அம்மனாக ரம்யா கிருஷ்ணன் நடிக்கிறார். மற்றும் கரண், கௌசல்யா, வடிவேலு ஆகியோர் நடிக்கின்றனர்.

# தெலுங்கு நாயகி தமிழில்

ஷிவானியின் தாய் மொழி தெலுங்கு. நாயகியாக அறிமுகமானது கன்னடத்தில். மளமளவென்று பதினேழு படங்களில் கதாநாயகியாக நடித்திருக்கும் இவர் இப்போது தமிழ்ப்படமொன்றில் அறிமுகமாகிறார்.

'யாரடா நீ மன்மதா' என்பது படத்தின் பெயர். கதாநாயகன் பிரபுதேவா. 'யாரடா நீ மன்மதா'வில் மன்மதன் பிரபுதேவாவுக்கு ஜோடி ரதியாக ஷிவானி நடிக்கிறார்.

பாதியில் நின்றுபோன 'விண்ணோடும் முகிலோடும்' படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக நடித்த ஷிவானிக்கும் இந்த ஷிவானிக்கும் எந்த சம்பந்தமுமில்லை.



ஷாருக்கான்

## மூன்று மொழிகளில் கனவு

[illegible]



கார்த்திக்-கௌசல்யா
படம்: சந்தித்தவேளை

# ஷாருக்கானின் ஆசைகள்

இந்தி நடிகர் ஷாருக்கானின் ஆசைகளில் ஒன்று கமலுடன் நடிப்பது. 'ஹேராம்' படத்தில் கமலுடன் அவரது இயக்கத்திலேயே நடித்தும் விட்டார்.

'தில்சே' படத்தில் மணிரத்னத்தின் இயக்கத்தில் நடித்த ஷாருக்கிற்கு இன்னொரு ஆசையும் இருந்தது. ஷங்கரின் இயக்கத்தில் நடிப்பதே அந்த ஆசை.

இந்தி 'முதல்வன்' மூலம் அதுவும் நிறை வேறப் போகிறது.



இஷாக் கோபிகர்-சங்கீதா
படம்: ஜெயம்

# கடுங்குளிரில் நடனம்

பார்த்திபன்-பிரபுதேவா இணைந்து நடிக்கும் 'ஜேம்ஸ்பாண்டு' படத்தின் படப்பிடிப்புக்கள் துரிதகதியில் நடந்து வருகின்றன. வரும் ஜனவரியில் படத்தை வெளியிடத் திட்டமிட்டிருப்பதால் தான் இத்தனை வேகம்.

அண்மையில் இப்படத்தின் படப்பிடிப்புக்கள் இந்தியாவில் சிக்கிம் மாநிலத்தில் உள்ள கேன் டாக் என்ற பனிமலையில் படமாக்கப்பட்டன. இந்தப் பனிமலையில் 14 ஆயிரம் அடி உயரத்தில் உள்ள இராணுவ முகாமில் இரண்டு பாடல் காட்சிகள் படமாக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே அதிக உயரத்தில் உள்ள இராணுவ முகாம் என்ற சிறப்பையும் இந்த இராணுவ முகாம் கொண்டுள்ளது.

கடுங்குளிரில் நடந்த இப்படப்பிடிப்பில் பிரபுதேவாவும், ரேணு தேசாயும் பின்னிப் பிணைந்து நடனமாடினார்கள்.

# மினி சினி

♣ பிரபு-கௌசல்யா இணைந்து நடிக்கும் 'கை பொறந்தாச்சு' படத்தை இயக்குபவர் வேல்முருகன். இவர் அண்மையில் வெளியான 'நேசம் புதுசு' படத்தை இயக்கிய வேல்- கார்த்திக் இரட்டையர்களில் ஒருவரான வேல் என்பவராவார்.

♣ கே.எஸ். ரவிக்குமார் தயாரித்து இயக்க கமல் கதாநாயகனாக நடிக்கவுள்ள புதிய படத்தில் கமலுக்கு ஜோடியாக நடிக்க கேரள ரசிகர்குமாரிடம் முயற்சி செய்து வருகிறார் ரம்பா.

♣ கார்த்திக் கதாநாயகனாக நடிக்க, அகத்தியன் இயக்க, பிரகாஷ்ராஜ் தயாரிப்பதாக இருந்த 'பூப்போல மனசு' படம் கைவிடப்பட்டு விட்டதாகத் தெரிகிறது.

♣ ஷங்கர் இயக்கத்தில் வெளியாகி வெற்றிநடை போடும் 'முதல்வன்' இந்தியில் தயாராகவுள்ளது. இதில் ஷாருக்கான் கதாநாயகனாக நடிக்கிறார். 'ஷக்கலக்க பேபி...' பாடலுக்கு கலக்கல் நடனமாடிய சுஷ்மிதா சென் நாயகியாக நடிக்கிறார்.

♣ ஊர்களின் பெயர்களில் படங்கள் வருவது ஒன்றும் புதிதல்ல. 'பம்பாய்', 'ராஜஸ்தான்', 'ஊட்டி' ஆகிய படங்களைத் தொடர்ந்து 'பெங்களூர்' என்ற பெயரில் புதிய படமொன்று தயாராகவுள்ளது.

♣ 'வெற்றிக்கொடி கட்டு', 'சந்தித்தவேளை', 'ஜேம்ஸ் பாண்டு', 'வானத்தைப்போல', 'முகவரி' இவையெல்லாம் இஷா கோபிகர் கதாநாயகியாக நடிப்பதாக இருந்து, பின்னர் கைநழுவிப்போன படங்கள்.

♣ 'சொல்லாமலே' படத்தை இயக்கிய சசி அடுத்த வருடம் ஆரம்பத்தில் படமொன்றை இயக்கும் பணியில் ஈடுபட்டு வருகிறார். இப்படத்தில் அஜித்குமார் கதாநாயகனாக நடிக்கவுள்ளார்.

♣ விக்ரமன் இயக்கத்தில் விஜயகாந்த் இரட்டை வேடத்தில் நடிக்கும் படம் 'வானத்தைப் போல.' இதில் இளவயது விஜயகாந்திற்கு ஜோடியாக மீனா நடித்து வருகிறார். வயதான விஜயகாந்திற்கு ஜோடியாக வினிதா நடிக்கிறார்.

♣ 'சுந்தரபுருஷன்', 'வி.ஐ.பி' போன்ற வெற்றிப்படங்களை இயக்கிய சபாபதி நீண்ட இடைவெளிக்குப்பின் படமொன்றை இயக்குகிறார். இதில் பார்த்திபன் கதாநாயகனாக நடிப்பார் எனத் தெரியவருகிறது.

♣ 'ஹலோ' படத்தில் பிரசாந்திற்கு ஜோடியாக அறிமுகமான ப்ரீத்தி அறிமுகமானது ஒரு மலையாளப் படத்தில். இவரது இரண்டாவது படம் தெலுங்கு, மூன்றாவது படம்தான் தமிழில் வெளியான 'ஹலோ'. நான்காவதாக இப்போது இவர் இந்திப் படமொன்றில் நடித்து வருகிறார்.



முரளி-ரோஜா
படம்: ஊட்டி

# காதோடு சொல்லுகிறோம்

'தேவ நடிகை இப்போது புதுமுடிவுக்கு வந்துள்ளாராம். இனிமேல் ஒரே நேரத்தில் இரண்டு படங்களில் நடிக்கக்கூடாது என்பதுதான் அந்த முடிவாம். ஒரே சமயத்தில் இரண்டு படங்களில் நடிக்கும்போது, இரண்டு படங்களின் ஹீரோக்களும் இரவில் 'டின்னருக்கு' அழைக்கிறார்களாம். இதைத் தவிர்க்கத்தான் இந்த முடிவாம்.

இரண்ட கனவுப் படத்தைத் தயாரித்த நிறுவனம் நீண்ட காலத்தின்பின் மறுபடி படத்தைத் தயாரிக்க விரும்பியது. இதற்காக முன்றெழுத்து இளம் நாயகனை அணுகியது. நடிகரோ ஒன்றரைக்கோடி ஊதியம் கேட்டாராம். தயாரிப்பாளரோ எழுபத்தைந்து லகரம் வரை பேசியிருக்கிறார். ஆனால் நடிகர் ஊதிய விஷயத்தில் பிடிவாதமாக இருந்ததால் தயாரிப்பாளர் திரும்பி விட்டார். இதனபின் வெளியான நடிகரின் 3 படங்களும் மக்களின் 'நெஞ்சினிலே' நிற்கவில்லை.

புரட்சிகரமான ஹீரோ இரட்டை வேடத்தில் நடிக்கும் படத்தில் எண்ணெய் வள நாட்டில் இருந்து நடிக்க வந்து, மார்க்கெட் இல்லாமல் இருக்கும் நடிகையும் நடித்து வருகிறார். இப்படத்தில் புரட்சிகரமான ஹீரோவுடன் இரண்டு ஹீரோக்களும் நடித்து வருகின்றனர். இவர்களுடன் முறை வைத்து அன்பைப் பொழிந்து வருகிறாராம் நடிகை.

தமிழில் கவர்ச்சி நாயகியாய் வலம் வந்த நடிகை அண்மையில் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொள்ள மதுரைக்குச் சென்றாராம். ஆனால் நிகழ்ச்சி தொடங்க முன்னரே அரசியல் பிரமுகர் ஒருவரைச் சந்திக்கத் தனியாகப் போய் விட்டார். ஒரு வழியாக நிகழ்ச்சி முடிவடையும் நேரத்தில் அங்கு ஆஜராகி விட்டாராம். 'பாதியில் எங்கு போனீர்கள்?' என்று பக்கத்தில் இருந்தவர்கள் கேட்க அந்த சில மணி நேர 'பொற்காலம்' 'சங்கதியைச் சொல்ல முடியாமல் அசடு வழிந்தாராம்.

# மந்தாராவின் ...

குழந்தை நட்சத்திரமா... மந்தரா. 'பரியம்' படத்தி... முன்னணி நடிகர்களு... படங்களில் நடிக்கு... இயக்குநர் என்று அ... வாய்ப்புக்கள் குவிந்தன.

அதுமட்டுமன்றி தெ... ராசி என்று மாற்றிக்கொ... பெறவே. பெயரைப் போ...

'பரியம்' படத்தில் இ... நட்சத்திரமாக குடும்ப... நினைத்த போது. மந்த...

இதனால் கோட... படங்கள் எதுவும் வர...

திரையுலக மறுபக்கம் 130 — தமிழ்நாட்டிலிருந்து மயன்

# இளம் பெண்ணுடன் இயக்குநர் உல்லாசம்!

கிராமத்துக் கதைகளை 'மண்வாசனை'யுடன் இயக்குவதில் பெயர் பெற்ற இயக்குநர் இவர். அதேபோல் பெண்கள் விஷயத்திலும் மனிதர் கில்லாடிதான்.

தான் இயக்கும் படங்களில் புதுமுகங்களையே கதாநாயகியாக அறிமுகப்படுத்துவார். முதலில் அவர்களைத் தன் இச்சைகளுக்குப் பயன்படுத்திக்கொண்ட பின் தான், படங்களில் பயன்படுத்திக் கொள்வார்.

அண்மையில் இவர் காதலின் 'நினைவுச்சின்னம்' படத்தை இயக்கிக் கொண்டிருந்தபோது, இவரது அலுவலகத்தில் வேலை செய்யும் இளம்பெண் இவரின் கண்ணில் பட்டார்.

விடுவாரா இயக்குநர்? கதை டிஸ்கஷனுக்கென்று பிரபல ஹோட்டல் ஒன்றில் ரூம் எடுத்தார். உதவிக்கென்று அந்த இளம்பெண்ணையும் அழைத்துக்கொண்டு சென்று விட்டார்.

## உல்லாசம்

ஹோட்டலில் பெண் உதவியாளருடன் இயக்குநர் உல்லாசமாக இருந்தார். இது இயக்குநரின் மனைவிக்குத் தெரியவர மனைவி கொதித்தெழுந்தார்.

தவறு செய்த கணவரையும், அவருக்கு ஆசையை ஏற்படுத்திய பெண்ணையும் கண்டித்தார். பெண்ணை வேலையை விட்டு நீக்கியும் விட்டார்.

ஆனாலும் இயக்குநரின் நினைவைவிட்டு அந்தப் பெண் அகலவே இல்லையாம். அதனால் தனது மனைவியிடமே தன் எண்ணத்தை வெளிப்படுத்தினார் இயக்குநர்.

"அவள் இல்லாவிட்டால் என்னால் இருக்க முடியாது. இதற்கு நீ சம்மதிக்காவிட்டால் உன்னால் என்னைப் பார்க்க முடியாது" என்று அந்தப் பெண் மீதுள்ள மோகத்தை வெளிப்படுத்தினார் இயக்குநர்.

## அனுமதி

இதனால் பயந்து போன அவர் மனைவி,

"அவளுடன் நீங்கள் எப்படி வேண்டுமானாலும் இருந்துவிட்டுப் போங்கள். ஆனால் அவளைத் திருமணம் செய்து கொள்ளவதோ, இரண்டாவது மனைவி என்று சொல்லிக்கொள்ளவதோ கூடாது.

அப்படி நீங்கள் ஏதாவது செய்தால் என்னை உயிருடன் பார்க்க முடியாது" என்று சொல்லிவிட்டாராம்.

மனைவியின் அனுமதி கிடைத்ததும், மீண்டும் அந்தப் பெண்ணைச் சந்தித்து நட்பைப் புதுப்பித்துக்கொண்டவர், இப்போது அந்தப் பெண்ணுக்காக சென்னையிலேயே ஒரு பங்களாவும், ஒரு காரும் வாங்கிக் கொடுத்து, அந்தப் பெண்ணுடன் அதிகமான நேரங்களைச் செலவிட்டு வருகிறாராம்.

இயக்குநர், அந்தப் பெண் மீதுள்ள மோகத்தால் அவருக்காக கண் மண் தெரியாமல் செலவு செய்து வருகிறார். போகிற போக்கைப் பார்த்தால் அந்தப் பெண்ணால் இயக்குநர் விரைவிலேயே போண்டியாகி விடுவார் போல் தெரிகிறது. □

# 'என்னம்மா கண்ணு'

சத்யராஜ் படங்களில் அதிக தடவை பேசிய பிரபலமான வசனங்களில் ஒன்று 'என்னம்மா கண்ணு'. இப்போது இதுவே ஒரு படத்திற்கு தலைப்பாகி, இதில் கதாநாயகனாக சத்யராஜை நடிக்கவைத்துள்ளனர்.

வித்தியாசமான கதையமைப்புடன், அனைத்துத் தரப்பினரையும் கவரும் அம்சங்களுடன் கதை, திரைக்கதை, வசனம் எழுதி இயக்குநராக அறிமுகமாகிறார் ஷக்தி சிதம்பரம்.

பல முன்னணி இயக்குநர்களிடம் உதவியாளராகப் பணியாற்றிய அனுபவம் இவருக்குண்டு.

சத்யராஜிற்கு ஜோடியாக முதன்முறையாக தேவயானி இப்படத்தில் நடிக்கிறார். ரஞ்சித், வடிவேல், 'கலைமாமணி' விஜய், பொன்னம்பலம், வையாபுரி, தாமு ஆகியோருடன் கீதான் என்ற புதுமுக நடிகையும் அறிமுகமாகிறார்.

பல வித்தியாசமான வேடங்களில் நடித்துள்ள சத்யராஜ் 'என்னம்மா கண்ணு' படத்தில் 'தாதா'வாக அதிரடி நடிப்பில் இறங்குகிறார். இப்படத்தின் படப்பிடிப்புகள் அடுத்த வருட ஆரம்பத்தில் தொடங்குகின்றன.



ஸ்ரீகணேஷ்-மந்த்ரா — தேவயானி

படம்: புதுக்குடித்தனம்



உதய-பிரேமா

படம்: தேவி

## அர்ஜுனுடன் ரம்பா

# துணிக்கைக்குத் தப்புமா?

பிரபல தெலுங்கு நடன இயக்குநர் கிருஷ்ணா, படங்களையும் தயாரித்து வருபவர். இவரது தயாரிப்பு நிறுவனத்தில் இணை இயக்குநராக இருந்தவர் ஜெகதீஷ் ரெட்டி.

தமிழில் படமொன்றை இயக்குவதாக வந்து தயாரிப்பாளரானார். இவர் தயாரித்த படம்தான் 'காமா'. ஏகப்பட்ட எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி இரசிகர்களை ஏமாற்றிய படம். ஆனாலும் போட்ட முதலைத் திருப்பிக்கொடுத்தது 'காமா'.

இப்போது ஜெகதீஷ் ரெட்டி படமொன்றைத் தயாரிக்கத் தொடங்கிவிட்டார். இயக்குநரும் இவர்தான். படம் 'காமாக்னி'. படத்தின் பெயரே படம் எப்படிப்பட்டது என்று சொல்லிவிடும்.

இதில் கஷ்மிதா ராய் என்னும் புதுமுகம் திகட்டத் திகட்ட கவர்ச்சியை வாரி வழங்குகிறார். படம் துணிக்கைக்குத் தப்பி வருமா என்பது சந்தேகமே.

# ஷங்கர்

பிரபலமானவர்களின் பெயர்களைப் படங்களின் தலைப்புக்களாக்குவது ஒன்றும் புதிதல்ல. அதிலும் திரையுலகில் பிரபலமானவர்களது பெயர்களும் படங்களுக்குத் தலைப்புக்களாவதுண்டு.

'மணிரத்னம்', 'இளையராஜா' இது பின்னர் 'இனிய ராஜா' என்று மாற்றப்பட்டது என்பவை சில உதாரணங்கள். இந்த வரிசையில் பிரபல இயக்குநர் ஷங்கரின் பெயரும் புதிய படமொன்றுக்கு வைக்கப்பட்டுள்ளது.

நாகார்ஜுன் நடித்த தெலுங்குப் படமொன்று தமிழில் மொழி மாற்றப்பட்டு வருகிறது. அந்தப் படத்திற்கே 'ஷங்கர்' என்று பெயரிடப்பட்டுள்ளது. இப்படத்தில் நாகார்ஜுனுக்கு ஜோடியாக ஐஸ்வர்யா ராயும், ஆஞ்சலா ஜாவேரியும் நடித்துள்ளனர்.

# இந்தியில் வீரப்பன்

'சிவா' என்ற தெலுங்குப்படம் (தமிழில் 'உதயம்') மூலம் திரையுலகத்தினரைத் தன் பக்கம் திரும்ப வைத்தவர் ராம் கோபால் வர்மா. இவர் இப்போது தெலுங்குப் படங்களை இயக்குவதை நிறுத்தி இந்திப் படங்களை எடுத்து வருகிறார்.

ஆரம்பத்தில் இவர் இயக்கத்தில் வெளியான 'ரங்கீலா', 'சத்யா' பெரு வெற்றி பெற்றன. ஆனால் 'தவுட்', 'கௌன்' கடைசியாக வெளியான 'மஸ்த்' போன்றவை படுதோல்வி.

அதிரடியாக ஒரு வெற்றிப்படத்தைக் கொடுக்கவேண்டும். இல்லாவிட்டால் காணாமல் போக வேண்டிவரும் என்பதை உணர்ந்து கொண்டார் ராம் கோபால் வர்மா. 'ஜங்கிள்' என்ற படத்தை இப்போது இயக்கிவருகிறார்.

'ஜங்கிள்' படத்தின் கதை சந்தன வீரப்பனைப் பற்றியதாம். தமிழில் எத்தனையோ வீரப்பன் படங்கள் வந்துவிட்டன. இந்தி வீரப்பன் வெற்றி பெற்று வர்மாவின் விழுந்துபோன மார்க்கெட்டை மறுபடி நிமிர்த்துவானா?

# கதை நாயகன்

பி. வாசு இயக்கத்தில் பிரபு நடித்த 'என் தங்கச்சி படிச்சவ' படத்திற்கு கதை எழுதியவர் அன்டனி.

கிட்டத்தட்ட இதே போன்ற பேச்சுத் தமிழ்ப் பெயரான 'பத்தாங்கிளாஸ் பாஸாயிட்டேன்' என்ற படத்தை இயக்கி, கதாநாயகனாக நடித்து வருகிறார் அன்டனி. அத்துடன் இப்படத்தின் கதை, திரைக்கதை, வசனத்தையும் இவரே எழுதியுள்ளார்.

இதில் கதாநாயகியாக புதுமுகம் ஜனிதா நடிக்கிறார். இரண்டாவது கதாநாயகியாக இந்து நடிக்கிறார். இவர்களுடன் ராஜீவ், ஆர். சுந்தர்ராஜன், ஜெயகணேஷ், பொன்னம்பலம், சார்த்திமதி ஆகியோரும் நடிக்கின்றனர்.

## ...ரிவுக்குக் காரணம்...

...கை ஆரம்பித்து கதாநாயகியானவர் முன்னணிக்கு ...மாகி பிரபு, சத்யராஜ், அர்ஜுன் போன்ற ...ஜோடியாக நடித்தவர்.


... உடை விஷயத்தில் தாராளமாகவும், ஹீரோ... போவதாலும் மந்த்ராவுக்கு மளமளவென்று...

... படவுலகம் சென்றார். தனது பெயரை அங்கு ... இவர் நடித்த தெலுங்குப் படங்கள் வெற்றி ... ராசியான நடிகை என்று பெயரெடுத்தார். ...அறிமுகப்படுத்திய தயாரிப்பாளருடன் திருமணம் ...னார். இருவரும் திருமணம் செய்து கொள்ள ... பெற்றோர் அதைத் தடுத்து நிறுத்திவிட்டனர். ...என்று அலைந்ததில் மந்த்ராவுக்கு புதிதாகப ... அவரது மார்க்கெட்டும் சரிந்து விட்டது.



செண்பகம்

# காலத்தை வென்ற புகைப்படம்



↑ முதன்முதலாக ஆகாய விமானத்தைக் கண்டு பிடித்து, அதைப் பறக்கவிட்டுச் சாதனை படைத்தவர்கள் ரைட் சகோதரர்கள். அமெரிக்காவைச் சேர்ந்த ஓர்வில் ரைட், வில்பர் ரைட் ஆகிய இந்தச் சகோதரர்கள் 1903ம் ஆண்டு டிசம்பர் மாதம் 17ம் திகதி காலை பத்தரை மணியளவில் அமெரிக்காவின் வடக்கு கரோலினாவிலுள்ள கிட்டி ஹாக் என்ற இடத்தில் பறக்கவிட்டார்கள்.

விமானம் முதன் முதலாகப் பறந்தபோது எடுக்கப்பட்ட படம் இது. காலத்தை வென்ற இந்தப்படம், உலகப்புகழ்பெற்ற புகைப்படங்களின் வரிசையில் இடம்பெற்றுள்ளது.

## பாதைமாறிய பருவக் காதல்

நண்பரோடு சேர்ந்து
நாலுதெரு திரிந்த–ஞாபகம்
கோசுகளை–கண்டு
அவர் பின்னால் திரிந்த–ஞாபகம்
பருவ வயதினில்
காதல் கொண்ட–ஞாபகம்
கொண்ட காதலை மறைக்க
மறைவிடம் சென்ற– ஞாபகம்
இருவரும் சில நாட்கள்
ஊடல் கொண்ட–ஞாபகம்
உன் பெற்றோரையும்
என் பெற்றோரையும் எதிர்த்த–ஞாபகம்
வேலைக்காய் நீ யாழ் சென்றும்
எனக்கு மடல் வரைந்த–ஞாபகம்
பின் உன் மடல் மறைந்து
ஊரவர் கதை சொன்ன–ஞாபகம்
ஆமிக்காரர் உன்னை பிடித்ததாய்
அகிலன் சொன்ன–ஞாபகம்
காணாமல் போனவர் வரிசையில்
உன் பெயரைப் பார்த்த–ஞாபகம்
ராஜபக்ச மன்றில்
உண்மையைச் சொன்ன–ஞாபகம்
செம்மணியைத் தோண்டாது–அரசு
இழுத்தடித்த–ஞாபகம்
அண்மையில் நீதிபதி மாற்றத்தோடு
தோண்டியதாய் நாளிதழில் பார்த்த–ஞாபகம்
எலும்புக்கூடுகள் வெளிவந்ததாய்–ஞாபகம
உன் கூடும் செம்மணியில்
இருப்பதாய் ஊரவர் சொன்ன–ஞாபகம்
உனக்கென நானும்
பலவருடம் வாழ்ந்த–ஞாபகம்
மறந்து போனதே எனக்கு
எந்தன்–ஞாபகம்!

வன்னியூர். ஜெயச்சந்திரன்.

## "ஒக்கம இறங்கு!"

"உதென்ன புதிசாய்
நாயோட வாறான்?"
"தினம் காணும் புதினமிது
எடேய்! மன்னம் பிட்டியடா?"

அடியில் வைச்ச சாறன்
மேல வந்தாச்சி
தடவுன தடவுவையில்
வெகுநாளா வந்த கடி
நிண்டு போயாச்சி!

'சர்பத்' பார்த்தவுடன்
சமாதான ஞாபகம்
வேலியுள்ளே நான்–வெளி
வீதியில் கடைகள்:

"என்னண்ணன் முகைதீன்
எங்க இங்கால
பன்பாய் போல மூஞ்சி
சுருண்டு போச்சுதே?"

"செல்லிவேல இல்ல சினகா!
செரியான செக்கிங்!
கல்லிக் கல்லி வாப்பா
கைவேக்கும் பிஞ்சிபோச்சி."

"தீர்வுப்பொதியெண்டாலும்
திறந்துகாட்டோணும்!
தண்ணி பௌசர் என்றாலும்–நான்
தாமதித்தே போகோணும்!"

தமிழராய்ப் பிறந்த
தலைவிதியை–நொந்தவாறு
இது தினம் காணும்
புதினமடா தமிழா!

தர்மசுந்தரம் துஷ்யந்தன்–
மட்டக்களப்பு.

## பிறக்காத காதல்

சித்திரமாய் உனை வரைந்து
சீர் வரிசை ஏதும் இன்றி
பத்திரமாய் உனை காக்க
நினைத்தேன்!
ooo
நீயோ பாதியில் உறவை
முறித்துக் கொண்டாய்!
உள்ளத்தில் உனக்கென்று
ஓரிடம் வைத்தேன்!
ooo
நீயோ வேரிடம் பார்க்கிறாய்
நிலவுக்குக்கூட என்னை
பிடிக்கவில்லை போலும்
அதுதான் தேய்ந்து மறைகிறது!
ooo
நான் இருளில் இருக்க வேண்டும்
என்பதற்காகவே அமாவாசை வருகிறது.
சன்னதி சன்னதியாய் சென்று
தொழுதாலும் சாவு வருவது
நிச்சயமே. அது நம் காதலுக்கு
இல்லை காரணம்–அது
பிறக்கவே இல்லை!

ப. விஜேந்திரன்- ஹட்டன்.

## தேன் கிண்ணம்

## அநாதை

அழுகின்றது மழலையொன்று
அரவணைப்பதற்கு ஆளின்றி
அமுதூட்டி வளர்க்கும்
அம்மாவைப் பார்த்தோம்!
அவளின் தலை மட்டும்
ஆற்றங்கரை ஓரத்தில்.
★★
அறிவைக் கொடுக்கும்
அப்பாவைத் தேடினோம்!
அவரின் உடல் அங்கே
அணையாது எரியும் தீயில்!
★★
ஆடிப்பாடி மகிழ்ந்திடும்
அக்காவை நோக்கினோம்;
அம்மணக் கோலத்திலவள்
ஆலமரக் கிளையில்!
★★
அடக்கி வைத்திருக்கும்
அண்ணனைத் தேடினோம்;
அவனின் உயிரற்ற உடல்
அறைந்திருந்தது சிலுவையில்!
★★
ஆசையுடன் விளையாடும்
அன்பர்களைக் கேட்டோம்;
அவர்களோ எமதர்மனின்
அடங்காப் பிடியில்!
★★
அன்புடன் வளரவேண்டிய
அக்குழந்தை இன்று...
அநாதையாகக் கிடக்கின்றது
அமைதியற்று மண்ணில்.

எம். முஹாஜிரீன்-மாவடிச்சேனை.

## தேடுகிறேன்


தேடுகிறேன் தேடுகிறேன்
பூமி எங்கும் தேடுகிறேன்
••
பொங்கும் கடலில் தேடுகிறேன்!
பூகம்ப அதிர்வில் தேடுகிறேன்!
கண்ணி வெடிகுழியில் தேடுகிறேன்!
காற்றில் கலந்து தேடுகிறேன்!
••
புதைந்த புதார்களில் தேடுகிறேன்!
பங்கர் பள்ளத்தில் தேடுகிறேன்!
அகதி முகாம்களில் தேடுகிறேன்!
அநாதைபோல் அலைந்து தேடுகிறேன்!
••
மலைகளின் முகட்டில் தேடுகிறேன்!
மழுங்கிய மனங்களில் தேடுகிறேன்!
பங்கய மலரன்ன சமாதானமே
பதுங்கி நீ இருக்கும் இடத்தைச்சொல்!

கே.என்.ஏ.பெர்னாண்டோ–
நீர்கொழும்பு.

## பேனா நண்பர்கள்



பெயர்: ரி.ராஜா,
வயது: 27
முகவரி: P.O. BOX-6697
DOHA, QATAR.
பொழுது போக்கு:
பேனா நட்பு



பெயர்: எம். ரௌசான்,
வயது: --
முகவரி: P.O. BOX-10071
RIYADH-1143, K.S.A.
பொழுது போக்கு:
வழமையானவை

## நில்–கவனி–முன்னேறு

நாம் விரும்பும் வேலை கிடைக்க வேண்டும் என்றால், அந்த வேலைக்குத் தகுதியானவர்களாக நம்மை ஆக்கிக் கொள்ள என்ன முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறோம் என்பதனைத் தெளிவாகப் புரிந்துக் கொள்வது முக்கியமாகும்.

வேலையைப் பெறுவதற்குத் திட்டமிட்ட முயற்சிகள் என்னென்ன மேற்கொண்டிருக்கிறோம் என்பதனையும் ஆராய்ந்து பார்க்கவேண்டும்.

ஒரு வேலைக்கு நாம் முயற்சி செய்து அது கிடைக்காதபோது ஏன் கிடைக்கவில்லை என்று நம்மை நாமே விமர்சனம் செய்து பார்த்துக் கொள்வது மிகவும் பயனுடையதாக இருக்கும்.

வேலையைத் தேர்ந்து தேடும் பொழுது தெளிவான குறிக்கோள் இருக்கவேண்டும். நீர் இழுத்துச் செல்லும் திசையில் செல்லுகின்ற பொருளைப்போல நாம் இருக்கக்கூடாது. நம்முடைய நினைவில் தெளிவு இருக்க வேண்டும். அப்பொழுதுதான்,

நாம் வேலையைக் கண்டு பிடித்துச் செயலாற்ற முடியும். காற்றடிக்கும் திசையில் பறக்கும் காகிதங்கள் போல இருப்பின் நமக்கென்று ஒரு வேலையையும் அமைத்துக் கொள்ளவே முடியாது.

ஒன்றை மனதில் நன்றாகக் கவனம் வைத்துக்கொள்ள வேண்டும். அது என்னவென்றால் நம்முடைய தகுதிக்கு ஏற்றபடிதான் வேலை கிடைக்கும். தகுதிக்கு உட்பட்டுதான் வேலையையும் செய்ய முடியும்.

ஆகவே வேலை கிடைக்க வேண்டும் என்றால் நம்முடைய தகுதியைப் பற்றி முதலில் தெளிவாக எடைபோட்டு வைத்துக்கொள்ள வேண்டும். தகுதியை வைத்துதான் நம்மை மற்றவர்கள் அளந்துப் பார்ப்பார்கள்.

எல்லா வேலைக்கும் தகுதியானவர்களாக நாம் இருந்துவிட முடியாது. இரண்டு விஷயங்களை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். ஒன்று அந்த வேலைக்குத் தகுதியானவர்களா என்பது. மற்றொன்று அந்த வேலை நமக்குப் பொருத்தமானதா என்பது.

நாம் எந்த வேலையைச் செய்வதில் மகிழ்ச்சியும் மன நிறைவும் கொள்கிறோமோ அந்த வேலையை விடாமல் தொடர்ந்து செய்ய வேண்டும். அப்பொழுதுதான் நாம் வெற்றி பெற முடியும்.

செய்யும் வேலையில் இன்பம் காண ஆரம்பித்து விட்டால் நீண்ட நேரம் வேலை செய்தாலும் களைப்போ சோர்வோ ஏற்படாது. அது நமக்கு வேலைப் போன்றே தெரியாது. இன்பமான விளையாட்டாகவே இருக்கும்.

இதற்கு தாமஸ் ஆல்வா எடிசன் சரியான உதாரணமாக இருக்கிறார். தொழில் உலகின் வாழ்வையே மாற்றி அமைத்து மகத்தான பெருமை பெற்றவர். பள்ளியில் பயிலாத



எடிசன் பத்திரிகையை விற்று சோதனைச சாலையில் சாப்பிட்டு கொண்டும், தூங்கிக் கொண்டும் ஒரு நாளைக்குப் பதினெட்டு மணி நேரம் வேலை செய்து கொண்டிருந்தார்.

அவர் இவ்வளவு நேரம் வேலையைச் செய்த போதிலும் அது அவருக்கு ஒரு வேலையாகவே தோன்றவில்லை. எடிசன் கூறினார், "நான் என்னுடைய வாழ்நாளில் ஒரு நாள்கூட வேலையைச் செய்யவில்லை. நான் செய்தது எல்லாம் வேடிக்கை விளையாட்டுத்தான்" என்று.

இதையே அமெரிக்க கோடீஸ்வரர் சார்லஸ்ஷ்வாப் வேறு விதமாக எடுத்துக் கூறுகிறார். "ஒருவன் தனக்கு அளவற்ற மகிழ்ச்சி இருக்கும். எந்தத் தொழிலிலும் வெற்றி பெற முடியும்" என்று.

நமக்கு விருப்பமான தொழில் எது என்பதை துளிகூட அறியாத நிலையில் இருக்கும் பொழுது எப்படி அந்தத் தொழிலின் மீது அளவற்ற உற்சாகம் கொள்ள முடியும்? நிச்சயமாக இன்பத்தைக் காணமுடியாது.

## இந்தவாரம் உங்கள் பலன்

ஜோதிடர் 'கர்னர்'

19.12.99 முதல் 25.12.99வரை

**மேடம்:**
சிறு சிறு பிணக்குகள் வார ஆரம்பத்தில் தோன்றிமறையும். பிற நாட்டுடனான தொடர்பு லாபகரமாக அமையும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். தொழில் மந்தமடையும். சகோதர வழியில் கருத்து மோதலைத் தவிர்ப்பது நல்லது.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 07, 09.

**இடபம்:**
அயலவர்களால் தொல்லை; வீண் பயப்பிராந்தி, இனசன சேர்க்கை, பிள்ளைகளினால் மகிழ்ச்சி. இருப்பிட மாற்றத்துக்கான சிந்தனைகள். ரோகிணி நட்சத்திரத்தாரின் உடல் நிலை தேறும்.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : சாம்பல்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 20, 27.

**மிதுனம்:**
உடல் நிலை பாதிக்கப்படும். யோசனைக்கு இடம் கொடுப்பது தவிர்க்கப்படவேண்டும். மனைவி மக்களுடன் அனுசரித்துப்போவது நல்லது. தூர உறவுகளால் தொல்லை தொடரும்.
அதிஷ்ட நாட்கள் : சனி, வியாழன்.
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சு; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 16, .9.

**கடகம்:**
நண்பர்கள் புறம் கூறுவார்கள். அமைதியைக் கடைப் பிடிப்பது நல்லது. கேளிக்கைகளில் ஈடுபாடு ஏற்படும். ஆலய தரிசனம். புத்திரரால் கவலை, பணவரவு.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, சனி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 04, 09.

**சிம்மம்:**
அரச பயம், பணச்செலவு, தொழில் மந்தம்.பெரியோர் உதவி வாகனச் சேர்க்கை; வயதான உறவினர் பற்றிய கவலை. வார இறுதியில் நிலமைகள் அநுகூலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்.
அதிஷ்ட நிறம் : இளஞ்சிவப்பு; எண்: 05.
அதிஷ்ட திகதிகள்: 03, 11.

**கன்னி:**
பெண்களுக்கு திருமணம் நிச்சயமாகும்; பெரியோர் உதவி; தொழில் சிறப்பு, பிள்ளைகள் பற்றிய கவலை. சகோதர வழியில் பிரச்சனைகள். அலைச்சல் மிகுதி.
அதிஷ்ட நாட்கள் : வியாழன், சனி.
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 08.
அதிஷ்ட திகதிகள்: 07, 11.

**துலாம்:**
குடும்பத்தில் பல மாற்றங்கள் கோபத்தைத் தவிர்க்கவும். சகோதரர்களால் தொல்லை; வீண் செலவு தொழில் சிறப்பு, பண வரவு.
அதிஷ்ட நாட்கள் : ஞாயிறு, வியாழன்.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 03.
அதிஷ்ட திகதிகள்: 12, 17.

**விருட்சிகம்:**
தொழில் சிறப்பு,நண்பர்கள் உதவி, வீட்டில் பிரச்சனைகள், வார இறுதியில் நன்மையான கைங்கரியங்கள் நடைபெறும். பிரயாண அனுகூலம்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : மஞ்சள்; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 12, 16.

**தனுசு:**
மனக்கவலை. ஓய்வின்மை. தேக சுகம் பாதிப்பு, திருமணப் பேச்சுக்கள், உறவினர் வருகை. வார இறுதியில் பல நன்மையான மாற்றங்கள் உண்டு.
அதிஷ்ட நாட்கள் : சனி. செவ்வாய்.
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 17, 21.

**மகம்:**
முயற்சி பலிதம், பிள்ளைகள் பற்றிய கவலை, தூர இடத்துச் செய்தியால் மன மகிழ்ச்சி, பிரயாணங்கள். விருந்தினர் வருகை, அலைச்சல்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 07.
அதிஷ்ட திகதிகள்: 05, 02.

**கும்பம்:**
வீண் அலைச்சல், சோர்வு, வார இறுதியில் தூர இடத்து உறவினர் வருகை. ஆலயதரிசனம். குடும்பத்தில் மகிழ்ச்சி.
அதிஷ்ட நாட்கள் :வெள்ளி, திங்கள்.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 02.
அதிஷ்ட திகதிகள்: 29, 30.

**மீனம்:**
இருப்பிட மாற்றம், தொழில் மந்தம், பணத்தட்டுப்பாடு, தேக சுகம். புதிய நண்பர்கள் சேர்க்கை. கேளிக்கை.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 09.
அதிஷ்ட திகதிகள்: 10, 13.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## தையல் மெஷினைப் பாதுகாக்க

**தை**யல் மெஷினை தூசி சேரவிடாமல் அடிக்கடி துணியால் துடைத்து வைக்க வேண்டும். உபயோகிக்காத சமயங்களில் அதை மூடியே வைக்க வேண்டும்.



அடிக்கடி தையல் மெஷினுக்கு எண ணெய் விட வேண்டும் உபயோகத்திலுள்ள மெஷினுக்கு வாரம் ஒரு முறையும், உபயோ கத்தில் இல்லாத மெஷினுக்கு மாதம் ஒரு முறையும் எண்ணெய்விட வேண்டும். எண்ணெய் விடும் பொழுது மெஷினிலிருந்து ஊசி, நூல், பெல்ட் ஆகியவற்றை நீக்கிவிட வேண்டும். மெஷினின் உள்பாகங்களுக்கு மட்டுமே எண்ணெய்விட வேண்டும் குறை வான எண்ணெயே விட வேண்டும்.

ஒரு சிறு பிரஷ் அல்லது பல் தேய்க்கும் பிரஷ்ஷால் இடுக்குகளில் மாட்டிக்கொண்டி ருக்கும் நூல் துண்டுகள், தூசுகளை எடுக்க வேண்டும்.

பொபினில் நூல் சுற்றும் பொழுது, ஊசி மேலும், கீழும் நகராதவாறு செய்து விட்டு பிறகு நூல் சுற்ற வேண்டும். இல்லா விட்டால் ஊசி உடைந்து விடும்.

ஒவ்வொரு தடவையும் தைக்கத் தொடங் கும் முன்பும் அல்லது பொபினில் நூல் சுற்றின பிறகு தைக்க ஆரம்பிக்கும் போதும் ஒரு சிறு துண்டு துணியை தைத்த பிறகு, தையல் சரியாக விழுவதைப் பார்த்த பிறகே நல்ல துணியில் தைக்க ஆரம்பிக்க வேண்டும்.

தைத்து முடித்த பின் துணியை கையால் இழுக்கக் கூடாது. அப்படிச் செய்தால் தையல் விட்டு விடும். நூலை கத்தரித்த பிறகு துணியை எடுக்கவும்.

தையல் சரியாக விழுகிறதா என்பதைப் பார்க்க இரட்டையாக மடித்த துணியின் மீது மட்டுமே தைத்துப் பார்க்க வேண்டும். ஒற்றைத் துணியில் தைத்தால் சரியாகத் தெரியாது.

தையல் மெஷினின் ஊசி துருப் பிடிக்கா மல் இருக்கிறதா என்பதை கவனித்துக் கொண்டே இருக்க வேண்டும். துருப்பிடித்த ஊசி தைக்கும் புதுத் துணியில் கறை ஏற்படுத்திவிடும். ■

## பயனுள்ள வீட்டுக் குறிப்புக்கள்

- துணிகளை அயர்ண் செய்யும் முன் அயர்ண் பொக்ஸின் அடிப்பகுதியில் இரண்டு சொட்டு-ஓடிக்கோலோனை பஞ்சினால் நனைத்து துடைக்கவும். பின் சூடு ஏறிய தும் அயர்ண் பண்ணினால் துணிகள் கமகமவென்று இருக்கும்.
- ஆணிகளை சிறிதுநேரம் கொதிக்கும் தண்ணீரில் போட்டு விட்டுப் பிறகு எடுத்து அடித்தால் சுவரிலோ அல்லது மரத்திலோ எளிதாக இறங்கும்.
- தோசைமாவில் சிறிதளவு பெருங்காயத் தூளைக் கலந்து தோசை சுட்டால் தோசை கமகமவென்று வாசனையாக இருக்கும்.
- பூசணிக்காயை அரியும்போது முத்து முத்தாக நீர் வழியும். அந்த நீரைக் குழந்தைகளின் புண்களில் தடவினால், புணகள் ஆறிவிடும்.
- பஞ்சில் சிறிது வேப்பெண்ணையைத் தோய்த்தெடுத்து சுவாமிப்படங்கள் மற்றும் இதர படங்களின் ஃபிரேம்களின்மீது தேய்த்தால் படங்களை எந்தவிதப் பூச்சிகளும் அரிக்காது. ■

## சில சிறு பிரச்சனைகள் நீங்க

● **மு**கப்பருக்கள் அதி கம் இருந்தால் ஐஸ் கரைத்த நீரால் முகத்தைக் கழுவினால் போதும்; பருக்கள் அகன்று விடும்.



- துளசி இலையை அரைத்து சிறிது மஞ்சள் சேர்த்து தேங்காய் எண்ணெயுடன் குழைத்து, பருக்கள்மீது தடவி, அரை மணி நேரம் கழித்து, பயத்தம் பருப்பு மாவில் தண்ணீர் கலந்து முகம் கழுவி வந்தால் முகப்பரு நீங்குவதுடன் கரும் புள்ளிகளும் மறைந்துவிடும்.
- இரவில் படுக்கைக்குப் போகும்போது பாதம் இரண்டிலும் விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெய் தேய்த்துக் கொண்டு படுத்தால்,உடலில் உள்ள அதி கப்படியான வெப்பம் தணிந்து கண்கள் குளுமை அடையும்.
- காலையில் எழுந்தவுடன் தும்மல் வந்தால் பச்சைக் கொத்தமல்லியை முகர்ந்ததும் தும்மல் போய்விடும்.
- தினமுமோ அல் லது வாரம் இரண்டு முறையோ மஞ்சளை அரைத்து அதனுடன் சிறிது பன்னீரைக் கலந்து பூசிக் கொண்டு குளித்தால் தேவை யில்லாத இடங்களில் இருக்கும் ரோமங்கள் உதிர்ந்துவிடும்.
- வாயிலிருந்து சிலருக்கு நாற்றம் வரும். இது பிறரை அருவருக்கச் செய்யும். வாய் நாற்றம்போக ஒரு ஏலக் காயைத் தினமும் காலை யிலோ அல்லது மாலையிலோ மென்று கொண்டிருந்தால் நாற்றம் நீங்கி விடும்.
- தொண்டைக் கட்டுப்போக இஞ்சியை நறுக்கி அதில் இரண்டு மூன்று துளிகள் தேன் விட்டு சாப்பிட வேண்டும். தேன் துளிகள் விடப்பட்ட மிளகுப் பொடியை நாக்கில் தடவிக் கொண்டால் இருமல் நிற்கும்.
- கர்ப்பிணிப் பெண்களின் வாந்தி நிற்க கிராம்பை நசுக்கி வெந்நீரில் போட்டு ஊறவைத்து இரண்டு, மூன்று முறை கொடுத்தால் உடனே வாந்தி நிற்கும். ●

# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது புவனா

18

**மோ**னிக்காவுக்கு கிளின்ரன்மீது ஏற்பட்ட மோகம் அவளைப் பாடாய்ப்படுத்தியது. பெரும் பாலும் அவள் கற்பனையிலும் கனவிலும் மிதந் தாள். 'எப்போது மீண்டும் காண்பேன்' என்ற ஏக்கம் மோனிக்காவை ஆட்கொண்டுவிட்டது. தன்னைப்போன்ற வெள்ளை மாளிகைப் பயிற்சியாளர்கள் எவருக்குமே கிட்டாத அதிஷ் டம் தனக்கு மட்டும் கிடைத்திருக்கிறது என்று மோனிக்கா நன்கு உணர்ந்து கொண்டாள். அவளுடைய கனவுகள் நனவாவதற்கு ஏதுவாக, மோனிக்காவுக்கு மற்றுமொரு ஆறு மாதத்தவ ணைக்கான பயிற்சியாளர் பணியும் கிட்டிவிட்டது.

உளவள ஆற்றல் துறையில் மோனிக்கா பெற்ற அனுபவத்தை வைத்தே பயிற்சியாளரா கத் தேர்வுக்கு அவள் தோற்றிய பரீட்சையின் போது, எழுதிய கட்டுரை அமைந்திருந்தது. அவள் அக்கட்டுரையில் குறிப்பிட்டிருந்த சில கருத்துக்கள் அக்கட்டுரையைப் படித்த வெள்ளை மாளிகை அதிகாரிகளுக்கு, அவள் மீது நல் லெண்ணத்தை ஏற்படுத்தி யிருந்தது. இதனால் மிகச் சுலபமாக இரண்டாவது தவ ணைப் பயிற்சியில் இடம் கிடைத்துவிட்டது.



### மட்டற்ற மகிழ்ச்சி

பயிற்சியாளர்களின் பயிற்சி முடிந்து வெளி யேறும் காலம் நெருங்கிய வேளையில் ஜனாதிபதி கிளின்ரன் கோடைகால விடுமுறையில் செல்வதற்கு ஆயத்தமானார். வழமை போல், வெள்ளைமாளிகை ஊழியர்களிடம் பிரியாவிடை பெறும் நாள் ஆகஸ்ட் மத்தி யில் வந்தது.

அன்றைய தினம் தன்னை வெகுவாக அலங்கரித்துக் கொண்டு தன்னுடன் பயிற்சி பெறும் ஏனையோருடன் மோனிக்கா சேர்ந்து கொண் டாள்.

கிளின்ரன், ஊழியர்கள் ஒவ்வொருவருடனும் கை கொடுத்து உரையாடிக் கொண்டு வந்தார். அவருடைய கண்கள் தன்னை-அக் கூட்டத்துள் தேடி அலைவதை மோனிக்கா உணர்ந்து கொண்டாள். ஏற் கனவே இரு தடவைகள் உடுத்து வந்த அந்த அதிர்ஷ்ட பச்சை சட்டையை அணிந்து வராமல் விட்டமைக்காக-தனது சித்தி தெப்ராவை மனதுக்குள் திட்டினாள். முன்னர் இரு தடவைகளும் ஜனாதிபதியைச் சந்தித்த போது, அதே பச்சை கவுணை மோனிக்கா அணிந்து சென்றதை சித்தி அவதானித்திருந்தாள். ஆகவே மூன்றாவது தடவையும் அச்சட்டையை அணிந்து கொண்டு ஜனாதிபதியின் முன் மோனிக்கா போவதை அவள் விரும்பவில்லை.

மோனிக்கா இம்முறை வான் நீல கவுண் அணிந்திருந்தாள். 'உண்மையில் என்மீது அவ ருக்கு ஆசை இருக்குமானால் எந்த உடையை நான் அணிந்திருந்தாலும், அவர் என்னைத் தேடிப்பிடிக்கட்டுமே!' என்று ஒருவகைக் கர் வம் மோனிக்காவின் தலைமீது கவிந்திருந்தது.

மோனிக்கா இவ்வாறு எண்ணிய உடனேயே கிளின்ரனுடைய கண்கள் மோனிக்கா மீது தாவி விட்டன. அதே புன்னகையை வீசினார். கிளின்ர னுக்கும் மோனிக்காவுக்கும் அப்போதிருந்த இடைத்தூரம் கிட்டத்தட்ட 40 நபர்கள். அந்த நாற்பது பேரிடமும் கைகுலுக்கி, உரை யாடி விட்டு அவர் வந்து சேர எப்படியும் 40 நிமிடங்களாவது போய் விடும். அதுவரை காத்திருக்க மோனிக்காவால் முடியாது.

தனது கண்களால் துளாவி தனக்கு ஓரளவு அறிமுகமான ஒருத்தியை இடை யில் கண்டுகொண்டாள். அவளுடன் உரையாடிக் கொண்டிருந்த சக பயிற்சி யாளர்களிடம் விடை பெற்றுக்கொண்டு, அந்த அறிமுகமான பெண்ணிடம் ஓடிச் சென்று கை கொடுத்து உரையாடத் தொடங்கினாள். இப்போது அவளுக் கும் ஜனாதிபதிக்கும் இடையிலுள்ள தூரம் ஆக 8 பேர் மட்டும்தான்.

கிளின்ரனின் கண்கள் மோனிக்காவின் கண்களைத் தேடின. அவள் முன்பு, நின்ற இடத்திலிருந்து முன்னேறிவந்து விட்டதை அறியச் சற்றுத் தாமதமாகி விட்டது. எனினும் அவளை அவர் கண்டு கொண்டார். சில நிமி டங்களில் இருவருடைய கரங்களும் இணைந்து கொண்டன. கண்களும் கவ்விக் கொண்டன.

மோனிக்கா, தனக்கு இரண்டாவது தவ ணையும் வெள்ளை மாளிகையில் பணிபுரியும்

### கனவு பலித்தது

சந்தர்ப்பம் கிடைத்துவிட்டதை கிளின்ரனி டம் தெரிவித்தாள். அவரும் மகிழ்ச்சி தெரிவித் ததுடன் வாழ்த்தும் கூறினார். அர்த்த புஷ்டியுட னான புன்னகையை உதிர்த்த வண்ணம் ஜனாதி பதி விடைபெற்றார். எதையோ பறிகொடுத்து விட்டவள்போல் மோனிக்கா அவரையே பார்த்த படி நின்றிருந்தாள்.

கிளின்ரன் ஹெலியில் போய் ஏறுவதற்கு முன்னர், மோனிக்கா அவரிடம் விடுத்த வேண்டுகோள் ஒன்றை ஏற்றுக் கொண்டார். மோனிக்காவின் சினேகிதர் (பயிற்சியாளர்கள் சிலருடன்) நின்று படம்பிடிக்க இசைந்து கொண்டார். மோனிக்கா தனது நன்றியையும் தெரிவித்துக் கொண்டாள்.

கிளின்ரனுக்காகக் காத்திருந்த ஹெலிக் கொப்டரில் ஏறும்போதும் மோனிக்கா பக்கம் திரும்பிய அவர் கை அசைத்தார். எல்லோரை யும் போல் மோனிக்காவும் கையசைத்தாலும், ஏனேயோர் அசைத்ததைப் பார்க்க மோனிக்கா வின் கையசைப்பில் தனியான அர்த்தம் இருந்தது.

இச்சம்பவம் நடைபெற்று சில வாரங்க ளின் பின்னர், பயிற்சியாளர்கள் சிலர் ஒன்று



சேர்ந்து ஒரு 'பிக்னிக்'குக்கான ஏற்பாடு களைச் செய்தனர். கோடைகாலச் சூரியனின் பிரகாசமான ஒளியைப் பரிபூரணமாக அனுப விக்க அவர்கள் தேர்ந்தெடுத்த இடம் வெள்ளை மாளிகையின் பழைய நிர்வாக நிழற்சாலை யாகும். பழைய நிர்வாக அலுவலகத்துக்கும் வெள்ளை மாளிகையின் மேற்குப் பிரிவுக்கு மிடையில் இந்த நிழற்சாலை அமைந்திருந்தது. இந்த இடத்தை தங்கள் 'பிக்னிக்'குக்காக மோனிக்காவே தேர்ந்தெடுத்து, அதிகாரிக ளின் அனுமதியையும் பெற் றுக்கொண்டாள்.

இதே இடத்தை மோனிக்கா தேர்ந்தெடுத் தமைக்கு வலுவான கார ணம் ஒன்றும் இருந்தது. ஜனாதிபதியின் வாசஸ் தலமும் இவ்விடத்தின் அருகிலேயே இருந்தது. எப்படியாவது கிளின்ர னைக் காண வாய்ப்புக்கிட்ட லாம் என்ற எண்ணம் மோனிக்காவிடம் இருந்தது. இந்த எண்ணமும் வீண்போக வில்லை. மோனிக்கா எதிர் பார்த்த-ஏனையோர் துளியும் எதிர்பாராத- சம்பவம் நிகழ்ந் தது. திடீரென கிளின்ரன் வெள்ளை மாளிகையிலிருந்து புறப்பட்டு வந்து கொண்டிருந் தார்.

அவரைக் கண்டதும் பயிற்சியாளப் பெண்கள் மரி யாதைக்காக எழுந்து நின்ற னர். அவர் எவருடனும் நின்று உரையாடவில்லை. ஆனால் அக்கூட்டத்தில் மோனிக்கா வைக் கண்டதும் சற்று தனது நடையைத் தளர்த்தி கை அசைத்தார். மோனிக்காவும் கையசைத்தாள். எப்படியோ தான் எதிர்பார்த்தது நடந்து விட்டதை எண்ணி மோனிக்கா பெரு மகிழ்ச்சி அடைந்தாள்.

### அந்தரங்கங்கள்

மோனிக்கா தன் உள்ளக் கிடக்கையை மூடிமறைப்ப தில்லை. தனது சினேகிதி களிடம் எல்லாவற்றையும் சொல்லிவிடுவாள். பேவர்லி ஹில்சில் படிக்கும் காலத்தில் மோனிக் காவின் உற்ற சினேகிதியாகவிருந்தவள் நட்டாலி உங்வாரி. மோனிக்காவின் அந்தரங் கப் பெட்டகமே இந்த நட்டாலிதான். வேறு எவருக்கும் சொல்லாத சில அந்தரங்கச் செய்தி களையும் நட்டாலியிடம் கூறியிருந்தார்.

நட்டாலியை வாஷிங்டனுக்கு வந்து போகுமாறு மோனிக்கா பல தடவை வேண்டு கோள் விடுத்திருந்தாள். முக்கியமாக ஜனாதி பதி கிளின்ரனுக்கும் தனக்கும் இடையில் வளர்ந்து வரும் நெருக்கமான உறவைப்பற்றி நட்டாலியிடம் கூறிவிட வேண்டும் என்ற துடிப்புத்தான், அவளை வாஷிங்டன் வருமாறு அழைக்கக்காரணம்.

1995 செப்டம்பரில் நட்டாலி வாஷிங்டன் வந்து சேர்ந்தாள். முதலில் வெள்ளை மாளி கைக்கு நட்டாலியை அழைத்துச் சென்றாள். வெள்ளை மாளிகையில் பணிபுரிபவர்கள் தங் கள் உறவினரையும் சினேகிதர்களையும் அழைத்து வந்து அம்மாளிகையைச் சுற்றிக் காட்ட அனுமதிப்பார்கள். இருப்பினும் சில பகுதிகளுக்கு மட்டும் அனுமதி மறுக்கப்படும். தனது சினே கிதிக்கு ஒரு பிரமுகர் தரப் பார் வையாளர் அந்தஸ்துக்கிடைக்க வேண்டும் என்று மோனிக்கா விரும்பினாள். ஆனால் வெள்ளை மாளிகை நிரந்தர சேவையில்லாத பயிற்சியாளர் நிலையிலுள்ள மோனிக்காவுக்கோ சில இடங் களுக்குச் செல்ல அனுமதி இல்லை.

வெள்ளை மாளிகையைச் சுற்றிப் பார்க்க வருவோரை, அவர் களை அழைத்தவர்கள், சுற்றிப் பார்க்கக் கூட்டிச் செல்லமுடியாது. அதற்கென அமர்த்தப்பட்டவர்களே அழைத்துச் செல்வார்கள்.

நட்டாலியை உரிய அலுவலரிடம் ஒப் படைத்து விட்டு, சுற்றிப்பார்த்துக் கொண்டு அவள் வரும்வரையும் கீழ்த்தளத்திலுள்ள முன்மண்டபத்தில் மோனிக்கா காத்திருந்தாள். அங்கு சீருடை அணிந்த-மோனிக்காவுக்குக் கொஞ்சம் பழக்க மான-லுயிஸ் பொக்ஸ் என்ற அந்தரங்க சேவை அதிகாரியுடன் பேசிக் கொண்டிருந்தாள். சற்று நேரத்தில் ஜனாதிபதி கிளின்ரன் அதே வழியில் செல்வார் என்று லுயில் மோனிக்காவிடம் கூறினார். தனது அதிர்ஷ்டத்தைத் தானே மெச்சிய வண்ணம் மோனிக்கா காத்திருந்தாள்.

காத்திருப்பு வீண் போகவில்லை. சில நிமிடங்களில் கிளின்ரன் அப்பக்கம் வந்து கொண்டிருந்தார். இடையில் இரு பெண்களு டன் அவர் பேசினார். அப்போது மோனிக்கா அங்கு நின்றிருந்ததைக் கண்டு, அதிசயப் பார்வை ஒன்றை வீசினார். அப்பெண்களுடன் பேசி முடித்துவிட்டு கிளின்ரன் மோனிக்கா விடம் வந்தார். (வருவாள்)


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** GU

பெயர்:.....................

முகவரி:.....................

.....................

தொழில்:.....................

கையொப்பம்:.....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிர சுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 25-12-1999**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?

### செங்கலடி வாசகிக்கு அதிஷ்டம்!

| இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி | |
|---|---|
| இவர்தான் | கே. யோகரஞ்சனி, நிக்கலஸ் ஆலய ஒழுங்கை, செங்கலடி. |

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

வைர மோதிரப் பரிசுபெறும் சூப்பர் அதிர்ஷ்டசாலியின் பெயரை-தவிர்க்க முடியாத காரணங்களினால் இம்முறை அறிவிக்க முடியவில்லை. அடுத்த முரசில் விவரம் வெளியிடப்படும் என்பதை அறியத்தருகிறோம். -ஆர்-





சக்தி தனக்கே உரிமையாக்கு- அது
சக்தியென்று தாளமிட்டு முழங்கும்-
சித்தம்
சக்தி தனக்கே உரிமை யாக்கு-அது
சஞ்சலங்கள் யாவினையும் அழிக்கும்.

-சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

## நரி போட்ட திட்டம்



ஒரு காட்டில் நரியொன்று பசியோடு அலைந்து திரிந்தது. அப்போது அது ஒரு யானை இறந்து கிடந்ததைக் கண்டது. உடனே யானையின் உடல் அருகே சென்றது.

யானையின் கடினமான தோலை உரித்துச் சாப்பிட முயன்றது நரி. ஆனால் நரியால் அது முடியவில்லை.

அந்த நேரத்தில் அவ்வழியால் சிங்கம் ஒன்று வந்தது. நரி நினைத்தது, 'என்னால் யானையின் தோலை உரித்துச் சாப்பிட முடியவில்லை. எனவே இந்தச் சிங்கத்தின் உதவியால் யானையைச் சாப்பிட்டுவிட வேண்டும்.'

நரியைக் கண்ட சிங்கம் அதனருகே வந்தது.

"இந்த யானை ஏன் இங்கே படுத்துக் கிடக்கிறது?" என்று கேட்டது.

"பிரபுவே! உங்களுக்காக இந்த யானையைப் பாதுகாத்து வைத்திருக்கிறேன் சாப்பிடுங்கள்!" என்று சொன்னது நரி.

அதற்குச் சிங்கம்,

"மற்றவர்களால் கொல்லப்பட்ட எந்த மிருகத்தையும் நான் சாப்பிடுவது இல்லை. இதை நீயே சாப்பிடு!" என்று சொல்லி விட்டுச் சென்றது.

'என்னைத் தாக்கி விட்டு சிங்கம் இதைச் சாப்பிடும் என்று நினைத்தேன். நல்லவேளை அது வேண்டாம் என்று சொல்லிவிட்டது. இனியும் இதே போல் மற்ற மிருகங்களைச் சாப்பிட விடாமல் நடந்துகொள்ள வேண்டும்' என்று திட்டம் போட்டது நரி.

சிறிது நேரத்தில் ஒரு சிறுத்தை அங்கு பாய்ந்து வந்தது.

"சிறுத்தை மாமாவே! ஏன் இங்கு வந்தீர்? இந்த யானையைச் சிங்கம் அடித்துப் போட்டு விட்டுக் குளிக்கப் போயிருக்கிறது. அது வந்தால் உங்களைக் கொன்று விடும்! எனவே ஓடி விடும்" என்று சொன்னது நரி.

"நான் இங்கே வந்ததைச் சிங்கத்திடம் சொல்லி விடாதேயும்!" என்று சொல்லி விட்டுப் பாய்ந்தோடியது சிறுத்தை.

பின்னர் அந்தப் பக்கம் ஓர் ஓநாய் வந்தது. ஓநாயைக் கண்ட நரி,

'இந்த ஓநாய்க்குக் கூரான பற்கள் உள்ளன. அதனால் அதனிடம் தந்திரமாகப் பேசி, யானையின் தோலை உரித்துக் கொடுக்கச் சொல்ல வேண்டும்' என்று எண்ணியது.

"ஏன் இந்த யானை அருகே உட்கார்ந்திருக்கிறாய்?" என்று நரியைப் பார்த்துக் கேட்டது ஓநாய்.

"இந்த யானையை ஒரு சிங்கம் கொன்று விட்டது. அது இப்போது குளிக்கப்போய்விட்டது. அது வருவதற்குள் நீ கொஞ்சம் சாப்பிடு!". என்று சொன்னது நரி.

யானையின் தோலை ஓநாய் கிழித்து, சாப்பிடப் போனபோது, நரி சத்தமிட்டது.

"நண்பா! ஓடிவிடு சிங்கம் வருகிறது!"

இதைக் கேட்ட ஓநாய் அப்படியே விட்டுவிட்டு ஓடிவிட்டது.


நரிக்கு இப்போது சாப்பிட வசதியாகி விட்டது. உடனே யானையைக் கடித்துச் சாப்பிட ஆரம்பித்தது.

'தன்னை விட வலிமை உள்ளவரிடம் பணிந்து போய்த்தான் வெற்றி காண வேண்டும்?


## அதிசயம் – ஆனால் உண்மை!



ஜெர்மனி நாட்டில் பேட் கிரோஸின் என்ற இடத்தில் பூமியில் புதையுண்ட தேவாலயம் ஒன்று தோண்டி எடுக்கப்பட்டது. 1100 ஆண்டுகளாக நிலத்தில் புதைந்திருந்த இத்தேவாலயத்தை அப்படியே வைத்திருக்கின்றனர்.



பெரு நாட்டின் கார்டிலேரா மலைகள் மீது பழமையான செடிகள் உள்ளன. அவற்றில் ஒன்று 'புயா ரெய்மாண்டி' என்ற செடி. இந்தச் செடி 33 அடி உயரமான பூச்செண்டு போல பூப்பூக்கிறது.



சைபீரியா நாட்டில் பனிக்கட்டியில் இருந்த கல்லறை ஒன்றில் இருந்து கம்பளம் ஒன்று எடுக்கப்பட்டது. 2400 ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இந்தக் கம்பளம்தான் உலகிலேயே மிகப் பழமையான கம்பளம் ஆகும்.

## எப்படி வந்தது?




தேர்தலில் போட்டியிடும் வேட்பாளரை 'கண்டிடேட்' என்று ஆங்கிலத்தில் அழைப்பார்கள். 'கண்டிடேட்' என்பது 'கண்டிடஸ்' என்ற ரோமானியச் சொல்லில் இருந்து வந்தது.

'கண்டிடஸ்' என்ற ரோமான்ியச் சொல்லுக்கு வெள்ளை நிறம் என்று அர்த்தம். சரி வெள்ளை நிறத்திற்கும், வேட்பாளருக்கும் என்ன சம்பந்தம்?

முற்காலத்தில் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர், தேர்தல் வருவதற்கு ஒரு வருடத்திற்கு முன்பிருந்தே தூய்மையான வெள்ளை அங்கி ஒன்றை அணிந்து கொள்ள வேண்டும் என்று ரோமாபுரியில் ஒரு சட்டம் இருந்தது.

இதன்மூலம் குறிப்பிட்ட வேட்பாளர் யார் என்று வாக்களிக்கும் மக்கள் தெரிந்து கொள்வார்கள். இவ்வாறு வெள்ளை அங்கியைத் தரித்தவர்கள் 'கண்டிடஸ்' என்று அழைக்கப்பட்டார்கள். இதுதான் 'கண்டிடேட்' என்ற ஆங்கிலச் சொல்லின் மூலம் ஆகும்.

## கிறிஸ்துமஸ் மரம்



இங்கிலாந்து நாட்டில் இளவரசர் அல்பர்ட் என்பவர்தான் முதன் முதலாக கிறிஸ்துமஸ் மரங்களை வைத்து அலங்கரிக்கும் பழக்கத்தை அறிமுகப்படுத்தினார். 1840ம் ஆண்டு இவரால் அறிமுகப்படுத்தப்பட்ட இந்தப் பழக்கம், இதன்பின்னர் தான் நடைமுறைக்கு வந்தது.

முதன் முதலில் ஹென்றி கோல் என்பவர் 1843ம் ஆண்டு கிறிஸ்துமஸ் வாழ்த்து மடலை அனுப்பும் முறையை அறிமுகப் படுத்தினார்.

1929ம் ஆண்டு 8ம் எட்வேர்ட் மன்னருக்கு அளிக்கப்பட்ட கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டைதான் உலகிலேயே மிகச் சிறிய கிறிஸ்துமஸ் வாழ்த்து அட்டையாகும்.

ஓர் அரிசியின் மீது இந்த வாழ்த்து பொறிக்கப்பட்டுள்ளது. கண்ணுக்குத் தெரியாத பொடி எழுத்துக்கள். பூதக்கண்ணாடியைக் கொண்டுதான் படிக்க முடியும்.

## விந்தைப் பறவை



நோர்வே நாட்டின் கடற்பிரதேசங்களில் பஃபின் என்ற கடற்பறவைகள் காணப்படுகின்றன. இவை ஒரே மூச்சில் 50 முதல் 70 கிலோமீட்டர் வரை கடலில் பறந்து ஈல் எனப்படும் மீன்களைப் பிடித்து வரும் திறம் பெற்றவை.

இவை ஒரே நேரத்தில் 12 ஈல் மீன்களை தன் அலகில் அடுக்கி எடுத்துவந்து குஞ்சுகளுக்கு இரையூட்டும். நீரில் மூழ்கி முதல் மீனைப் பிடித்து அதன் தலையை நாக்கின் பின்புறம் உறுதியாகப் பிடித்துக் கொண்டு, தொடர்ச்சியாக மீன்களைப் பிடிக்கும்.

இந்தப் பறவையின் மீன்வேட்டையைப் பார்த்து விலங்கியல் நிபுணர்களே மலைத்துப் போயிருக்கிறார்கள்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!





மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **25.12.1999.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **324**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல: 322

**பரிசுக்குரியவர்:**
அ.சு.சி. சமிய்யா,
க/மு அல்-அஷ்ரப் மஹா வித்தியாலயம், மாவடிப்பள்ளி.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| ம. ஜனார்த்தன், இந்துக் கல்லூரி, வாழைச்சேனை. | எம்.ஐ.எம். அஸ்லம் இப்ராஹீம், ராசிக் பரீட் மகா வித்தியாலயம், பண்டாரவளை. |
| செல்வி எம்.என்.பாத்திமா ரிப்கா, தமிழ் மகளிர் மகா வித்தியாலயம், பதுளை. | த. விதுரன், புனித மிக்கேல் கல்லூரி, மட்டக்களப்பு. |
| ச.குணதீபன், நட்போர்ன் தமிழ் வித்தியாலயம், நுவரெலியா. | எஸ். சகானா, தி/சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. |
| கி.ஷர்மினா, கொ/சைவ மங்கையர் கழகம், வெள்ளவத்தை. | ந.திருச்செந்தூரன், நீர்/விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. |
| ஜெ. ஜனகன், பரி. தோமஸ் பாடசாலை, கொழும்பு-03. | ச.துஷன், றோயல் கல்லூரி, கொழும்பு-03. |


## விடுகதைகளும் விடைகளும்

1. நீரிலே பூத்த பூ, தலையிலே சூட முடியாத பூ.
அது என்ன?
2. ஒற்றைக்காலுள்ளவனுக்குக் காதும் ஒன்றுதான்.
அவன் யார்?
3. நான்கு கால்கள் இருந்தும் நடக்க முடியாதவன்.
அவன் யார்?
4. இரவெல்லாம் பூங்காடு, விடிந்து பார்த்தால் வெறுங்காடு.
அது என்ன?
5. யாருமில்லா இடத்தில் குடைபிடிக்கிறாள் முத்தம்மா.
அவள் யார்?
6. உருவத்தில் பெரியவன் ஊருக்குள் உயர்ந்தவன்.
அவன் யார்?
7. சிவப்பு நிறக்காளை நீரைக் கண்டால் பதுங்கி விடும்.
அது என்ன?
8. அச்சு இல்லாத சக்கரம் அழகான சக்கரம்.
அது என்ன?
9. கடல் நீரில் மலர்வான், மழை நீரில் மடிவான்.
அவன் யார்?
10. அடிக்காத பிள்ளை அலறித் துடிக்குது.
அது என்ன?

### விடைகள்

1. உப்பு 2. ஊசி 3. நாற்காலி 4. நட்சத்திரங்கள்
5. காளான் 6. கோபுரம் 7. நெருப்பு 8. வளையல்
9. உப்பு 10. தொலைபேசி

## 'E' எழுத்து




ஆங்கில வார்த்தைகளில் அதிகமாகப் பயன்படுத்தப்படும் எழுத்து E. ஆனால் எர்னஸ்ட் வின்சன்ட் ரைட் என்ற ஆங்கில எழுத்தாளர் 'கேட்ஸ்பை' என்ற கதைப் புத்தகத்தில் E என்ற எழுத்துள்ள வார்த்தையை ஓரிடத்தில் கூட பயன்படுத்தாமல் எழுதியுள்ளார்.

அவர் எழுதிய கதையில் 50 ஆயிரம் ஆங்கில வார்த்தைகள் இருந்தன. அதில் ஒன்றில் கூட E என்ற எழுத்து இல்லை.

இதற்காக கதையை டைப் அடிக்கப் பயன்படுத்திய தட்டச்சு இயந்திரத்தில் E என்ற எழுத்தை எடுத்துவிட்டார் வின்சன்ட் ரைட்.

## பெண்களுக்கு வாக்குரிமை



பெண்களுக்கு வாக்களிக்கும் உரிமையை அளித்த முதல் நாடு நியூஸிலாந்து. 1893ம் ஆண்டு அங்கு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அவர்களுக்கு வாக்குரிமை வழங்கப்பட்டது.

இதன்பின் அவுஸ்திரேலியாவில் 1902ம் ஆண்டும், ஃபின்லாந்தில் 1906ம் ஆண்டும், நோர்வேயில் 1913ம் ஆண்டும், இங்கிலாந்தில் 1918ம் ஆண்டும், அமெரிக்காவில் 1920ம் ஆண்டும் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

இதற்குப் பிறகுதான் ஏனைய நாடுகளில் பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டது.

## திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 06

## கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்

கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா செல்ஃபோனை காதுக்கு ஒட்ட வைத்துக்கொண்டு ஒதுக்குப்புறமாய் இருந்த அந்த டாய்லெட்டுக்குள் நுழைந்து கதவை உட்பக்கமாய் தாழிட்டுக் கொண்டார். டாய்லெட் முழுவதும் பினாயில் வாசனை காற்றில் உறைந்து போயிருந்தது.

செல்ஃபோனில் குரல் கொடுத்தார்.

"இப்போது நீங்கள் பேசலாம். நான் டாய்லெட்டுக்குள்தான் இருக்கிறேன்...!"

"சொன்னபடி நடந்து கொண்டதுக்கு நன்றி...."

"விஷயத்துக்கு வர முடியுமா....?"

"வந்துவிட்டேன்......! உங்களிடம் நான் கூற வந்த விஷயத்தை சொல்வதற்கு முன்னால் சில கேள்விகள். நீங்கள் அந்த கேள்விகளுக்குக் கோபப்படாமல் பதில் சொல்ல வேண்டும்!"

"என்ன கேள்வி...?"

"நம் நாட்டின் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாய் இருக்கும் விஷயங்கள் எது தெரியுமா?"

"இலஞ்சம், ஊழல்....!"

"இந்த ரெண்டும் மட்டும்தானா...?"

"எனக்கு தெரிந்தவரைக்கும் இந்த இரண்டு மட்டும்தான்..."

மறுமுனையில் குரல் சிரித்தது.

"நிறைய விஷயங்கள் இருக்கிறது மிஸ்டர் ஆச்சார்யா. ஒரு நாட்டில் எதிர்காலம் இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது என்பதை ஒப்புக்கொள்கிறீர்களா....?"

"ஒப்புக்கொள்கிறேன்.....!"

"அந்த இளைஞர்களின் நல்ல மனங்களை நஞ்சாக்கும் விஷயங்கள் இந்த இந்தியாவில் எவ்வளவோ உண்டு. போதை மருந்து, மோசமான திரைப்படங்கள், உதவாக்கரை அரசியல்வாதிகளின் பேச்சுக்கள், ஜாதி வெறி, மதவெறி.... இப்படி எவ்வளவோ உண்டு இல்லையா....?"

ஆச்சார்யா எரிச்சலானார். "இப்படியொரு பொதுக்கூட்டப் பேச்சைக் கேட்கிறதுக்காகவா டாய்லெட்டுக்கு வந்தேன். எனக்கு வேண்டியது நீங்கள் சொல்லப் போகிற முக்கியமான விஷயம்..."

"எனக்கு எப்போதுமே ஒரு முன்னுரையைக் கொடுத்துட்டுத்தான் முக்கியமான விஷயத்தைச் சொல்றது வழக்கம். நம் நாட்டு இளைஞர்களின் நல்ல நெஞ்சங்களை நஞ்சாக்கி அவங்க முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டையாக இருக்கிற விஷயங்களில், இப்போது இன்னொன்றும் சேர்ந்திருக்கிறது. அதுதான் கிரிக்கெட். எந்த ஒரு விளையாட்டுமே கிரிக்கெட் மாதிரி மனிதனின் மதிப்பான நேரங்களை சாப்பிடுவது கிடையாது. மனித உழைப்பு மிக அதிகமாகத் தேவைப்படுகிற இந்தியா போன்ற ஒரு நாட்டுக்கு கிரிக்கெட் தேவையில்லாத ஒரு விளையாட்டு. இதை நீங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா, மிஸ்டர் ஆச்சார்யா....?"

"இதுதான் நீங்க சொல்ல வந்த முக்கியமான விஷயமா...?"

"இல்லை. இனிமேல்தான் வருகிறது..."

"முதலில் அதைச் சொல்லுங்கள்..."

"இப்படி ஒரு உதவாக்கரை விளையாட்டுக்கு ஒரு போர்டு அமைத்து அதற்கு சேர்மனாகவும் இருக்கிறீர்களே உங்களுக்கு வெட்கமாக இல்லையா...?

"லிமிட் யுவர் டங்க்...!"

"மிஸ்டர் ஆச்சார்யா! உண்மையைச் சொன்னால் உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது. உலகில் முன்னேறியிருக்கும் நாடுகளான அமெரிக்கா, ரஷ்யா, சீனா, ஜப்பான், ஜெர்மனி போன்றவைகளைப் பாருங்கள். அங்கே கிரிக்கெட் கிடையாது. காரணம் அங்கே மனித நேரத்துக்கு மரியாதை தரப்படுகிறது. டெலிவிஷன் பெட்டிக்கு முன்பாய் உட்கார்ந்து கிரிக்கெட் பார்ப்பதற்காக நான்கு நாட்களை வீணாக்க மாட்டார்கள்."

"போதும் உங்கள் லெக்சர்! நீங்கள் சொல்ல வந்த அந்த முக்கியமான விஷயத்தைச் சொல்லிவிட்டு வேறு வேலை ஏதாவது இருந்தால் பார்க்கப்போங்கள், ஏனென்றால் எனக்கு முக்கியமான வேறு வேலைகள் உள்ளது..."

குரல் சிரித்தது.

"மிஸ்டர் ஆச்சார்யா! இந்த இந்தியாவில் வாட்டர் போர்டு, மின்சார போர்டு, எஜுகேஷன் போர்டு இப்படி எத்தனை போர்டுகள் வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் கிரிக்கெட்டுக்கு ஒரு போர்டு இருக்கக்கூடாது. இந்த போர்டை உடனே கலைத்தாகணும்."

"என்னது...! கிரிக்கெட் போர்டை கலைக்கணுமா?"

"கலைக்க வேண்டும் என்பது மட்டும் கோரிக்கை கிடையாது. இனிமேல் இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகளே நடக்கக் கூடாது..."

ஆச்சார்யா சிரித்தார்.

"உனக்கென்ன பைத்தியமா பிடித்திருக்கிறது."

"பைத்தியம் எனக்கில்லை. மிஸ்டர் ஆச்சார்யா. இந்த நாட்டு இளைஞர்களை நீங்களும், உங்க கிரிக்கெட் போர்டும்தான் பைத்தியமாக மாற்றிக் கொண்டிருக்கிறீர்கள்...."

"உன் பேச்சைப் பார்த்தால் புலனாய்வுத் துறை அதிகாரி மாதிரி தெரியவில்லை. நீ என்ன தீவிரவாதியா?"

"நான் தீவிரவாதி கிடையாது. இந்த நாட்டின் குடிமகன்... இந்த நாட்டின் முன்னேற்றத்தில் அக்கறை இருக்கின்ற காரணத்தினால்தான் உங்களுக்கு ஃபோன் செய்து சொல்லிக் கொண்டிருக்கிறேன்!"

"சரி... சொல்லி முடித்தாயிற்று அல்லவா? இனி உன் வழியைப் பார்த்துக் கொண்டு போ....!"

"அப்படி போக முடியாதே... மிஸ்டர் ஆச்சார்யா. உங்களுக்கு இந்த நிமிஷம் மூன்று கோரிக்கைகளை வைக்கிறேன். முதல் கோரிக்கை நீங்கள் உடனடியாகக் கிரிக்கெட் போர்டு சேர்மன் பதவியிலிருந்து இராஜினாமா செய்ய வேண்டும். இரண்டாவது கோரிக்கை கிரிக்கெட் போர்டைக் கலைத்து விட்டதாக அறிவிக்க வேண்டும். மூன்றாவது கோரிக்கை இனி இந்தியாவில் கிரிக்கெட் போட்டிகளே நடத்தக்கூடாது."

ஆச்சார்யா கேலியாய் சிரித்தார்.

"இன்னும் இரண்டு கோரிக்கைகளைச் சேர்த்து சொல்ல வேண்டியதுதானே?"

"இது கேலிக்கான நேரம் இல்லை ஆச்சார்யா. இந்த மூன்று கோரிக்கைகளில் முதல் கோரிக்கை உடனடியாய் நிறைவேற்றப்பட வேண்டும்."



"உடனடியாய் என்றால்...?"

"இன்னும் பத்து நிமிஷ நேரத்திற்குள் உங்கள் இராஜினாமா அறிவிப்பை ப்ரஸ் பீப்பிளிடம் தெரிவிக்க வேண்டும்."

"தெரிவிக்கவில்லையென்றால்....?"

"ஏர்போர்ட்டை விட்டு நீங்கள் உயிரோடு வெளியே போக முடியாது."

"இந்த மிரட்டல்களுக்கெல்லாம் நான் பயந்தவன் கிடையாது. இந்த கிரிக்கெட் போர்டு நீ பிறப்பதற்கு முன்னால் உருவாக்கப்பட்டது. நீ இறந்த பின்னாலும் இருக்கும். இந்த பூச்சாண்டி காட்டுகிற வேலையையெல்லாம் வேறு யாரிடமாவது வைத்துக்கொள்....!"

"ஆச்சார்யா...! இப்போது சொன்னது மிரட்டுவதற்காக அல்ல. நீங்கள் இன்னும் பத்து நிமிஷ நேரத்திற்குள் உங்கள் கிரிக்கெட் போர்டு சேர்மன் பதவியை இராஜினாமா செய்யவில்லையென்றால் உங்கள் உடல் போஸ்ட் மார்ட்டம் ரிப்போர்ட்டுக்காக ஜி.ஹெச் போக வேண்டியிருக்கும்...."

"என் நேரத்தை வீணாக்கிக் கொண்டிக்காதே. நான் பார்க்க வேண்டிய உபயோகமான வேலைகள் நிறைய இருக்கின்றன." கோபமாய்ச் சொன்ன ஆச்சார்யா செல்ஃபோனை அணைத்து சஃபாரி சர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு, டாய்லெட் கதவைத் திறந்தட்டி வெளியே வந்தார்.

உடம்பு முழுக்க வியர்வை.

வயிற்றுக்குள் பயம் சுழன்றாலும் மனம் கறுவியது.

'ராஸ்கல்! மிரட்டிப் பார்க்கிறான்!'

வேக வேகமாய் நடந்து வி.ஐ.பி. அறைக்குள் வந்தார்.

ருத்ராவும், லட்சுமிபதியும் அறை வாசலிலேயே பதட்டமாய்க் காத்திருந்தார்கள்.

லட்சுமிபதி கேட்டார்.

"அந்த புலனாய்வுத்துறை அதிகாரி என்ன சொன்னார்?"

"ஃபோனில் பேசியது புலனாய்வுத்துறை அதிகாரி கிடையாது. ஒரு தீவிரவாதி..."

"என்ன சொன்னான்?"

ஆச்சார்யா தன் வியர்த்த முகத்தைக் கர்ச்சீப்பால் ஒற்றிக் கொண்டு ஃபோனில் அவன் பேசிய விபரங்களைத் தெரிவிக்க ருத்ரா, லட்சுமிபதியின் முகங்கள் மெல்ல மெல்ல திகிலுக்குப் போயிற்று.

ருத்ரா பதறப்பட்டார், "மிஸ்டர் ஆச்சார்யா அவன் விடுத்த மிரட்டலை நீங்கள் அலட்சியம் செய்யக்கூடாது. ஏனென்றால் உங்களுடைய ஒவ்வொரு நடவடிக்கையும் அவனால் கவனிக்கப்பட்டு வருகிறது. உங்களுக்கு இப்போது செக்யூரிடி வேண்டும். இதே ஏர்போர்ட்டில் இருக்கும் போலீஸ் ஸெல்லுக்கு நீங்கள் போய் விடுவது உத்தமம்..."

ஆச்சர்யா கலக்கத்தைக் காட்டிக் கொள்ளாமல் உதட்டில் ஒரு சின்னப் புன்னகையை நிறுத்திக் கொண்டு சொன்னார்.

"டெலிஃபோன் மிரட்டலை பொருட்படுத்த வேண்டாம். அவர்கள் குரைக்கிற நாய்கள். கடிக்கமாட்டார்கள்..."

"நாம் அப்படி அலட்சியமாய் இருக்க முடியாது மிஸ்டர் ஆச்சார்யா. ஏனென்றால் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் நமக்கு மகிழ்ச்சி அளிப்பதாக இல்லை. ஓர் ஆண், பெண் நிருபர் வேஷத்தில் சர்வ சாதாரணமாய் உள்ளே நுழைந்திருக்கிறான். மனித வெடிகுண்டு, புரளி என்று தெரிந்தாலும் நாம் இன்னமும் ஆபத்தான கட்டத்தில்தான் இருக்கிறோம்..."

"கிரிக்கெட்டியர்ஸ் எல்லோரையும் ஏர்போட்டிலிருந்து வெளியே அனுப்பியாயிற்றா...?"

"அனுப்பியாயிற்று... போலீஸ் பாதுகாப்போடு அவர்கள் உரிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டார்கள்...!"

ஆச்சார்யா ஏர்போர்ட் முழுக்கப் பார்வையை அவிழ்த்து விட்டார்.

போலீஸ் தலைகளைத் தவிர பார்வையாளர்கள் யாருமே இல்லை. ப்ரஸ் ரிப்போர்ட்டர்ஸ் மட்டும் பாலிவினைல் நாற்காலிகளில் உட்கார்த்தி வைக்கப்பட்டிருந்தார்கள்.

போலீஸ் கமிஷனர் லட்சுமிபதி மறுபடியும் சொன்னார். "மிஸ்டர் ஆச்சார்யா...! உங்களுக்கு செய்யப்படும் பாதுகாப்பு ஏற்பாடுகளை நீங்கள் மறுக்கக்கூடாது. ப்ளீஸ் கம் வித்மீ..."

"எங்கே...?"

"போலீஸ் கேபினுக்கு போய்விடலாம். பெண் நிருபர் வேஷம் போட்ட அந்த நபருக்கு மயக்கம் தெளிந்ததும், அவனை விசாரிக்கிற விசாரிப்பில் எல்லா உண்மைகளும் வெளியே வந்துவிடும். அதுவரைக்கும் நீங்கள் கொஞ்சம் அதிகப்படியான எச்சரிக்கையோடு இருப்பது நல்லது..."

"இது தேவையில்லாத பயம்... என்னை யாரும் எதுவும் செய்துவிட முடியாது. என்னுடைய சர்வீஸில் இது மாதிரியான மிரட்டல்களை எத்தனையோ தடவை சந்தித்து இருக்கிறேன்..."

"மே... பி ஸார் பட்.. எந்த ஒரு மிரட்டலையுமே நாம் அலட்சியப்படுத்திவிட முடியாது. நாம் இருக்க வேண்டிய ஜாக்கிரதையில் இருந்து விட்டால் எந்த ஒரு பிரச்சனையும் இருக்காது.."

லட்சுமிபதி சொல்லிக் கொண்டிருக்கும் போதே, அஸிஸ்டெண்ட் போலீஸ் கமிஷனர் ஒருவர் கையிலே கார்ட்லெஸ் டெலிஃபோனோடு கமிஷனரை வேகவேகமாய் நெருங்கினார்.

"ஸார்...!"

"என்ன...?"

"ஜி. ஹெச்.சிலிருந்து உங்களுக்குப் ஃபோன் டாக்டர் பக்தவத்சலம் பேசுகிறார்..."

"என்ன விஷயம்?"

"தெரியவில்லை. ஸார்... உங்களிடம் பேச வேண்டும் என்று சொன்னார்..."

லட்சுமிபதி ரிஸீவரை வாங்கி காதுக்குக் கொடுத்தார். "டாக்டர்...! ஐயாம் லட்சுமிபதி..."

டாக்டர் பக்தவத்சலம் மறுமுனையில் கேட்டார்? "ஏர்போர்ட்டில் ஏதாவது பிரச்சனையா மிஸ்டர் லட்சுமிபதி...?"

"ஆமாம்.."

"கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யா...?"

"ஆமாம்.....!"

"அவரைக் கொஞ்சம் எச்சரிக்கையாக இருக்கச் சொல்லுங்கள்..."

"ஏன்...?"

"எனக்கு இப்போது ஒரு ஃபோன் கால் வந்தது. பேசியது யார் என்று தெரியவில்லை. பட் ஓர் இளைஞனின் குரல்..."

"போனில் என்ன சொன்னான்?"

"ஜி.ஹெச்சில் இரண்டு டாக்டர்களை தயாராக வைத்திருங்கள். இன்னும் சிறிது நேரத்திற்குள் கிரிக்கெட் போர்டு சேர்மன் ஆச்சார்யாவின் உடல் போஸ்ட்மார்ட்டத்துக்காக வரபோகிறது. இது பொய்யல்ல நடக்கப் போகிற நிஜம் என்று சொல்லிவிட்டு ரிஸீவரை வைத்து விட்டான்..."


(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம் 16

காலையில் ரெண்டு ட்ரிப், சாயந்திரம் ரெண்டு ட்ரிப். அதுதான் முதலில் ஆரம்பிக்கப்பட்ட பஸ் சர்வீஸ். காலையில் முதல் ட்ரிப்பில் அவசரமாக அலுவலகம் போகவேண்டியவர்கள், பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்கள் போய் விடுவார்கள். அடுத்த ட்ரிப்பில் சற்று சாவகாசமாகப் போகலாம் என்பவர்கள் போவார்கள். அவர்களில் நானும் ஒருவன்.



இந்த இரண்டு ட்ரிப்புகளையுமே தவறவிட விட்டால், மறுபடியும் வழக்கம்போல மெயின் ரோட்டிற்குப் பயணம்தான். மாலையிலும் அப்படித்தான். ஆதலால் அந்தப் பகுதிவாசிகள் பெரும்பாலும் அந்த பஸ்ஸைத் தவறவிடுவதில்லை.

நேற்றுவரை ஒன்றரை கிலோமீட்டர் தூரம் நடந்து சென்று, சாதாரணமாக வேலைக்குச் சென்று வந்தவர்கள் இன்று வீடுவரை பஸ் வருகிறது என்றதும், கிடைத்திருக்கிற இந்தச் சௌகர்யத்தை இழப்பதற்குத் தயாராக இல்லை.



எனவே எப்போதும் அந்த பஸ்ஸில் கூட்டம் அதிகம் இருக்கும். பஸ் புறப்படுகிற இடத்திலேயே கூட்டம் நிறைந்து வழிந்து, பஸ் படிக்கட்டுக்களில் பயணம் செய்வதைப் பார்க்க முடியும்.

அப்படித் தொங்கிக்கொண்டு போனவர்களில் சில நேரங்களில் நானும் ஒருவனாக இருந்ததுண்டு. ஆம், அந்தக் குடியிருப்புவாசிகளில் நானும் ஒருவன். என் முதல் படம் 'உணர்ச்சிகள்' வெளிவராத காலம் அது. அதை வெளியேகொண்டு வருவதற்காகப் போராடிக்கொண்டிருந்த நேரம் அது.

அந்த பஸ் பயண காலங்களில், 4 பேர் கொண்ட ஒரு வாலிபக் கூட்டம், இரண்டு ட்ரிப்பிலுமே பயணப்படுவதைப் பார்த்திருக்கிறேன். எப்படி முடியும் என்று கேட்கிறீர்களா?

### பொறுக்கிகள்

முதல் ட்ரிப்பில் பஸ்ஸில் ஏறி, பெண்கள் பகுதி ஓரமாக படிக்கட்டுக்களில் தொங்கியபடி, வடபழனி வரை பயணம் செய்து, அங்கு இறங்கி, பஸ் மறுபடியும் திரும்பிவரும்போது காலனிக்குள் வந்து, மறுபடியும் அடுத்த ட்ரிப்பில் பெண்கள் பகுதியில் தொங்கிக் கொண்டு வருவது அவர்களது வாடிக்கை.

அந்த வாலிபர்கள் நால்வருமே எங்கள் பகுதியைச் சேர்ந்தவர்கள்தான். நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஒருவரைத் தவிர மூன்று பேர் பட்டதாரிகள். வேலை தேடிக் கொண்டிருப்பவர்கள். அனைவருமே எம்ப்ளாய்மெண்ட் எக்ஸ்சேஞ்சில் பதிவு செய்து, அங்கிருந்து அழைப்பு வரும் என்று எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்கள். இவையெல்லாம் எனக்கு காலம் கடந்து தெரிந்த உண்மைகள்.

அன்றைய நிலையில் காலனிவாசிகள் அனைவருடைய பார்வையிலும் அவர்கள், பொறுப்பில்லாத காலிப்பயல்கள்; பொம்பளைப் பொறுக்கிகள். அவர்களைப் பற்றி அடிக்கடி பலரும் கூறிய கருத்து, "இந்தப் பசங்கல எல்லாம் பொலிஸுலே பிடிச்சுக் கொடுத்து, ஒரு பத்து நாளாவது ஜெயில்ல போடணும் சார். அப்பத்தான் திருந்துவாங்க!"

அவர்கள் நால்வரும் பஸ்ஸில் ஏறினாலே, அனைவரும் அருவருப்பாகப் பார்ப்பார்கள். அவர்களில் ஒருவன், ஒருநாள் பஸ்ஸில் தொங்கிக்கொண்டு வந்தபோது, ஒரு பஸ் நிறுத்தத்தில் பஸ் நிற்பதற்கு முன்னே இறங்குவதற்கு முயற்சி செய்து, கீழே விழுந்து அடிபட்டபோதுகூட, அவனிடம் யாரும் இரக்கம் காட்டத் தயாராக இல்லை. "பொறுக்கி நாயே! அடிபட்டு சாகட்டும் சார்" இது ஒரு சிலரின் முணுமுணுப்பு.

முணுமுணுத்தவர்களெல்லாம் தங்களது இறந்த காலத்தை மறந்துவிட்டார்கள். அவர்களது வாலிப காலங்களில் பெண்களின் பக்கம் திரும்பிப் பார்த்ததில்லையா?

இன்று அவர்களுக்கு இருக்கிற பொறுப் புணர்ச்சி அவர்களது தோளில் தொத்திக் கொள்வதற்கு முன்னால், காதலுக்காக அவர்கள் ஏங்கியது இல்லையா?

இன்று அந்த வாலிபர்களை சபிக்கின்றவர்கள் தங்களது வாலிப காலங்களில் சன்னியாசம் பூண்டிருந்து, மனைவி என்ற பெண் வந்த பின்தானா அவர்கள் மனக்கதவைத் திறந்து வைத்தார்கள்? இடையில் எந்தப் பெண்ணுமே அவர்கள் இதயத்தில் சஞ்சரித்தது இல்லையா? அதனால் அவர்கள் மனம் சஞ்சலப்பட்டதில்லையா?

### பிடிபட்டார்கள்

இஷ்டப்பட்ட பெண்ணை எண்ணி ஏங்கியதில்லையா? அவளை அடைய என்ன வழி என்று ஆராய்ச்சி நடத்தியதில்லையா? வழிமுறைகளையும், விதிமுறைகளையும் தாண்டிக் குதிக்கத் தயாரானதில்லையா?

அன்று பலரது சாபத்திற்கும், கோபத்திற்கும் ஆளாகியிருக்கும் அந்த நான்கு வாலிபர்களும், நாளைய கணவன்கள்தான்; நாளைய தகப்பன்கள்தான். தனது மனைவியின் மானத்தை, மகளின் கௌரவத்தைக் காப்பாற்ற, நாளைய காலிப்பயல்களை எதிர்த்துப் போராடப்போகிற எதிர்கால கௌரவப் போராளிகள்தான்.

சரியோ, தவறோ பலரும் இட்ட சாபம் பலித்தது ஒரு நாள். துள்ளித் திரிந்த அந்த நான்கு வாலிபர்களும் ஒருநாள் பொலிஸில் பிடிபட்டார்கள். ஆனால் பிடிபட்டதற்கான காரணம்தான் வேறு. படிக்கட்டுப் பயணமோ, பெண்களைக் கேலி செய்ததற்கோ அல்ல.

அவர்களை இந்தச் சமூகத்தின் நிரந்தரக் குற்றவாளிகள் பட்டியலில் சேர்க்க அன்று ஆரம்ப பூஜை போடப்பட்டு இருந்தது. ஒரு குற்ற சமுதாயம், அவர்களைத் தத்தெடுத்துக்கொள்ளத் தயாராய் இருந்தது.

பிறந்த குடும்பமும், பழகுகிற சூழலும், உதறித் தள்ளுகிற உறவும், ஒதுங்கிப் போகிற நட்பும், ஒதுக்கித் தள்ளுகிற சமுதாயமும் ஒன்றாகச் சேர்ந்து, நான்கு புதிய குற்றவாளிகளை இந்த உலகிற்கு பெற்றெடுத்துக் கொடுத்திருந்தார்கள். குற்றவாளிகள் பிறப்பதில்லை; உருவாக்கப் படுகிறார்கள்.

அப்படியானால் உருவாக்குபவர்கள் யார்? நாம்தானே? நம்மையும் உள்ளடக்கிய சமுதாயம்தானே? நாம் உருவாக்கிய குற்றவாளிகள் தண்டிக்கப்படும்போது, அவர்கள் உருவாகக் காரணமாக இருந்த நமக்கு என்ன தண்டனை?

விடை காணமுடியாத கேள்விதான் இது. என்றாலும் விடை கண்டே ஆக வேண்டிய கேள்வி. அந்த நான்கு இளைஞர்கள் தடம் புரண்ட கதை சொல்கிறேன். தண்டனை யாருக்குத் தரலாம் என்று நீங்களே சொல்லுங்கள்.

(அனுபவங்கள் தொடரும்)

நிஜதரிசனம்

ஐரிஷ் விடுதலைப் போராட்டம் 750 வருடங்களுக்கு மேற்பட்ட நீண்ட நெடிய வரலாறு கொண்டது! 1900ம் ஆண்டு ஆரம்பம் வரை ஐரிஷ் மிதவாதத் தலைவர்கள் பிரித்தாளும் பிரித்தானியரால் ஏமாற்றப்பட்டனர். இந்நிலையில் 1913ம் ஆண்டு ஆயுதம் தாங்கிய ஐரிஷ் தொண்டர் படை உருவானது. இதுவே பிற்காலத்தில்—1919 ல் ஐரிஷ் குடியரசு இராணுவமானது. ஐரிஷ் தொண்டர் படையின் வீரன் தான் பிரீன். மனதை உலுக்கும் எழுச்சிமிகு உண்மை வரலாறு இது.

# வீரன் தான் பிரீன்

13

லிமெரிக் நகரில் தேசியப் பற்றுள்ள பாதிரியார் ஒருவர் இருந்தார். புரட்சிக்காரர்களிடம் அவருக்குப் பிரியம் அதிகம். பொதுநல ஊழியம் செய்யும் எவருக்கும் அவர் தோழர். அவரைக் காணவே தான் பிரீன் முதலானவர்கள் காரில் பிரயாணம் செய்து வந்தனர்.

லிமெரிக் வந்ததும் அவர்கள் நேராகப் பாதிரியாருடைய வீட்டுக்குச் சென்றனர்.

பாதிரியார் அவர்களைக் கண்டதும் அளவற்ற ஆனந்தங் கொண்டார். அவருக்குக் கடுகளவு பயமுமில்லை. அவருடைய வீட்டில் வேலை பார்த்து வந்த மோல்லி என்னும் மாது புதிய வாலிப விருந்தினர்களிடம் விசேஷ அன்பும் மரியாதையும் காட்டினாள். அவர்களுக்குப் பசித்தபோது நல்ல உண்டிகளும், பானங்களும் தயாரித்துக் கொடுத்தாள். சில சமயங்களில் சுவையுள்ள பண்டங்களைச் செய்து, அவற்றை உண்டு தீர வேண்டும் என்று மோல்லி கண்டிப்பான உத்தரவும் போடுவதுண்டு. அங்கிருந்த பொழுது தான் பிரீனும் ஹோகனும் இரண்டு நாள் இரவும் பகலும் படுத்த படுக்கையைவிட்டு எழுந்திராமல் ஓய்வெடுத்துக் கொண்டனர். மோல்லி அடிக்கடி அங்கு வைக்கப்பட்டிருந்த சிலுவையின் பக்கம் சென்று, அவர்கள் நீடூழி வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து வந்தாள். சிலுவையின் முன்னால் அணையா விளக்கு ஒன்று போட்டாள். ஜப மாலையைக் கையில் பிடித்து, அவர்களைப் பகைவர்களிடமிருந்து இறைவன் காக்க வேண்டுமென்று பிரார்த்தித்தாள். அவள் அவர்களிடமிருந்து வந்து "இனி கவலையை ஒழியுங்கள்! உண்மையான தர்மவான்களைத் தெய்வம் காட்டிக்கொடுக்காது!" என்று ஆறுதல் சொல்வது வழக்கம்.

லிமெரிக்கிலிருந்து தான் பிரீனும் ஹோகனும் வரகெல்லிக்குச் சென்றனர். அங்கே வந்திருந்த டிரீஸியையும் ரொபின்ஸனையும் சந்தித்தார்கள். அவர்கள் சந்தித்த காட்சி பள்ளிக்கூடத்துப் பிள்ளைகள் போட்டிப் பந்தய விளையாட்டில் ஆனந்தக் கூத்தாடுவது போல் இருந்தது. நால்வரும் ஒன்று கூடிவிட்டதால் அவர்களுடைய கவலைகள் சிதறிப்போயின. தான் பிரீன், பாதிரியார் தங்களுக்குச் செய்த உதவிகளையும், லிமெரிக் வீதியில் பட்டாளத்தார் செய்த உதவிகளையும் நண்பர்களுக்கு விரிவாக எடுத்துரைத்தான். டிரீஸியும், ரொபின்ஸனும் டப்ளின் நகரில் தங்களை யாரும் சந்தேகிக்கவில்லை என்பதையும் வேறுபல அதிசயங்களைப் பற்றியும் எடுத்துக் கூறினார்கள்.

லாகெல்லி ஸோலோ-ஹெட்பக்கிலிருந்து ஆறு அல்லது ஏழு மைல் தூரத்திலுள்ளது. அவ்விடத்திற்குத் தான் பிரீன் வந்து சேர்ந்தது வரை ஸோலோஹெட்பக் சம்பவம் நடந்து மூன்று மாதங்கள் ஆகிவிட்டன. பட்டாளத்தாரும், பொலிஸாரும் அந்தப் பக்கங்களில் வெடிமருந்துப் புதையலைத் தேடிக்குழிகள் தோண்டுவதை நிறுத்தியபாடில்லை. தான் பிரீன் எங்கெங்கு போவது வழக்கம் என்று அறிந்து, அங்கெல்லாம் சோதனை போடப்பட்டது.

தான் பிரீனும் தோழர் மூவரும் நான்கு சைக்கிள்களை வாங்கிக்கொண்டு, டப்ளினுக்குச் செல்லும் நோக்கத்துடன், டோனோ ஹில்லுக்குச் சென்றனர். வழியில் முன்னால் பொலிஸாரைச் சுட்ட இடத்தைத் தாண்டிச் செல்லவேண்டியிருந்தது. அவ்விடத்தில் அவர்கள் கீழிறங்கிச் சில நிமிஷங்கள் தங்கிவிட்டுச் சென்றனர். டோனோ ஹில்லிலிருந்து தான் பிரீனுடைய வீடு அரை மைல் தூரத்தில் இருந்தது. அவன் மூன்று மாத காலமாய்ப் பாராத தன் அன்னையைப் பார்க்கவேண்டும் என்று ஆவல் கொண்டான். இடையில் அவளுக்கு ஒரு கடிதங்கூட எழுதவில்லை. ஆதலால் அவன் நேராக வீட்டை நோக்கிச் சென்றான். அன்னையின் திருவடிகளைப் பணிந்தான். அந்த மாதரசியின் துயரங்களுக்கு அளவில்லை. தான்



பிரீன், போன்ற பிள்ளையைப் பெற்று வீரத்தையும் தேசாபிமானத்தையும் புகட்டிய ஒரு குற்றத்தினால் அவள்பட்ட கஷ்டங்களை வேறு யாரால் சகிக்க முடியும்? அவளுடைய சிறுவீடு 24 மணிநேரத்தில் மூன்று முறை சோதனை போடப்பட்டு வந்தது. அதிகாலையில் விடிவதற்கு முன்னால் 'பீலர்'கள் வந்து சோதனை போடுவார்கள்; நள்ளிரவில் பட்டாளத்தார் திடீரென்று புகுந்து சோதனை போடுவார்கள். அந்தத் தாய் அவ்வளவையும் சகித்துக் கொள்வாள். பிற்காலத்தில் 'பிளாக்கு அண்டு டான்' என்னும் பட்டாளத்தார் அயர்லாந்தில் சொல்ல முடியாத கொடுமைகளைச் செய்து வந்த காலத்தில், அவளுடைய வீட்டைத் தீவைத்துப் பொசுக்கி, அவளுடைய கோழிகளையும் குஞ்சுகளையும் கூடக் கத்தியால் குத்திக் கொன்றார்கள். பிரிட்டிஷ் அரசாங்கத்தின் கோபம் கோழிக் குஞ்சுகளின் தலையிலும் பாய்ந்தது!

எத்தனை துன்பங்கள் நேர்ந்தாலும், அந்த வீரத் தாய் தைரியத்தை மட்டும் கைவிடவில்லை. வீரப் பிள்ளையைப் பெற்றதே பாக்கியம் என்று அவள் கருதி வந்தாள். பீலர்களும் பட்டாளத்தார்களும் அடிக்கடி அவளிடம் சென்று, "உன் மகன் எங்கே?" என்று கேட்பார்கள். அவள், "என் மகனுள்ள இடத்தில் நீங்கள் கூசாமல் செல்வீர்களா?" என்று கேட்பது வழக்கம். ஒரு சமயம் பட்டாளத்தார் வந்து தான் பிரீனைத் தேடும்பொழுது, 'அவன் வீட்டு மாடியிலே இருக்கிறான், போய்ப் பார்த்துக் கொள்ளுங்கள்!' என்று அவள் விளையாட்டாகச் சொன்னாள். பட்டாளத்தார் அதை உண்மை

## தமிழில் ப.ராமஸ்வாமி

என்று எண்ணி, உடனே துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு, திரும்பி ஓடிப் பக்கத்தில் மறைந்து கொண்டார்கள்!' பின்னால், தான் பிரீன் வீட்டிலில்லை என்று தெரிந்துகொண்டு தான் அவர்கள் வெளியே வந்தார்கள்.

தான் பிரீன், வீரத் தாயின் வீர மகன். தாயைப்போல்தானே பிள்ளையும் இருப்பான்!

தான் பிரீன் அன்னையிடம் அரிதில் விடைபெற்றுக்கொண்டு நண்பர்களுடன் கிளான்மெல் நகருக்குச் சென்றான். அது தான் ஐரிஷ் பொலிஸாரின் தலைமை இடம். அங்கிருந்து தொண்டர் படைத் தலைவர்களைக் கண்டு பேசி, விரைவாகக் காரியங்களை ஆரம்பிக்க வேண்டும் என்று தான் பிரீன் வற்புறுத்தினான். நகரத் தொண்டர்களையும் உற்சாகப்படுத்தினான். பிறகு அங்கிருந்து அவனும் நண்பர்களும் ரோஸ்மூரை அடைந்தனர்.

ரோஸ்மூரில் ஒரு நண்பர், பக்கத்து ஊரான பல்லாக் என்னும் இடத்தில், இமன் ஒடு பிரீனுடைய வீட்டில் ஒரு நடனக் கச்சேரி நடக்கப்போவதாகத் தெரிவித்தார்.

தான் பிரீனும் அவன் தோழர்களும் களைப்பை மறந்தனர். அங்கு போவதில் ஏற்படக்கூடிய அபாயத்தையும் கருதவில்லை. பல வருஷங்களாக அம்மாதிரியான கச்சேரிகளில் அவர்கள் கலந்து கொண்டதில்லை. ஆதலால் கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடக்கூடாது என்று தீர்மானித்தனர். அதன்படி கச்சேரி நடக்கும் இடத்திற்குச் சென்றனர். போனவுடன், விருந்துண்ணும் கூட்டத்தோடு கலந்துகொண்டனர்.

அங்கு பாடப்பட்ட கீதமும், அளிக்கப்பட்ட உணவுகளும் மிகவும் இனிமையாக இருந்தன. தொண்டர்கள் தாங்கள் 'சட்ட விரோதமான' நபர்கள் என்பதை அடியோடு மறந்து உண்பதிலும், ஆடுவதிலும், ஆனந்தமாய்ப் பேசுவதிலும் பொழுதுபோக்கி வந்தனர். பீலர்களும், இராணுவத்தாரும் வெளியே பல இடங்களில் அவர்களைத் தேடி அலைந்துகொண்டிருக்க, அவர்கள் இங்கே 'டான்ஸ்' ஆடிக்கொண்டிருந்தார்கள்!

இரவு முழுவதும் நடனஞ் செய்துவிட்டு விடியப்போகிற நேரத்தில், தான் பிரீன் சில பையன்களுடன் ரோஸ்மூருக்குத் திரும்பினான். மற்ற மூவரும் அவனுடன் செல்லாது அங்கு நடனமாடிக் கொண்டிருந்தனர். தான் பிரீன் இருப்பிடத்திற்குச் சென்றபின், சிறிது நேரத்தில் டிரீஸியும், ரொபின்சனும் அங்கு வந்து சேர்ந்தனர். ஸீன் ஹோகன் மட்டும் வரவில்லை. அவன் பின்னால் வந்து சேருவான் என்று எண்ணிக்கொண்டு அவர்கள் படுக்கச் சென்றனர்.

ஐந்து தினங்களாக உறக்கமில்லாதிருந்ததாலும், அன்றிரவு முழுவதும் நடனமாடியதாலும் மூவரும் மிகவும் களைப்புற்றுப் படுத்தவுடனே உறங்கி விட்டனர். தொழுவங்களிலும் தோட்டங்களிலுமே அவர்கள் நன்றாகத் தூங்குவார்கள். படுக்கைகளும் தலையணைகளும் அலங்காரமாகப் போடப்பட்ட இடத்தில் நித்திரைக்குக் குறைவிருக்குமோ!

தான்பிரீன் உறங்கும்பொழுது யாரோ ஏதோ கூறுவது செவியில் பட்டது. தூக்கத்தில் ஒன்றும் சரியாகப் புலனாகவில்லை. பாட்ரிக் கின்னான் என்னும் பழைய நண்பர் திடீரென்று அங்கு ஏதோ சொல்லிக் கொண்டிருந்தார். தான் பிரீன் கண்ணை விழிக்க முடியாமல் அயர்ந்து கிடந்தான். ஆனால், கின்னான், 'பீலர்கள் ஹோகனைப் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள்!' என்று தெளிவாகக் கூறிய சொற்களைக் கேட்டவுடன், அவன் திடுக்கிட்டு எழுந்துவிட்டான். அவ்விஷயத்தை அவனால் நம்ப முடியவில்லை. ஹோகன் பீலர்களால் சுடப்பட்டு இறந்தான் என்றால், அதை நம்பியிருப்பான். ஆனால், எதிரிகளைச் சுட்டுத்தள்ளாமல், பேடித்தனமாக அவன் பீலர்களுடைய கையில் சிக்கினான் என்பதை அவனால் நம்பவே முடியவில்லை. கின்னான் வேடிக்கையாய்க் கூறியிருப்பாரோ என்று சந்தேகித்து அவன் டிரீஸியைத் திரும்பிப் பார்த்தான். டிரீஸியின் முகத்தில் துக்கம் நிரம்பி வழிந்துக்கொண்டிருந்தது. ஒரு வினாடியில் மூவரும் எழுந்து நின்று அடுத்தாற்போல் என்ன செய்வதென்று யோசிக்கலாயினர்.

தான் பிரீனுடைய தலை கிறுகிறுத்துக் கொண்டிருந்தது. உடம்பு முழுவதும் உணர்ச்சியற்றிருந்தது. ஆயினும் ஆருயிர்த் தோழன் ஹோகன் பகைவர் கையில் சிக்கிவிட்டான் என்றதைக் கேட்டு அவன் நிலை கொள்ளவில்லை. அவனும் தோழர்களும் ஹோகனைப் பீலர்களுடைய கையிலிருந்து உடனே விடுவிக்க ஏற்பாடு செய்ய வேண்டும் என்று தீர்மானித்தனர். 'ஹோகனை விடுவிக்க வேண்டும், அல்லது நாம் மடிய வேண்டும்' என்று முடிவு செய்தனர்.

ஹோகன் எப்படிப் பிடிபட்டான் என்பதைப்பற்றி அவர்கள் விசாரித்தார்கள். அவன் அவர்களுக்குப் பின்னால் தொடர்ந்து வந்துகொண்டிருந்தான். இடையில் பத்து பீலர்கள் அவனைச் சூழ்ந்து பிடித்துக்கொண்டனர். அவன் துப்பாக்கியைத் தொடுவதற்குக் கூடச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. பிற்காலத்தில் பீலர்கள் புரட்சிக்காரர்களைப் பிடிப்பதானால், பிடித்தவுடன் சுட்டுக்கொல்வது வழக்கமாயிற்று. 'கைதிகள் ஓட ஆரம்பித்தார்கள். அதனால் சுட்டுவிட்டோம்!' என்று அவர்கள் மழுப்பிவிடுவார்கள். ஆனால் அந்த வழக்கம் ஹோகன் பிடிபடும்போது அமுலில் இல்லை.

ஹோகன் எங்கே வைக்கப்பட்டிருக்கிறான் என்ற தகவலொன்றும் கிடைக்கவில்லை. வழிபோக்கர் யாரிடமாவது கேட்டுத் தெரிந்துகொள்ளலாமென்றால் அக்காலத்தில் நன்றாய் விடிவதற்கு முன்னால் எவரும் வீதியில் நடமாடுவதில்லை. அவனைப் பற்றிய தகவல்களைத் தெரிந்து வரச் சில வாலிப நண்பர்கள் சைக்கிள்களில் சுற்றித் திரிந்தனர். ஒரு புலனுந் தெரியவில்லை. பீலர்கள் ஹோகனை மிகவும் எச்சரிக்கையாய் மறைத்துக் கொண்டு போயிருந்தனர். வெகு நேரத்திற்குப் பிறகு, அவன் தர்லஸ் பொலிஸ் நிலையத்தில் இருப்பதாய்த் தகவல் கிடைத்தது.

(பயணம் ...தொடரும்)

---

தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர்.

38

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்

பொழுது விடிந்தது.

அது, ராஜி வீட்டிலும் விடிந்தது, மலபார் ஹில்லிலும் விடிந்தது.

நல்ல மயக்கத்தில் இருந்த லலிதா எழுந்து பார்த்தாள்; இந்திரகுமாரைக் காணவில்லை. நடிகர் இரவிலேயே விடைபெற்றுக் கொண்டு விட்டார்.

அதே சிந்தனையில் உட்கார்ந்து கொண்டிருந்தாள் லலிதா. குமாரசாமி வந்து சேர்ந்தான்.

அலங்கோலமான அந்தக் கட்டடத்துக்குள்ளே அவன் நுழைந்தபோது, இரண்டு வேலைக்காரப் பெண்கள் நூற்றுக்கணக்கான சோடா மூடிகளையும், சிகரெட்டுத் துண்டுகளையும் கூட்டிப் பெருக்கிக் கொண்டிருந்தார்கள்.

இது குமாரசாமிக்குப் புதிதல்ல என்றாலும், ராஜியை மனைவிபோல் ஆக்கிக் கொண்டு விட்டதால் இந்த ஆட்டங்களெல்லாம் அநாகரிகமாக அவனுக்குத் தோன்றின.

மனிதனுக்குத் திடீரென்று ஒரு கணம் சொந்த புத்தி வேலை செய்யுமல்லவா; அவ்வளவுதான்!

கதவைத் திறந்து கட்டிலில் மயங்கி உட்கார்ந்திருந்த லலிதாவைப் பார்த்து, "புறப்படலாமா?" என்றான் குமாரசாமி.

லலிதா ஆடை திருத்தி அவனைத் தொடர்ந்தாள்.



காரில் போய்க் கொண்டிருக்கும்போதே, "மதன்லால் என்ன சொன்னார்?" என்று கேட்டான் குமாரசாமி.

"உங்களை மத்தியானம் சாப்பிட வரச் சொன்னார்!" என்றாள் அவள்.

இந்திரகுமாரை தான் அழைத்தது அப்போதுதான் அவள் நினைவுக்கு வந்தது, அதனாலேயே சொன்னாள்.

விடுதியில் கொண்டுபோய் லலிதாவை விட்டுவிட்டு, குளித்து ஆடை அணிந்து காலை உணவுகூட அருந்தாமல் நேரே இந்திரகுமாரின் வீட்டுக்குப் போனான் குமாரசாமி.

"ஐயா தூங்குகிறார்" என்றான் ஒருவன்.

"அங்கே உட்காருங்கள்." என்றான் ஒருவன்.

டீ கொண்டு வந்து கொடுத்தான் ஒருவன்.

ஒரு மணி நேரத்திற்குப் பிறகு நடிகர் எழுந்து வெளியே வந்தார்.

தனது பிரமாண்ட தயாரிப்பு திட்டத்தை அவரிடம் விளக்கினான் குமாரசாமி.

"தென்னாட்டுத் தயாரிப்பாளர்கள்தான் ஒழுங்காகப் பணம் கொடுப்பார்கள். எனக்கு ரொம்ப சந்தோஷம்; ஆனால் ஒன்று, இந்தப் படத்தில் ஒரு புதுக் கதாநாயகியைப் போட வேண்டும்!" என்றார் இந்திரகுமார்.

"நானும் அதையேதான் சொல்ல வந்தேன்," என்றான் குமாரசாமி.

"எப்போதும் தென்னாட்டு நடிகைகள்தான் இந்தியில் சக்ஸஸ் ஆகிறார்கள்," என்றார் இந்திரகுமார்.

ஒரு அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடி, "ஆம், அது உண்மைதான். ஆனால் இப்போது வட நாட்டிலேயே நான் ஒரு நடிகையைத் தேடிப் பிடித்திருக்கிறேன்!" என்றான் குமாரசாமி.

அவன் ராஜியின் பெயரைச் சொன்னவுடனேயே, "எனக்கு அவளைத் தெரியும். அவளை வேறொரு வேஷத்துக்குப் போட்டுக்கொள்ளலாம். திரௌபதியாக நடிக்க ஒரு தமிழ்ப் புதுமுகம் இருக்கிறாள்," என்றார் இந்திரகுமார்.

"யாரது...?" என்று கேட்டான் குமாரசாமி.

"லலிதா!" என்று நடிகர் சொன்ன உடனே திகைத்த குமாரசாமி சமாளித்து, "எனக்கும் அவளைத் தெரியும்!" என்றான்.

கையிலே ஒரு இலட்சம் ரூபாய் பணம் கொண்டு வந்தவன், அதை நடிகரிடம் கொடுக்காமல் மறுநாள் வந்து பேசிக்கொள்வதாக விடைபெற்றான்.

விடுதிக்கு வந்ததும், "லலிதா!" என்று கத்தினான்.

இன்பக் கனவுகளோடு தூக்கத்தில் இருந்த லலிதா, தூக்கக் கலக்கத்தோடு எழுந்து வந்தாள்.

"உனக்கு இந்திரகுமாரை எப்படித் தெரியும்...?" என்றான் குமாரசாமி.

"ஏன்? நேற்று இரவு அவருக்குத்தான் நான் கிடைத்தேன்!" என்றாள் அவள்.

"பின் மதன்லால் என்னைச் சாப்பிட அழைத்ததாகச் சொன்னாயே?"

"அது ஆட்டம் தொடங்குவதற்கு முன்பு."

"நீ சினிமாவில் நடிக்க ஒப்புக்கொண்டாயா?"

"இவ்வளவுக்குப் பிறகு அதில் என்ன தப்பு?"

"என்னைக் கேட்காமல் எப்படி ஒப்புக் கொண்டாய்?"

"காலையில் கேட்டுக் கொள்ளலாம் என்றிருந்தேன். காரணம், நேற்று இரவு நீங்கள் தான் அங்கு இல்லையே!"

"நீ சினிமாவில் நடித்தால் என் பெயர் நாறிவிடும்."

"இதுவரை பம்பாயில் நடந்தது பட்டணத்துக்குத் தெரிந்தால் நம் பேரில் என்ன வாசமா அடிக்கும்?"

"பேசாமல் உன் முடிவை மாற்றிக் கொள்! இல்லையென்றால், இந்த பம்பாயில் உன்னைத் தெருத் தெருவாகப் பிச்சை எடுக்க வைப்பேன்!"

"அதெல்லாம் அந்தக் காலம்! உங்களிடம் பணம் இருப்பது போல் என்னிடம் நண்பர்கள் இருக்கிறார்கள்."

"ஞாபகம் இருக்கட்டும். மதன்லால் நான் சொன்னபடிதான் கேட்பார்!"

"நான் என்ன இதுவரை ஒரு மதன்லாலைத்தானா பார்த்தேன்?"

(அந்தரங்கம் வரும்)

> இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!
>
> அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.
>
> இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!
>
> நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.
>
> இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.
>
> —கண்ணதாசன்—

# நாய்

பிஸ்கட்டும் இறைச்சித் துண்டுகளும் பரந்து கிடந்தன. முதலாளி சோகமாய் இருப்பது அவனுக்குத் தெரிந்தது.

அவன் சந்தோஷப்பட்டான்.

நாட்கள் நகர, நாய் சாகக் கிடப்பது போல் அவனுக்குத் தெரிந்தது.

எலும்புகள் எறிந்தால் வாலாட்டாத நாய், சதையை கண்டுகூட சும்மா கிடந்தது.

கர்வமும் இருந்தது அந்த நாயிடம்; கௌரவமும் இருந்தது.

மூன்று நாட்களாய் தொழிற்சாலைப் பக்கமே போகாமல் இருந்தார் முதலாளி.




மனைவியின் முகத்திலும் பிள்ளைகளின் முகத்திலும் சோகம் அப்பிக் கொண்டன.

நேர நகர்வுகளை கணக்குப் பார்த்துக் கொண்டே இளைய மகள், நாயின் அருகிலேயே இருந்தாள்.

தொலைபேசி அழைப்புக்களும் வந்த வண்ணமிருந்தன.

இளைய மகள் நேரத்தை மீண்டும் சரியாகப் பார்த்தாள்.

நாய் நாக்கை நீட்டிய படியே செத்துப் போனது. எல்லோரும் "ஓ"வென்று அழுதார்கள்.

அவனும் அழுதான்...

அவன் அவர்களுக்காகவோ இறந்த நாய்க்காகவோ அழவில்லை. அவன் அவனுக்காக அழுதான்.

'ஜாதிகள் இல்லையடி பாப்பா' ஏட்டில் படித்தது ஞாபகத்தில் வந்தது. ஆறு வயது முடியும் முன்னரே இங்கே கூட்டிக் கொண்டு வந்த தன் அப்பாவை நினைத்தான்.

தன் பாடப் புத்தகங்களை காணும் போதெல்லாம் அப்பாவைத் திட்டியே ஆதங்கப்படுவான்.

பாடசாலையும் இல்லாமல் படிப்பும் இல்லாமல் கால்வயிறுகூட நிரம்பாமல், எடு பிடியையும்விடக் கேவலமானதை நினைந்துருகி அழுவான். அப்பா செத்துப் போன தாய் முன்னர் தந்தி வந்த பொழுதும் இவன் போகவும் இல்லை; அழவுமில்லை.

ஏழு வருடங்களாய் இவன் பட்ட கஷ்டங்கள் யாருக்குத் தெரியும்? மாதக் காசு வாங்க மட்டும் யாரெல்லாமோ வந்து போனார்கள்.

மனசு இப்போதிவனை பாதித்திருக்கக் கூடும்.

முகம் பனிக்க மெல்ல அழுதான்.

**உவைஸ்கனி**

இந்தப் பிஞ்சு மனசில் எந்த எண்ணத்தையும் அவன் நோக்கவில்லை.

கொஞ்ச நேரத்துக்குள் அவன் இரு தடவை அழுதுவிட்டான்.

ஏன்? அன்று அப்பா கொடுத்தது, இந்த நாயோடு சேர்த்து அவனையும் தான்.

# காதலும் கானல் நீரும்

ஏன்? ஏன்? ஏன்? தனக்குத்தானே கேட்டுக் கொண்டாள் விஜிதா. தான் வைத்து இருக்கும் சீப்பில் இருந்து பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிவரை எதையுமே எவருக்கும் விட்டுக் கொடுத்து அறியாத விஜியால் எப்படி அவனுக்குமட்டும் விட்டுக் கொடுக்க முடிந்தது!

மெல்ல அவளுள் புகுந்து கொண்டான். அவனிடம் இருந்து எது பிடித்தது! தெரியாது. ஏதோ ஓர் உந்துதல். வயது. அறியாப்பருவம். முதலில் 'உன் நண்பன்!' என்றான். பின்பு 'காதலன்!' என்றான். அவள் மறுக்கவில்லை. நண்பிகள் மத்தியில் ஏதோ ஒரு பெருமை. சுகிமட்டும் சற்றுவித்தியாசமாக 'ஆண்கள் குரங்கைப் போல தாவும் மனம் கொண்டவர்கள்' என்றாள்.

அப்போதெல்லாம் அவளையே சுற்றிச் சுற்றி வந்தான். ஆனால் வந்த வேகத்தோடையே வேறு யாருக்கோ பின்னால் போய்விட்டான். அவளுக்கு கொஞ்சம் வேதனை. மற்றும்படி எந்தவிதத்திலேயும் அது அவளைப் பாதிக்கவில்லை. முதல் காதல் என்பது முழுமையானதொன்றல்ல. அது கனவுகளின் ஆரம்பம். அது நிலைப்பதில்லை. அது நிறைவேறாது போனாலும் வாழ்க்கையைப் பாதிப்பதில்லை. அது அப்படியே அடங்கிப்போனது.

வியப்புக்குரியன கற்பனைகளல்ல, நிஜங்கள்தான். அல்லது அப்படி விட்டுப்போன ஓர் உறவு இரண்டு வருடங்களுக்குப் பிறகு இப்போது ஏன் புதுப்பிக்கப்படவேண்டும்? மனித மனம் விசித்திரமானது. அது வெவ்வேறு விதமாய் அமைவதன் அடிப்படை சிந்தனை ஆற்றலா, அல்லது பாரம்பரியமாய் அது கொண்டு இருக்கும் இயல்புகளா? காதல், மனித நேயம், புரிந்துணர்வு போன்ற பண்பாட்டு உணர்ச்சிகளை எல்லாம் அது கட்டியம் கொண்டு இருக்கிறதா! ஒருவருடைய மனதை அறிவதற்கு அவருடைய எண்ணங்களையும், செயலையும் அறிந்து கொண்டாலே போதுமானது என்பார்கள்.

சுகி அவளுடைய பரந்தமனம். அவனுக்காக மீண்டும் சிபார்சு செய்தது. "அவனோடு கதைக்கமாட்டேன்!" என்று சொல்ல அவள் விரும்பவில்லை. காரணம், குற்றவாளிக்குக்கூட தன்பக்க நியாயங்களை சொல்வதற்கு ஒரு சந்தர்ப்பம் வழங்கவேண்டும்.

இப்போதெல்லாம் மிகவும் தெளிவாக இருந்தாள் விஜிதா. இனிமேல் யாரிடமும் ஏமாறப்போவதில்லை. நியாயமான சிந்தனையாலும், நல்ல புரிந்துணர்வாலும் தன்னை சற்று வித்தியாசமானவளாக இனம் காட்டிக் கொண்டாள். மடியில் கனம் இருந்தால் தானே மனதில் பயம் இருக்கும்? எதையுமே துணிச்சலோடு எதிர்கொள்ளக்கூடிய பக்குவம், மன ஆற்றல் அவளிடம் நிறைய இருந்தது.

"விஜி என்மேலை எந்தக்கோபமும் இல்லையா உங்களுக்கு?" என்று கேட்டான்.

அவளுடைய சிறிய உதடுகளில் இருந்து ஒரு புன்னகை தோன்றி மறைந்தது. முன்னரைவிட இப்போதுதான் அவன்மீதுள்ள வெறுப்பு அதிகமாக காணப்பட்டது. "சீ இப்படியும் மனிதர்களா? எந்தமுகத்தோடு...!"

"விஜி நான் செய்தது தவறு. சொறி. ஆனால் உன்னை என்னாலை மறக்க முடியேல்லை. எப்பவும் உன்னுடைய நினைவுதான்!"

"ஓம் ஓம்! நீங்கள் யாருக்கு பின்னாலை போனாலும் என் நினைவோடைதான் போவீங்கள். ஏனென்றால் என்னிலை அவ்



**உத்திரன் இணுவில்**

வளவு அன்பு வைச்சிருக்கிறீங்கள் என்ன!" அவளுடைய வார்த்தைகள் ஈட்டியைப் போல வந்தன.

"விஜி நான் உங்களை மனப்பூர்வமாக காதலிக்கிறன். பிளீஸ் என்னை மன்னிக்க மாட்டீங்களா?" அவள்விழிகளை உயர்த்தினாள்.

"மன்னிப்பா! ஏன் நீங்கள் என்ன தவறு செய்தீங்கள்? ஆரம்பத்திலை என்னை காதலிப்பதாய் சொன்னீங்களே; அதை நான் நம்பினேனே, அதுதான் தவறு. காதல் என்றால் என்னென்று அர்த்தம் தெரியுமா உங்களுக்கு? காதலுக்கு அடிப்படையே பரஸ்பரம் ஒருவர் மேலை ஒருவர் வைச்சிருக்கிற நம்பிக்கையும், புரிந்துணர்வும்தான். உங்களிட்டை அது இருந்தால்தானே! இந்த இரண்டு வருசத்திலை எங்களுக்கை எந்தவித தொடர்பும் இருக்கேல்லையே ஏன்? காதல் என்கிறது வாயிலை இருந்து வாற வார்த்தையாய் இருக்ககூடாது. உள்ளத்திலை இருந்து வாற உணர்வுகளாய் இருக்க வேணும். நீங்கள் எனிமேலும் மாறக்கூடும!"

"இல்லை விஜி. மாறமாட்டன். நடந்ததை எல்லாம் மறப்போம். இப்பதான் உன்ரை உள்ளத்தை புரிஞ்சுகொண்டன். நான் திருந்திறதிற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுக்கமாட்டியா? பிளீஸ்." அவனுடைய முகத்தை பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

"நீங்கள்தான் நான் திருந்திறதிற்கு ஒரு சந்தர்ப்பம் கொடுத்தீங்கள். இப்பநான் எதையுமே சிந்திக்கிறன். எவரையுமே புரிஞ்சு கொள்ள முடியுது. நல்லகாலம் ஒரு சின்ன காயத்தோடை தப்பித்துக்கொண்டன்."

"என்னைப் பொறுத்தவரை ஒருத்தன் கணவனாக இருந்தாலும் சரி, காதலனாய் இருந்தாலும் சரி, அவனை மன்னிப்பதன் மூலம் எங்கடை பெரும் தன்மையைக் காட்டி, கற்பை நிலை நாட்டி, நாங்கள் கண்ணகியாவதிலும் பார்க்க, மேலும் மேலும் கோவலன்கள் உருவாகாமல் பார்த்துக் கொள்வதுதான் முக்கியம். ஏனென்றால்! நாங்கள் 20ம் நூற்றாண்டுக்கு வந்திட்டம். எத்தனையோ சமுதாய சீர்கேடுகள், கலாசார சீரழிவுகள், சமூகவியாதிகள். இதிலை இருந்து எங்களை நாங்களே காப்பாற்றிக் கொள்ள வேணும். அதிலை ஒன்றுதான் இதுவும்."

"தயவு செய்து எனிமேலாவது காற்றடிக்கிற பக்கம் எல்லாம் சாய்கிற மரமாய் இராமல், மனிதனாக இருக்கப் பாருங்கோ. உங்களுக்கு என்னும் எத்தனையோ விஜிகள் கிடைப்பினம். ஆனால் எனக்கு!... என்னை புரிஞ்சு கொள்ளக்கூடிய, நேசிக்கிற ஒருதனுக்காக என்னும் எத்தனை நாள் வேண்டுமென்றாலும் நான் காத்துக் கொண்டு இருப்பன்,"

என்று கூறிவிட்டு அவள் திரும்பியபோது அருகே உள்ள அந்த கானல் நீரில் அவனுடைய பிம்பம் அலை அலையாக குழம்பியபடி அசைந்து கொண்டு இருந்தது அவனுடைய மனசைப் போல.

> எவ்வளவுதான் கோபமிருப்பினும், வீடுதேடி வந்தோரை
> "வா!" என்றழைத்து உபசரிப்பதுதான் மனிதகுலத்திற்கு அழகு...!
> நிராகரிப்பது அழகல்ல...

# வடுக்கள்...

நவம்பர் 1ம் திகதி கலண்டரில் தினத்தைப் பார்த்ததும், இமாலினியின் முகத்தில் இனம்புரியாத சந்தோஷம். காலை வேலைகளை முடித்து, தன் கணவனை வேலைக்கு அனுப்பிவைக்க ஆயத்தம் செய்துகொண்டவண்ணம்,

"என்னங்க... இன்னிக்கு நவம்பர் முதலாம் திகதி... மறந்திட்டீங்களா...?"

"அட ஆமா இன்னிக்கு ஒண்ணாந்திகதி...! நாளைக்கு நவம்பர் 2ம் திகதி... என்னம்மா இதுகூட தெரியாதா...?"

புன்னகையுடன் கூறினான் கண்ணன். கண்ணன், இமாலினி இருவரும் புதுமணத் தம்பதியினர். கூடவே இருவரும் காதலித்து மணமுடித்தவர்கள். தான் விரும்பியவனை முடித்ததில் அவளுக்கும், அவள் விரும்பியவளை முடித்ததில் அவனுக்கும் அளவில்லாத ஆனந்தம்.

ஏன் அவர்கள் குடும்ப வாழ்க்கைகூட அப்படித்தான். குடும்பம் என்றால் என்னவென்று இவர்களைப் பார்த்து அறிந்து கொள்ளலாம். காரணம் இருவரும் புரிந்துணர்வும், விட்டுக்கொடுப்புடனும் குதூகலமாக இல்லறத்தைக்கொண்டு சென்றனர்.

"போங்க... ஒங்களுக்கு எப்பவுமே ஜோக்தான்..., என்னங்க நா சீரியசா கேக்கிறேன். ஒங்களுக்கு இன்னைய திகதி மறந்து போச்சா...?"

"என்னம்மா இன்னைக்கு நவம்பர் 1ம் திகதி. இதுகூட தெரியாதா எனக்கு..?"

"ஐயோ... கொஞ்சம் சீரியசா சொல்லுங்களேன்...?" செல்லமான சிணுங்கலுடன் இமாலினி...

"சரி சரி... எனக்கு உண்மையிலயே நெனைவில்ல. நீங்களே சொல்லுங்க....!" அவள் கன்னத்தை இரு கரங்களாலும் ஏந்தியவண்ணம் கண்ணன் கூறுகின்றான்.

"என்னங்க நீங்க மறந்திட்டீங்களா? இன்னைக்கு ஒங்க தங்கை தேவியோட பிறந்தநாள்...!, நா ஏற்கனவே அவங்களுக்கு 'காட்' அனுப்பிட்டன். இன்னைக்கு விஷ்பண்ணணும்.... நீங்களும் விஷ்பண்ணுங்களேன்...!" அவள் கூறிமுடிக்க, கண்ணனின் முகம் வாடிப்போகின்றது. அவ்விடத்தைவிட்டகன்றவன் தன்னை தயார் செய்ய ஆரம்பிக்கிறான்.

"என்னங்க நா பேசிக்கிட்டே இருக்கன், நீங்க என்னடா என்னா ஒங்கபாட்டுக்கு உடுக்கிறீங்க... விஷ்பண்ணலாமா...?"

கண்ணன், இமாலினியை திருமணம் முடித்ததில் அவன் வீட்டில் ஒருதுளிகூட விருப்பமில்லை. பெரும் எதிர்ப்புக்கு மத்தியிலேயே தன் இஷ்டப்படி அவளை மணந்து கொண்டான். அவன் கேட்ட அவச்சொற்களும், கிண்டல் வார்த்தைகளும் ஏராளம். அவன் தங்கைகூட அவனை மதிப்பதில்லை.

இருப்பினும் அவன் ஒருவார்த்தைகூட எதிர்த்துப் பேசவில்லை. காரணம் அவர்கள் விருப்பமின்றி, தன் இஷ்டப்படி திருமணம் முடித்தது ஏதோ ஒரு விதத்தில் தன்னிலும் பிழையிருப்பதால், எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டான்.

"இமாலினி எனக்கு மட்டும் ஏன் தங்கைய விஷ்பண்ண ஆசயில்லையா...? ஆனா எங்க வீட்டோட நிலம்..., திரும்பத்திரும்ப நா அவங்ககிட்ட வேண்டாத வார்த்தைகள் கேட்கவிருப்பமில்ல. காரணம் எத்தனையோ தடவைகள் நா போய் பேசியிருக்கன். அப்பவும் எனக்கு கிடைச்சது வேதனைகள் மட்டும் தான்....! திரும்பவும் அந்த வேதனைய என்னால தாங்கிக்கொள்ள முடியாது...!"

அவன் வார்த்தைகளில் தளர்வு.

"என்னங்க நீங்க சின்னப்பிள்ளையாட்டம் பேசறீங்க...! என்னதான் நம்மோட அவங்க கோபமா இருந்தாலும், நாம அவங்களோட கோபமில்லையே...! அதனால நல்லநாளும் அதுவுமா ஒங்க தங்கைய விஷ்பண்ணுறது தாங்க முற... விட்டுக்கொடுத்துப் போறது தாங்க மனிதனுக்கு அழகு!"

அவள் வார்த்தைகளில் உறுதி.

"இமாலினி நீ கூட எத்தனையோ முற என்னக் கட்டிக்கிட்டதால அவங்களால நிராகரிக்கப்பட்டிருக்க... அப்படியிருந்தும்...?"

"சின்னப்பிள்ளைங்க தப்புசெய்தா அத திருத்திக் கொடுக்கணும். இல்ல பொறுத்துக் கொள்ளணும். அவங்கள அன்பா கவனிச்சிக்கிட்டா எல்லாமே சரியாப்போயிடும். அன்பால சாதிக்க முடியாதது ஒண்ணுமில்லங்க. அப்படியே ஒங்க தங்க ஏசினாக்கூட நாம என்ன கொறஞ்சா போயிடுவம்...? அவ ஒங்களுக்கு மட்டுமில்ல என்னோட



**எம். ரமேஷ்**

தங்கையும்கூட!"

அவள் வார்த்தைகள் கண்ணனை கலங்கவைத்தது. "இமாலி ஒன்னப்போல ஓர் அண்ணி கிடைக்க அவங்க கொடுத்து வைக்கணும். நா கூட ரொம்பக் கொடுத்து வைச்சவன். ஒன்னப்போல ஒரு மனைவி கிடைக்க..."

"என்ன்ங்க நீங்க பெரிய பெரிய வார்த்தைகளா சொல்லுறீங்க...? சரி நானே ஒங்களுக்கும் சேர்த்து விஷ்பண்ணிடவா...?"

கண்ணனின் பதில் கிடைத்ததும், குதூகலத்தில் குதித்தவண்ணம் தொலைபேசியைச் சுழற்றுகிறாள்...

'இவ்வளவு பாசமா இருக்கும் இவளக்கூட என் தங்கையால் புரிஞ்சுக்க முடியல்லையே...' மனதினுள் நொந்துக்கொண்டான்.

"ஹலோ! குட்மோர்னிங்..., தேவி இருக்காங்களா...?"

அவள் வருகைக்காக காத்திருந்தாள் இமாலினி. சில நொடிகளில்... "மெனி மெனி ஹாப்பி ரிட்டேன்ஸ் ஒஃப் த டே...!" நிறைந்த புன்னகையுடன் வாழ்த்துகின்றாள்.

மறுதொனியில் குரலை அடையாளம் கண்டு கொள்ள முடியாது,

"நீங்க யாரு பேசுறீங்க...?" தேவியின் குரல்.

"நான் இமாலினி...!" கூறி, ஒரு வினாடி கூட கடக்கவில்லை. இமாலினியின் முகத்தில் மாற்றம். இடிந்து போகின்றாள்..., தொலைபேசியை வைத்தவள் மௌனமாகின்றாள்.

அவள் உற்சாகம், குதூகலம், சிரிப்பு எல்லாம் எப்படி மறைந்ததோ தெரியவில்லை.

"இமாலினி ஏன்...? என்னாச்சு...?" அவள் மாற்றத்தைக் கண்டு பதற்றத்துடன் வினவுகின்றான் கண்ணன்.

"இல்லிங்க... ஒண்ணுமில்ல... நேரமாகுது. நீங்க வேலைக்குப் புறப்படுங்க...!" சமாளித்தாள் இமாலினி.

"என்ன நடந்தது என்று சொன்னாத்தான் நா இண்னைக்கு வேலைக்குப் போவன். இல்லையென்னா முதலாம் திகதியும் அதுவுமா வேலைக்கு லீவு போடவேண்டிவரும்...!" பொறுமையிழந்து கூறினான் கண்ணன்.

"இல்லீங்க... என்னோட பேரச்சொன்னதும் 'ரோங் நம்பர்' என்று சொல்லி ரிசீவரை முஞ்சியில அடிச்சமாதிரி வைச்சுட்டாங்க...

ஏங்க நா அப்படி என்னதான் சொல்லிட்டன்? எவ்வளவுதான் கோபமா இருந்தாலும் அன்பா ஒருவர் விஷ்பண்ணினா அத ஏத்துக்கிறதுதாங்க மொற... ஆனாலும் ஒங்க தங்க ரொம்பவும்தான் மோசம்...!"

அவள் கண்களில் கண்ணீர் ஊற்றெடுக்க, கண்ணனின் மார்பினில் முகம் புதைத்து சிணுங்கினாள்.

என்னதான் கோபம் இருப்பினும் வீடு தேடி வந்தோரை 'வா' என்றழைத்து உபசரிப்பதுதான் மனிதகுலத்திற்கழகு. நிராகரிப்பது அழகல்ல."

அவள் கேள்விகளுக்கு கண்ணனால் பதில் சொல்ல முடியவில்லை... ஏன் உங்களால் முடியுமா...?

'ஆண்டவனே! நீயே அவர்களுக்கு நல்வழி காட்டு!'மனதினுள் நினைத்தவன். அவள் முதுகை தட்டியவண்ணம் கலண்டரை நோக்குகின்றான். அன்று நவம்பர் 1ம்திகதி....

# மறுபிறப்பிலாவது...!

சுகுணனினால் தாங்கிக் கொள்ளமுடியவில்லை. கௌரி ஏன் என்னை வெறுக்கிறாள். உண்மையிலேயே வெறுக்கிறாளா? அல்லது வெறுப்பது போல் பாசாங்கு செய்கிறாளா?. அவளால் என்னவென்று வெறுக்கமுடியும்? வெறுக்கக் கூடியவளா அவளுடன் பழகினேன்? எத்தனை இனிமையாகப் பழகுகின்றவள். இதற்கு மட்டும் ஏன்?

அவனுக்கு இப்போது தன்னிலேயே வெறுப்பாக இருந்தது. ஏன்தான் கௌரியைக் கண்டோம் என்றாகிவிட்டது. சுகுணன் கௌரியை முதன்முதலில் தயாளன் வீட்டில் வைத்தே கண்டான். தயாளன் இவனது உற்ற நண்பன். ஒரு தீபாவளி தினத்தன்று தயாளனின் வீட்டிற்குப் போயிருந்த போதே கௌரியும் அங்கே வந்திருந்தாள். கௌரி தயாளனின் தங்கையுடன் படிப்பவள். அன்றைய எதேச்சையான சந்திப்பே இன்றைய சுகுணனின் கவலைக்கு அத்திவாரம் இட்டது.

அன்றைய சந்திப்பு காலப்போக்கில் ஒருவரையொருவர் புரிந்துகொண்ட இறுக்கமான நட்பு ஆயிற்று. அந்த நட்பின் வெளிப்பாடே, சுகுணனை கௌரியிடம் தனது காதலைக் கூறத்தூண்டிற்று. சுகுணன் எதிலுமே நிதானமானவன். அவசரம் என்பது அவனது அகராதியிலேயே இல்லை. நிதானமாக யோசித்த சுகுணன், கௌரி தனது முடிவிற்கு உட்படுவாள் என்ற நம்பிக்கையிலேயே கௌரியிடம் தனது மனதில் உள்ளதைக்கூறி அவளது முடிவை கேட்டபோதுதான், அவனுக்கு உலகே வெறுத்துப்போனது. இறுதிவரை கௌரி தனது முடிவிற்கு உடன்படுவாள் என எண்ணியிருந்த சுகுணனிற்கு கௌரியின் மறுதலிப்பு அதிர்ச்சியைக் கொடுத்தது. ஏன்?



**நீர்வையூர்-பகீரதன்**

என்ற கேள்விக்கும் கௌரியிடமிருந்து சரியான பதில் வரவில்லை.

அன்றிலிருந்து சுகுணன் சுகுணனாக இல்லை. ஊன், உறக்கம் மறந்த உயிரற்ற ஜடமாக உலவிக்கொண்டிருந்தான். அன்றைய தினத்தின் பின்பு ஒருவாரமாக கௌரியைக் கண்களால் காணவே முடியவில்லை. எவ்வளவோ முயற்சித்தும் அவனது கண்களுக்கு அவள் தென்படவேயில்லை.

இறுதியாக அவன் தயாளனின் தங்கையிடம் சென்று எதேச்சையாகக் கதைப்பது போன்று "கௌரி எங்கே?" எனக்கேட்டதற்கு அவள் சொன்ன பதிலினால் அவனுடைய இதயம் ஒருநிமிடம் நின்று தொடர்ந்தது. அவனது மனம் தயாளனின் தங்கை கூறியதை மீண்டும் ஒரு தடவை அசைபோட்டது.

கௌரி, மாவட்ட வைத்தியசாலை அவசர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும், வைத்தியசாலைக்குச் செல்வதற்கு முன்பு தன்னிடம் நீங்கள் கேட்டதையும், தான் ஒரு நோயாளி என்று சுகுணன் போன்றோரை கணவனாக அடைவதற்குக் கொடுத்து வைத்திருக்கவேண்டும் என்றும், தனது நோயின் தாக்கத்தை தன்னாலேயே தாங்கிக்கொள்ள முடியாது; தனக்கு எந்நேரம் என்ன நடக்கும் என்றும் தெரியாது. தனது இதயம் பலவீனமானது., எனவும், சுகுணனை தான் உயிருக்குயிராக நேசிப்பதாகவும், மறுபிறப்பு என்று ஒன்று இருந்தால் அப்போதாவது நோயற்றவளாக பிறந்து அவரையே அடைவதாகவும் கௌரி கூறியதாக அவள் கூறினாள்.

சுகுணனிற்கு தலையே வெடித்துவிடும் போல் இருந்தது. 'அட முட்டாள் பெண்ணே! நான் நேசித்தது உன்னையும், உன் குணத்தையும் தான். உன் உடலையல்ல. எனக்கு உன் நோயைப்பற்றித் தெரியாதுதான் உன்னை நேசித்தேன் என்று நினைத்து விட்டாயா? அட இதற்குத்தானா நீ என்னை நிராகரித்தாய்?' இங்ஙனம் நினைவுகள் அலை மோத சுகுணன் வைத்தியசாலையை நோக்கி விரைந்தான்.

வைத்தியசாலையில் காலனிடமிருந்து கௌரியைக் காப்பாற்றமுடியாது வைத்தியர்கள் திணறிக்கொண்டிருக்க, எங்கேயோ இருந்து வந்து வீழ்ந்த எறிகணையின் சிதறல் ஒன்று சுகுணனை கௌரியிடம் அழைத்துச் சென்றது.

நிழலான இந்த உலகில் இணையாத அந்த காதல் ஜோடிகள் நிஜமான உலகில் நிச்சயம் இணைந்துகொள்ளும்.

அங்கே கௌரி நிச்சயமாக சுகுணனிற்கு சம்மதம் தெரிவிப்பாள்.

# இலக்கிய நயம்

# கண்டறியக் கூடாத நோய்...!

எழுதுவது

முழடில்யன்

"**கோ**தை! இனியும் என்னால் உன் அவஸ்தைகளைப் பார்த்துக் கொண்டிருக்க முடியவில்லை. அம்மாவிடம் சென்று சொல்லிவிடப் போகிறேன். நீ இப்படி சோகை நோய் கண்டவள் போல நலிந்து கொண்டே போவதை என்னால் பார்த்துச் சகித்துக்கொண்டிருக்க முடியாது...."

"போடி! அம்மாவிடம் சொன்னாயானால் அவ்வளவுதான். வானத்துக்கும் பூமிக்குமாகக் குதிப்பார்கள். அவர்களால் இதைப் புரிந்துகொள்ள முடியாது. இப்படி கற்பனையில் மகிழ்ந்து கொண்டிருப்பதற்குக்கூட இடைஞ்சல் செய்ய ஆரம்பித்து விடுவார்கள்... வேண்டாம் குந்தவி."

"உன் கஷ்டத்தைக் காணச் சகிக்கவில்லையே... வகுப்பறையில் நீயாகவே ஏதேதோ பேசிக்கொள்கிறாய். உனக்குள் சிரித்துக் கொள்கிறாய்... பித்துப் பிடித்தவள் மாதிரியே நடந்துகொள்கிறாய். மற்றவர்களெல்லோரும் உன்னைக் கேலிப் பொருளாகப் பார்க்கிறார்கள். என்னருமைக் கோதை, என்னடீ இது?"

"நீல நெருக்கிடையில் நெஞ்சு செலுத்தி நேரம் கழிவதிலும் நினைப்பின்றியே சாலப், பலப்பல நற்பகற் கனவில் தன்னை மறந்த லயம் தன்னிலிருந்தேன்...!"

"கேட்டால் ஏதாவது பாட ஆரம்பித்து விடுகிறாய்."

"இசை காதலின் உணவு. கவிதை அது விடும் மூச்சு! குந்தவி, என்னைப் பார்த்துப் பரிதாபப் படாதே. நான் இந்த மனிதர்கள் வாழ்கிற பொறாமையும், வேஷமும், குழிபறிப்புக்களும் நிறைந்த உலகில் இல்லை. என்னைப் பார்த்துச் சிரிக்கிறவர்கள்தான் பரிதாபத்துக்குரியவர்கள். காதல் நோயினால் வாடுவோரின் துன்பம் போன்ற இன்பத்தை அனுபவித்தறியாதவர்கள்தான், வருந்துவோரைப் பார்த்து நகைப்பார்கள்..."

"போடி நீ இப்போது என் கோதையாக இல்லை. அம்மாவும் என்னிடத்தில் வருத்தப்பட்டுக் கொண்டார்கள், உனக்கு ஏதோ காத்துக் கறுப்புப் பட்டுவிட்டதோ என்று. அவருக்கு நான் சொல்லிவிடப்போகிறேன்... காத்துமில்லை; கறுப்புமில்லை, ஒரு கள்வனின் வேலை என்று!"

"என் குந்தவி, என்னை இக்கட்டில் மாட்டிவிடாள். எனக்கது தெரியும்."

"பின்னே என்னடி? எத்துனை திடமும் திறமைகளும் கொண்டவளாய் என் தோழி இருந்தாள். இப்போது தேய்ந்து போகும் உடலும், எவரைக் கண்டாலும் நடுநடுங்கும் பேதை நெஞ்சுமாகி விட்டாள். இவள் மரம் செடி



கொடிகளிடமெல்லாம் போய் நின்று கண்ணீர் சொரியப் பேசிக்கொண்டிருப்பதை யாராவது கண்டு விட்டால், பைத்தியம் என்று ஊரார் பரிகசிக்கும் நிலை வந்துவிடப்போகிறதே என்று எனக்கல்லவா பதைபதைப்பாக இருக்கிறது... இப்போது இதெல்லாம் வேண்டாம். நம் கல்வி முடியும்வரையாவது ஒத்திப்போடு. அதன் பிறகு அம்மாவிடம் இதமாக எடுத்துச் சொல்லி இதற்கொரு வழி பண்ணி விடலாம். அதுவரை வீண் சலனங்களையெல்லாம் மனதிலிருந்து அகற்றிவிட்டு, படிப்பில் கவனத்தைச் செலுத்து!... என்ன நான் சொல்வதைக் கேட்கிறாயா?"

கோதை சிரித்தாள் என்னிடமிருந்து என் நினைவைக் கழற்றிவிடச் சொல்கிறாள் குந்தவி. நினைவுகள் இல்லாத பிறகு நான் எப்படி இருப்பேன்? இந்தச் சாதாரண உண்மைகூடப் புரியவில்லையே இவளுக்கு.

"குந்தவீ! அன்பும் நேயமும் ஒருவர் முயற்சியினால் வலிந்து ஆக்கிக்கொள்ளும் பொருள்களல்ல, அவை தாமாகவே முகிழ்த்து எழுவன. அவற்றை வலிந்து அகற்றுவது நடக்கக்கூடியதல்ல. நாம் உண்ணும் உணவு எப்படி நாமாக ஆகிவிடுகிறதோ, அப்படியே அவர் நினைவும் நானாக ஆகியிருக்கிறது. எதை அகற்றிவிடச் சொல்கிறாய்?"

"உனக்கெப்படிப் புரியவைப்பேன் கோதை... இது உன் கல்யாணப் பருவம் அல்ல, கல்வி பயிலும் காலம். உடலிலும் மனதிலும் நீ மிக உறுதியானவள். ஓடுகிற மாட்டை வாலில் பிடித்து இழுத்து நிறுத்தியவள். உன்னால் அடக்க முடியும் உன் மனதை அடக்கிவிட்டு படிப்பில் கவனம் செலுத்து. உன்னிடமுள்ள தைரியத்தை நினைவுபடுத்திக்கொள். கல்வி முடிந்ததும் உங்கள் காதலுக்கு நான் துணை நிற்பேன்."

"போடி, நீயும் புரிந்துகொள்ளவில்லை. மனிதரின் வலிமையெல்லாம் இரண்டே இரண்டு விஷயங்களில் பயன்படாது. ஒன்று மரணம். இன்னொன்று இந்தக் காதல்!"

"என்ன சொன்னாலும் கேட்கிறாயில்லை. நீயும் உன் நலத்தைக் கவனத்தில் கொள்கிறாயில்லை. பாழ் ஊரைக் காக்கும் தனிமகன்போல் உடல் கொண்டாய். உன் உள்ளத்தைக் களவாடிச் சென்றவனையாவது யாரென்று சொல்...?"

***"யார்க்கும் எளியன்***
***இனிதாகிய சொல்லன்***
***என்றும் ஆர்க்கும்***
***நலமே புரிகின்றவன்***
***ஆழ்ந்த அன்பன்***
***ஈர்க்கும் அழுக்கிற் செறியாதவன்***
***ஏய்ந்த தூய்மை***
***சேர்க்கும் செயலான்..."***

"ம்... ஊருக்கு வழிகேட்டால் தேருக்கு வடம் பிடிக்கிறாய். சொல் நலம் கடந்த காமச் சுவையில் உன் நலம் கெட ஊறிக்கிடக்கிறாய்... தமிழாசிரியர் சொல்லித் தந்த தனிப்பாடல்தான் நினைவுக்கு வருகிறது.

***ஒரு கோட்டுக் கலைமுனியும்,***
***ஒளிதிகழும்***
***புலியாடை உடுத்த கோவும்,***
***மருமலர் வாழ் திசைமுகனும்,***
***வானவர்கள்***
***நாயகனும், மயிடன்தானும்,***
***கரிய நிறத் திருமாலும், வாலியும்***
***பராசனுமே காமனம்பால்***
***பெருமையிழந் தனரென்றால்***
***சிறுமனிதர் கெப்படியோ பேசுங்காலே!"***

"நன்று சொன்னாய் கோதை! அந்த சுந்தரக்கவிராயர் போலவே நம் பாரதியாரும் சுய சரிதையில் சொல்கிறார்:

***அன்பெனும் பெரு வெள்ளம்***
***இழுக்குமேல்***
***அதனை யாவர்***
***பிழைத்திட வல்லரே?***
***முன்பு மாமுனிவோர் தமை***
***வென்றவில்***
***முன்னர் ஏழைக் குழந்தை***
***என் செய்வனே..."***

"சரி சரி, கோதை, போதும். காதல் நோய் உன்னை வெகுவாகத்தான் பீடித்திருக்கிறது. அது எப்படி வந்தது சொல்... நானும் தெரிந்துகொள்கிறேன்..."

"இது சொல்லித் தெரிவதில்லை தோழி! ஆனாலும் உன் கேள்வியால் நானும் யோசித்துப் பார்க்கிறேன். எப்படி அவன், என்னை நானாக இல்லாமல் செய்தான்? என்னை மறந்து என் பேர் மறந்து பெயர்த்தும் அவனுக்கே பிச்சையாகிவிடச் செய்தான்? என் நெஞ்சுக் கூட்டுக்குள் ஒரு சூறாவளியாகப் புகுந்து, தென்றலாக எப்படி அங்கே நிரந்தரமாய்த் தங்கிக்கொண்டான்? உனக்கு அதை எப்படி விளக்குவேன் தோழி... ம்... கண்கள் பார்த்ததில் கொஞ்சம் வந்தது, முறுவல் பேசியதில் கொஞ்சம் வந்தது, விரல்கள் தொடுகையில் கொஞ்சம் வந்தது... ஆனாலும் தோழி, முழுக்காதலும் எப்படி வந்தது என்று நான் அறியேன்... உள்ளே நிரம்பிவிட்ட காதலையும் உனக்கு உரைக்கும் விதம் அறியேன்."

"வேண்டாம் வேண்டாம்... நீ சொல்ல வேண்டாம்... அதுபற்றிப் பேசினாலே நீ மனம் பிறழ்ந்தவளாக ஏதேதோ கொட்ட ஆரம்பித்துவிடுகிறாய்...!"

"என்ன செய்வேன் குந்தவீ! இதோ என் கண்முன்னால் நிற்கும் உன்னால் என் காதலைக் காண முடியாது. நானும் உனக்குக் காட்ட முடியாது. எவர் கையிலும் வார்த்தைக்கும் அது அகப்படாது. இப்படித்தான் இருக்கும் என்று உவமித்துச் சொல்லவும் எதுவும் கிடையாது. புயலடித்துவிட்டுப்போன ஊரைப் போல தன் நிலை மாறிக்கிடக்கும் எங்கள் நெஞ்சை நானும் அவனும் புரிந்துகொள்வதல்லால், நீயோ தாயோ உலகோ அறியக் கூடுவதில்லை..."

**".... காதல் நோய்**
**கைக்கு வந்து அகப்படாது,**
**கண்முன் நிற்கும் ஒருவரால்**
**காணொணாது,**
**காணும் என்று காட்டொணாதது,**
**அன்றியும்**
**ஒக்கும் என்று உரைக்கலான**
**உவமையில்லை,**
**இருவரும் உள்ளறிந்தன்றி**
**மற்றிவ் வூரறிந்த தில்லையே."**

*பெருந்தொகையில் ஒரு தனிப்பாடல்.*

## ஸ்போர்ட்ஸ்

### அக்தருக்கு ஆதரவாக அவுஸ்திரேலியர்கள்



**ப**ந்தை எறிவதாகக் குற்றம் சாட்டப் பட்டிருக்கும் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஷோயப் அக்தருக்கு ஆதரவாக, புகழ்பெற்ற அவுஸ்திரேலிய முன்னாள் வேகப் பந்து வீச்சாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

டென்னிஸ் லில்லி, ஜெஃப் தோம்ஸன், ஜெஃப் லார்சன், லென் பொஸ்கோ ஆகியோரே அக்தருக்கு ஆதரவாகக் கருத்துத் தெரிவித்தவர்கள்.

"சிறப்பாகப் பந்து வீசும் பிறநாட்டவர்கள் மீது கூறப்படும் இத்தகைய குற்றச்சாட்டுக்கள், அவுஸ்திரேலியாவின் நற்பெயருக்குக் களங்கம் விளைவிக்கின்றன. நன்றாகத் தெரிந்து கொண்டே தவறு செய்தால் (பந்தை எறிந்தால்) அந்த வீரரின் கிரிக்கெட் வாழ்க்கைக்கு முடிவு கட்ட வேண்டியதுதான்.

ஆனால் அக்தர் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டு குழப்பத்தை மட்டுமே விளைவிக்கும். யாரையும் ஏமாற்றும் வகையில் அக்தர் பந்து வீசவில்லை. அவர் மீது குற்றம் சாட்டுவதை நிறுத்திவிட்டு, அவரை விளையாடவிடுங்கள்," என்று ஜெஃப் தோம்ஸன் கூறியுள்ளார்.

"அக்தர் பந்தை எறிவதாக எனக்குத் தோன்றவில்லை. யாராவது ஒருவர் அதிவேகமாகப் பந்து வீசினால் போதும், உடனே ஒரு குற்றச்சாட்டு எழும். அவர் பந்து வீசவில்லை எறிகிறார் என்பார்கள். இது கிரிக்கெட்டின் வளர்ச்சிக்கு ஆரோக்கியமானதல்ல," என்று டென்னிஸ் லில்லி கூறியுள்ளார்.


இது குறித்து ஜெஃப் லார்சன் கூறும்போது,

"அக்தருக்கு ஏற்பட்டுள்ள இப்பிரச்சனை குறித்து மிகவும் வருந்துகிறேன். அவர் பந்து வீசுவதில் பிரச்சனை ஏதும் இருப்பதாக நான் நினைக்கவில்லை!" என்று தெரிவித்துள்ளார்.

### இந்தியர்கள் முதலிடத்தில்

**அ**ண்மையில் சியட் கிரிக்கெட் தரப் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் இந்திய வீரர்களான சௌரவ் கங்குலி, ராகுல் ட்ராவிட், சச்சின் டெண்டுல்கர் ஆகிய மூவரும் முதல் மூன்று இடங்களில் உள்ளனர்.

கங்குலி (61 புள்ளிகள்), ட்ராவிட் (58 புள்ளிகள்), டெண்டுல்கர் (57 புள்ளிகள்) இவர்களை அடுத்து அவுஸ்திரேலியாவின் மார்க் வோவ், ஷேன் வோர்ன், ரிக்கி பொண்டிங் ஆகியோர் அடுத்த 3 இடங்களையும் பிடித்துள்ளனர். இவர்கள் மூவரும் தலா 42 புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.



இவ்வாண்டின் மிகச் சிறந்த சர்வதேச அணிக்கான விருதை அவுஸ்திரேலிய அணி தட்டிச் சென்றது. இந்த அணி 72 புள்ளிகளுடன் முதலாவது இடத்திலும், தென்னாபிரிக்கா 42 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், இந்தியா 40 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளது.

### மக்ராத்தின் குறிக்கோள்

**அ**வுஸ்திரேலியாவுடனான முதலாவது டெஸ்ட் போட்டியில் இந்தியா தோற்று விட்டது. இப்போட்டி தொடங்குவதற்கு முன்



அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் கிளென் மக்ராத் பத்திரிகை ஒன்றுக்கு பேட்டியளித்திருந்தார். அப்போட்டியில் சச்சின் டெண்டுல்கரை வீழ்த்துவதே தனது குறிக்கோள் என்று தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் மக்ராத் கூறியிருப்பதாவது:

"ஒவ்வொரு போட்டித் தொடருக்கும் முன்பும் எதிரணியின் முக்கிய ஆட்டக்காரரை இனங்கண்டு கொள்வேன். களத்தில் அவரை வீழ்த்த முழு முயற்சி மேற்கொள்வேன்.

பாகிஸ்தான் தொடரின்போது அந்த அணியின் முக்கிய ஆட்டக்காரர் சயீட் அன்வரை 3 முறை வீழ்த்தினேன். தொடரை வெல்ல இதுவும் ஒரு காரணமாக அமைந்தது.

அதுபோல் இந்திய அணியின் முக்கிய ஆட்டக்காரர் சச்சின்தான் என்பதில் சந்தேகமில்லை. அவரை வீழ்த்துவதே எனது குறிக்கோள்.

மேற்கிந்தியத்தீவு வீரர் பிரையன் லாராவை விட சிறப்பாக ஆடக்கூடியவர் சச்சின். அத்துடன் மன உறுதியிலும் பலமானவர்.

சச்சினுடன் பல போட்டிகளில் விளையாடியுள்ளேன். அவரது பலம், பலவீனங்கள் அனைத்தும் அறிவேன். அவரை அடிக்கத் தூண்டும் வகையில் பந்துவீசி சரியான இடத்தில் ஃபீல்டரை நிறுத்தினால் அவர் வீழ்வது நிச்சயம்!" என்று தெரிவித்துள்ளார்.

### ஆசியக்கோப்பைப் போட்டி

2000 **மா**வது ஆண்டுக்கான ஆசியக் கோப்பை கிரிக்கெட் போட்டி பங்களாதேஷில் மே 27 முதல் ஜூன் 4 வரை நடைபெறவுள்ளது.

அண்மையில் பாகிஸ்தான் தலைநகர் இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற ஆசிய கிரிக்கெட் கவுன்ஸில் கூட்டத்தில் இம்முடிவு மேற்கொள்ளப்பட்டது.

இதற்கு அடுத்து நடைபெறவிருக்கும் ஆசியக்கோப்பைப் போட்டியை பாகிஸ்தானில் நடத்துவது என்றும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

ஆசியக் கோப்பைக் கிரிக்கெட் போட்டியில் ஆசியாக் கண்டத்தில் உள்ள கிரிக்கெட் விளையாடும் நாடுகளான இலங்கை, இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆகிய 4 நாடுகள் விளையாடுகின்றன.


## சர்தார்ஜி ஜோக்ஸ்

**மு**தன் முறையாக விமானப்பயணம் செய்தார் சர்தார்ஜி ஒருவர். விமானம் கிளம்பி மேலே போக ஆரம்பித்ததும், அவருக்குச் சற்றுக் குளிரத் தொடங்கியது.



பணிப்பெண்ணைக் கூப்பிட்டு அந்தப் பெண்ணிடம்,

"இவ்வளவு குளிரும்போது விமானத்தின் முன் எதற்கு ஃபேன் (விசிறி) சுற்ற விட்டிருக்கிறீர்கள்? முதலில் அதை நிறுத்துங்கள்," என்றார் அந்த சர்தார்ஜி.



**ச**ர்தார்ஜி ஒருவர் சுவரில் ஆணி அடிக்க எண்ணி, ஆணியை எடுத்தார். தவறுதலாக ஆணியின் தலையைச் சுவரின் பக்கம் வைத்துவிட்டு அவர் அதை அடிப்பதற்காகச் சுத்தியலை ஓங்கினார்.

அப்போது ஆணியின் முனை தன் பக்கம் இருப்பதைப் பார்த்துவிட்டு,

"அடடா! இது எதிர்ச்சுவரில் அடிக்க வேண்டிய ஆணி. அதனால்தான் கூர் இந்தப்பக்கம் இருக்கிறது. "ஏய்! யாரங்கே! இந்தப் பக்கம் கூர் உள்ள ஆணி ஒன்று கொண்டு வா!" என்றாராம்.

# திருமறை தரும் பொது நெறி

## புதிய ஆகமம் 28

# எருசலேம் நகரில் இயேசுபிரான்

**இராஜகுமாரன்**

ஆண்டவரின் விருப்பப்படி மக்களை வழிநடத்தும் பொறுப்பினை ஏற்று, பூவுலகில் சஞ்சரித்துக் கொண்டிருந்த இயேசுபிரான், பெத்தானியாவுக்கு வந்துள்ளார் என்பதை அறிந்து அயலிலுள்ள ஊர்களிலிருந்தெல்லாம் ஏராளமான மக்கள் அங்கு வந்து சேர்ந்தனர். இயேசுபிரானைக் காண்பதற்காக மட்டுமல்ல, அவரால் உயிர்பெற்றெழுந்த இலாசரைக் காண்பதற்காகவுமே மக்கள் பெருவாரியாக வந்து சேர்ந்தனர்.

இலாசர் இறந்து நான்கு நாட்களின் பின்னர் அவர், இயேசுபிரானின் அழைப்பைக் கேட்டு, தூக்கத்திலிருந்து எழும்பியவரைப் போல, எழுந்து வந்தார். இச்செய்தி காட்டுத்தீபோல் எங்கும் பரவியதால், இப்புதுமையைக் காணவே அணி அணியாக மக்கள் அங்கு வந்து சேர்ந்தனர்.

பெத்தானியா ஒரு சிறிய ஊர், திடீரெனப் படையெடுத்து வந்த மக்களுடைய நலன்களைக் கவனிக்க அவ்வூர் மக்கள், பல சிரமங்களுக்கு மத்தியில் பலவிதமான ஏற்பாடுகளைச் செய்தனர். இயேசுபிரான் அந்த ஊரில் காலடி எடுத்து வைத்ததும், அவருடைய கிருபையினால், தங்களவன் ஒருவன் மரணத்தைத் தழுவி நான்கு நாட்களின் பின்னர் உயிர்



பெற்றெழுந்ததும் அவ்வூர் மக்களுக்குப் பெருமையையும் பேரானந்தத்தையும் தந்திருந்தது. இம்மகிழ்ச்சி மேலீட்டால், விருந்தினர்களை மனம் கோணாமல் நடத்துவதற்கு முன்வந்தனர். இத்தகைய பணிகளுக்காக மரியா, மார்த்தாவுடன் இலாசரும் ஒத்துழைப்பைக் கொடுத்திருந்தனர்.

இவ்வாறு இயேசுபெருமானின் பொருட்டும் இலாசரின் பொருட்டும் மக்கள் அங்கு கூடுவதைப் பார்த்த தலைமைக் குருக்களும் அவருடைய சகாக்களும் பொறாமையால் பொசுங்கினர். இலாசரைக் காணவருபவர்கள், அவர் இல்லத்திலேயே இயேசுபெருமானையும் கண்டு இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தனர். ஆகவே இயேசுபெருமானுடன் சேர்த்து இலாசரையும் கொன்றொழித்துவிடவேண்டும் என்று தலைமைக்குரு திட்டமிட்டார். அவருடைய திட்டத்துக்கு, யூதர்களில் சிலரும் ஆதரவு தெரிவித்திருந்தனர்.

பெத்தானியாவில் தொடர்ந்திருப்பதை விரும்பாத இயேசுபிரானுடைய தூதர்கள் எருசலேமுக்குப் புறப்பட்டுச் செல்லலாம் என்று இயேசுபிரானைத் தூண்டினர். அவரும் அதற்கு இசைந்தார்.

இயேசுபிரான் எருசலேம் வரப்போகிறார் என்ற தகவல் அறிந்து மக்கள் அவரை வரவேற்க ஆயத்தங்களைச் செய்தனர். அவர் வரும் வீதிகளின் இருமருங்கிலும் குருத்தோலைகளைப் பிடித்த வண்ணம் மக்கள் காத்திருந்தனர்.

“ ஓசன்னா! ஆண்டவரின் பெயரால்<br>
வருகிறவர் போற்றப் பெறுக!<br>
இஸ்ரயேலின் அரசர்<br>
போற்றப் பெறுக!”

என்று எல்லாரும் ஒருசேர வாழ்த்தி இயேசுபெருமானை வரவேற்றனர். வரும் வழியில் ஒரு கழுதைக்குட்டியை இயேசு பெருமான் கண்டார். அவரை எதிர்பார்த்தே அக்குட்டி நின்றதோ என்று கருதுவதுபோல் அது காணப்பட்டது. அக்கழுதைக்குட்டியின் மீதேறி அவர் பயணத்தைத் தொடர்ந்தார்.

மறைநூலில் உள்ள ஒருவாக்கியம் இவ்வாறு உள்ளது.

“மகளே சீயோன் அஞ்சாதே!<br>
இதோ உன் அரசர் வருகிறார்;<br>
கழுதைக் குட்டியின் மேல் ஏறி வருகிறார்!”

இவ்வாக்கியத்துக் கேற்ப இயேசுபெருமானின் செயல் இருந்தது. இயேசுபெருமானை வரவேற்கப் பெருந்திரளாக மக்கள் கூடியிருந்ததைக் கண்ட பரிசேயர்கள் மென்மேலும் பொறாமை கொண்டனர். இயேசுபிரானைப் பிடித்துவிட அவர்கள் எடுத்த முயற்சிகளும் பலிக்கவில்லை. இயேசுபிரானுடன் ஏராளமான மக்கள் திரண்டு செல்வதைப் பார்த்து, “நம் திட்டம் எதுவும் பலிப்பதாயில்லை. முழு உலகமுமே அந்த மனிதருடன் போய் விடுகிறதோ என்று கருதத் தோன்றுகிறது!” என்றனர்.

### நேரம் வந்துவிட்டது

திருவிழாவுக்காக பல திக்குகளிலுமிருந்து வந்திருந்த மக்களுள் சில கிரேக்க நாட்டவர்களும் வந்திருந்தனர். அவர்கள் இயேசுபிரானைப் பற்றிய விவரங்களை அறிந்திருந்தனர். இதனால் அவரைப் பார்க்க விரும்பினார்கள். அந்திரேயாவும் பிலிப்பும், கிரேக்கர்கள் பார்க்க விரும்புகிறார்கள் என்பதை இயேசுபிரானிடம் வந்து சொன்னார்கள். அவர்களைப் பார்த்து இயேசுபிரான்,“மானிட மகன் மாட்சி பெற வேண்டிய நேரம் வந்துவிட்டது. கோதுமை மணி மண்ணில் விழுந்து மடியாவிட்டால் அது அப்படியே இருக்கும். அது மடிந்தால்தான் மிகுந்த விளைச்சலை அளிக்கும் என உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன்.

தமக்கென்றே வாழ்வோர் தம் வாழ்வை இழந்து விடுவர். இவ்வுலகில் தம் வாழ்வைப் பொருட்டாகக் கருதாதோர் நிலை வாழ்வுக்குத் தன்மை உரியராக்குவர். எனக்குத் தொண்டு செய்வோர் என்னைப் பின்பற்றட்டும். நான் இருக்கும் இடத்தில் என் தொண்டரும் இருப்பர். எனக்குத் தொண்டு செய்வோருக்குத் தந்தை மதிப்பளிக்கிறார்” என்றார்.

“இப்போது என் உள்ளம் கலக்கமுற்றுள்ளது. நான் என்ன சொல்வேன்? ‘தந்தையே, இந்த நேரத்திலிருந்து என்னைக் காப்பாற்றும்’ என்பேனோ இல்லை! இதற்காகத்தானே இந்நேரம்வரை வாழ்ந்திருக்கிறேன். தந்தையே, உம் பெயரை மாட்சிப்படுத்தும்!” என்றார்.

இவ்வாறு இயேசுபிரான் கூறியதும் விண்ணிலிருந்து “மாட்சிப்படுத்தினேன்; மீண்டும் மாட்சிப்படுத்துவேன்!” என்ற ஓர் ஒலி கேட்டது. இதனைக் கேட்ட மக்களில் சிலர், “அது இடி முழக்கம்” என்றனர். வேறு சிலர், “இது வானதூதர் இவருடன் பேசியபேச்சு!” என்றனர்.

இயேசுபிரான் இவர்களைப் பார்த்து, “இக்குரல் என் பொருட்டு அல்ல, உங்கள் பொருட்டே ஒலித்தது. இப்போதே இவ்வுலகு தீர்ப்புக்குள்ளாகிறது; இவ்வுலகின் தலைவன் வெளியே துரத்தப்படுவான். நான் மண்ணிலிருந்து உயர்த்தப்படும்போது அனைவரையும் என்பால் ஈர்த்துக்கொள்வேன்,” என்றார். இதனைக் கேட்ட சிலர், “மேசியா என்றும் நிலைத்திருப்பார் எனத் திருச்சட்ட நூலில் கூறியுள்ளதை நாங்கள் அறிவோம். அவ்வாறிருக்கும்போது, மானிட மகன்” உயர்த்தப்பட வேண்டும் என நீர் எப்படிச் சொல்லலாம்? யார் இந்த மானிட மகன்? என்று கேட்டனர். இதற்கு பதிலாக இயேசுபிரான் இவ்வாறு கூறினார்.

“இன்னும் சிறிது காலமே ஒளி உங்களோடு இருக்கும். இருள் உங்கள்மேல் வெற்றி கொள்ளாதவாறு ஒளி உங்களோடு இருக்கும் போதே நடந்து செல்லுங்கள். இருளில் நடப்பவர் எங்கே செல்கிறார் என்பது அவருக்குத் தெரியாது. ஒளி உங்களோடு இருக்கும் போதே ஒளியை ஏற்றுக்கொள்ளுங்கள். அப்போது ஒளியைச் சார்ந்தவர்கள் ஆவீர்கள்.”

கூடியிருந்த கூட்டத்தில் குருக்களுடைய தோழர்களும் பரிசேயரும் நடந்துகொண்ட முறையை அவதானித்த இயேசுபிரான், அவ்விடத்திலிருந்து மறைவாகப் போய்விட்டார்.

இயேசுபிரான் உண்மையிலேயே இறைமகன் என்பதனை வெளிப்படுத்துவதற்கேற்ற அடையாளங்கள் பலவற்றை வெளிப்படுத்தியிருந்தபோதிலும் அவர்மீது சிலருக்கு நம்பிக்கை ஏற்படவில்லையே என்ற ஆதங்கம் கொண்டிருந்தார் இயேசுபிரான்.

### இறைதூதர் ஏசாயாவின் கூற்று

“ஆண்டவரே, நாங்கள்<br>
அறிவித்ததை நம்பியவர் யார்?<br>
ஆண்டவரின் ஆற்றல் யாருக்கு<br>
வெளிப்படுத்தப்பட்டது?”

என்ற இறைவாக்கினர் ஏசாயாவின் கூற்று இவ்வாறு நிறைவேறியது.

“அவர்கள் கண்ணால்<br>
காணாமலும்,<br>
உள்ளத்தால் உணராமலும்,<br>
மனம்மாறிக் குணமாகாமலும்<br>
இருக்கும்படி அவர்களுடைய<br>
கண்ணை மூடச் செய்தார்.<br>
உள்ளத்தை மழுங்கச் செய்தார்.”

இவ்வாறு அமைந்திருந்தது. மேசியாவின் மாட்சியைக் கண்டதால்தான் அவரைப் பற்றிய மேற்படி வாக்கியங்களைக் ஏசாயா கூறினார்.

மக்கள், இயேசுபெருமானின் அருளுரைகளைக் கேட்டும் அவர் நிகழ்த்திய அற்புதங்களைத் தம் கண்களினால் பார்த்தும், அவர் மீது நம்பிக்கை வைத்திருந்தனர். ஆனால் அவர்களில் பலருக்கு பரிசேயர்மீது பயம் இருந்தது. இதனால் அவர்கள் இயேசுபெருமான் மீது கொண்டிருந்த பற்றினை வெளிப்படுத்த முடியாத நிலையிலிருந்தனர். தங்கள் நிலைப்பாட்டை வெளிப்படுத்தினால், தொழுகைக் கூடங்களிலிருந்து தங்களை விலக்கிவிடுவார்களோ என்று அஞ்சினார்கள். கடவுள் அளிக்கும் பெருமையைவிட, மனிதர்களிடம் கிடைக்கும் பெருமையையே அவர்கள் விரும்பினார்கள்.

இப்பேதைகளுக்காகப் பச்சாதாபப்பட்ட இயேசுபிரான் உரத்த குரலில் இவ்வாறு கூறினார்:

“என்னிடம் நம்பிக்கை கொள்பவர் என்னிடம் மட்டும் அல்ல, என்னை அனுப்பியவரிடமே நம்பிக்கை கொள்கிறார். என்னைக் காண்பவரும் என்னை அனுப்பியவரையே காண்கிறார். என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இருளில் இராதபடி நான் ஒளியாக உலகிற்கு வந்தேன்.

நான் கூறும் வார்த்தைகளைக் கேட்டும் அவற்றைக் கடைப்பிடியாதவருக்குத் தண்டனை தீர்ப்பு வழங்குபவன் நானல்ல. ஏனெனில் நான் உலகிற்குத் தீர்ப்பு வழங்க வரவில்லை; என்னைப் புறக்கணித்து நான் சொல்வதை ஏற்றுக்கொள்ளாதவருக்குத் தீர்ப்பளிக்கும் ஒன்று உண்டு; என் வார்த்தையே அது. இறுதி நாளில் அவர்களுக்கு அது தண்டனைத் தீர்ப்பு அளிக்கும். ஏனெனில் நானாக எதையும் பேசவில்லை; என்னை அனுப்பிய தந்தையே நான் என்ன சொல்லவேண்டும்; என்ன பேசவேண்டும் என்பது பற்றி எனக்குக் கட்டளை கொடுத்துள்ளார். அவருடைய கட்டளை நிலை வாழ்வு தருகிறது என்பது எனக்குத் தெரியும். எனவே நான் சொல்பவற்றையெல்லாம் தந்தை என்னிடம் கூறியவாறே சொல்கிறேன்.”

(தொடர்ந்து வரும்)

இயேசுபிரானால் அருளப்பட்ட வாக்கியங்கள், அவருடைய சீடர்களால் தொகுக்கப்பட்டன. ஏற்கனவே இப் பத்திரிகைகளில் இடம்பெற்ற அதே வார்த்தைகள் மீண்டும் இடம்பெறுகின்றனவே- அது தவறு என்று கருதவேண்டாம் என்று வாசகர்களைக் கேட்டுக் கொள்கிறோம்.

ஆ.ர்.

**திருமறை [பு.ஆ] 25 விடை: மோசேயின் சீடர்கள்**

**பரிசு பெறுவோர்:**

1. **எஸ்.எல்.எம். முஸ்தா,** இல. 416/7, கண்டி வீதி, அலவதுகொட.
2. **ஆர். துரிகா,** 72/2, சென்ரர் வீதி, கொழும்பு-11
3. **எஸ். றூபி,** தாழ்வுபாடு வீதி, மன்னார்.
4. **ஆர். சுவர்ணகலா,** வட்டி வெளி, பொத்துவில்-3.
5. **டி. விஜயகுமார்,** இல-05, கெமுனு மாவத்தை, நுவரெலியா.

**திருமறை [பு.ஆ] 28** வினா :- இயேசுபிரானிடம் வெளிப்படையாக நம்பிக்கை வைக்க சிலர் ஏன் அச்சமடைந்தனர்?

டிசம்பர் 25 க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டியமுகவரி:

**திருமறை-பு.ஆ.28-தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.**



# கேட்டேன்...கேட்டேன்...

‘அமர்க்களம்’ படத்தில் கவியரசு வைரமுத்து எழுதிய ‘சத்தமில்லாத தனிமை கேட்டேன்... ? ’ என்று தொடங்கும் ‘கேட்டேன்.. கேட்டேன்...’ பாடலை எஸ்,பி. பாலசுப்ரமணியம் மூச்சு விடாமல் பாடினார்.

பிரபலமான இந்தப் பாடலை குறும்பர் ஒருவர் தனக்குப் பிடித்தமானவைகளைக் கேட்டு எழுதிவிட்டார். இந்திய சஞ்சிகை ஒன்றில் பிரசுரமானதை நீங்களும் மூச்சு விடாமல் பாட உங்களுக்குத் தருகிறோம்.



*திட்டத் தெரியாத குப்பம் கேட்டேன்...*<br>
*திருப்பித் தராத கடனும் கேட்டேன்..*<br>
*திருப்பதி கோவிலின் உண்டியல் கேட்டேன்...*<br>
*திருந்தி வாழாத ஜென்மம் கேட்டேன்...*<br>
*எமனிடம் ஓட்ட எருமை கேட்டேன்...*<br>
*எடை குறையாத ரேஷன் கேட்டேன்...*<br>
*கொசுக்கள் இல்லாத குடிசை கேட்டேன்...*<br>
*போலீசைப்போல தொப்பை கேட்டேன்...*<br>
*சோவைப் போல வழுக்கை கேட்டேன்...*<br>
*நரசிம்மராவிடம் சிரிப்பைக் கேட்டேன்...*<br>
*ஹர்ஷத் மேத்தா அறிவைக் கேட்டேன்.*<br>
*குஷ்வந்த் சிங்கின் பேனா கேட்டேன்...*<br>
*தாமரைக்கனியின் மோதிரம் கேட்டேன்...*<br>
*கிளிண்டன் படுக்கும் மெத்தை கேட்டேன்...*<br>
*தினமும் கனவில் ரம்பா கேட்டேன்...*<br>
*சிம்ரன் ஆட்டும் இடுப்பைக் கேட்டேன்...*<br>
*மந்த்ரா பெரிய மனசைக் கேட்டேன்...*<br>
*வாழப்பாடியிடம் சிலிண்டர் கேட்டேன்...*<br>
*ராமர்பிள்ளை மூலிகை கேட்டேன்...*<br>
*ஜெயலலிதாவிடம் செருப்பைக் கேட்டேன்...*<br>
*சசிகலாவிடம் பந்தா கேட்டேன்...*<br>
*வீரமணியிடம் திருநீறு கேட்டேன்...*<br>
*சரவணபவனில் சிக்கன் கேட்டேன்....*<br>
*ராமன் வாழ மனைவிகள் கேட்டேன்...*<br>
*செலவே வைக்காத காதலி கேட்டேன்...*<br>
*திருட்டு வீடியோ படமும் கேட்டேன்...*<br>
*மனைவிக்கு நிறைய தங்கைகள் கேட்டேன்...*<br>
*அருகில் லேடீஸ் ஹாஸ்டல் கேட்டேன்...*<br>
*சிட்டுக் குருவி லேகியம் கேட்டேன்...*<br>
*கட்டுக் கட்டாய் கரன்சிகள் கேட்டேன்...*<br>
*பொய்கள் பேசாத வக்கீல் கேட்டேன்...*<br>
*சுருட்டத் தெரியாத தலைவன் கேட்டேன்...*<br>
*இத்தனை கேட்டும் கிடைக்கவில்லை...*<br>
*பிராந்திக்கு நிறைய காசுமில்லை...*<br>
*மூக்கை மூக்கை மூக்கைப் பிடித்தே*<br>
*பட்டை பட்டை பட்டை போட்டேன்!*



அதிஷ்டத்தை அள்ளித் தரும் அதிசயக் கற்கள்

Accredited by National Gem & Jewellery Authority

அருள் ARUL JEWELLERS
3, Sea Street, Colombo - 11. Tel: 436331
Branch: 105, Galle Road, Colombo 6. Tel: 580230

## அழகி



← மாமிசமலை போல் தோற்றமளிக்கும் இந்த அழகினை எங்கோ பார்த்தது போல் இருக்கிறதா?

333 வது முரசில் இந்த அழகியின் படம் பிரசுரமாகி இருந்தது.

நிறை கூடிய மொடல் அழகி என்ற உலக சாதனையைப் பல வருடங்களாகத் தக்க வைத்திருக்கும் இவர் போஸ் கொடுத்துச் சம்பாதிப்பதிலும் சாதனை படைத்து வருகிறார்.

விளம்பரப் படங்களில் இவரை நடிக்க வைப்பதற்காகப் பல நிறுவனங்கள் இந்த அழகிக்காகக் காத்திருக்கின்றன.

விளம்பரம் ஒன்றுக்காக இந்த அழகி அசத்தலான போஸ் கொடுத்துக் கொண்டிருப்பதையே படத்தில் நீங்கள் பார்க்கிறீர்கள்.





SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேழை

5 SEA STREET, COLOMBO 11
5 செட்டியார் தெரு, கொழும்பு 11

323657

## பெரிசு



↑ மக்கள் சீனாவின் தென் பிராந்திய வர்த்தக நகரமான ஷங்காயில் வருடந்தோறும் இலையுதிர் கால கேக் விழா நடைபெறுவதுண்டு.

இவ்வருடம் செப்டம்பர் 24ம் திகதியில் ஷங்காய் நகர உணவு உற்பத்தி நிறுவனம் ஒன்று பிரமாண்டமான கேக் ஒன்றை உற்பத்தி செய்து உலக சாதனையை நிலைநாட்டியுள்ளது.

5 ஆயிரத்து 474 கிலோ எடையுள்ள இக்கேக்கை உற்பத்தி செய்ய, 25 கிலோ முட்டை, 1200 கிலோ மா 3,500 தாமரை விதைப் பசை, 500 கிலோ சீனி மற்றும் 30 கிலோ எண்ணை பயன்படுத்தப்பட்டது.

வெண்ணை மற்றும் மாச் சீனியுடன் வர்ணப் பொடியும் சேர்த்து 24 சீன வேதாளங்களின் (ட்ரகன்) உருவங்கள் கேக்கின் அலங்காரமாக அமைக்கப்பட்டன. 11 சதுர மீட்டர் பரப்பளவை இக்கேக் ஆக்கிரமித்திருந்தது.

என்ன..... வியப்பால் மூக்கின் மேல் விரலை வைக்கிறீர்களா? கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த இந்தக் கேக்கைக் கண்டவர்களும் ஆச்சரியத்தால் வாயடைத்துத் தான் போனார்கள்.

சீனர்கள் பொதுவாகவே கேக் பிரியர்கள். இந்தக் கேக்கை எத்தனை பேர் சுவைத்தார்களோ தெரியாது. நிச்சயமாக ஒரு சிறு துண்டுதானும் மிச்சம் மீதியாகியிருக்காது என நம்பலாம்!

## வேகம்




↘ ஐரோப்பிய நாடுகளில் உறைபனியில் பனிச்சறுக்கு விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருவதை நன்கறிவீர்கள். உறைபனியின் மேல் கால்களில் நீண்ட உலோகச் சட்டங்களைப் பூட்டிக்கொண்டு வேகமாக ஓடி வருவார்கள்.

உலோகச் சட்டங்கள் மட்டுமன்றி நான்கு சக்கர மற்றும் இரண்டு சக்கர வாகனங்களிலும் பனிச்சறுக்கு விளையாட்டுக்களில் ஈடுபட்டு வருகிறார்கள். பனிச்சறுக்கு விளையாட்டுக்களில் பல உலக சாதனைகளையும் படைத்து வருகிறார்கள்.

உறைபனி கரைந்து அருவியாக ஓடும் போது அதன் மீது பனி மலைச்சறுக்கலுக்குப் பயன்படுத்தும் சைக்கிளில் அதிவேகமாக ஓடிச் சாதனை புரிந்துள்ளார் ஃபிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கிறிஸ்ரியன் ரெயில்ஃபேர்.

ஃபிரான்ஸ் நாட்டிலுள்ள வார்ஸ் மலைச் சாரலில் 1998ம் ஆண்டு மார்ச் மாதம் இச்சாதனை நிலைநாட்டப்பட்டது. இவர் தனது ஃபேர்ஜோ ரக சைக்கிளை ஓட்டிய வேகம் மணிக்கு 212.139 கிலோமீட்டர் (132மைல்). படு வேகம் தான்.

## புதுசு




↓ புதுமை... புதுமை... புதுமை... புத்தாயிரம் ஆண்டு பிறப்பதற்கு முன்னமே புதுப்புதுக் கண்டு பிடிப்புகளை கண்டுபிடித்து உலகத்தையே புதுமையாக்கிவிட வேண்டும் என்று கண்டு பிடிப்பாளர்கள் கங்கணம் கட்டிவிட்டனர் போலும்.

ஜப்பானின் 'சம்சங்' நிறுவனம் தற்போது சந்தைக்கு விட்டுள்ள கடிகாரத் தொலைபேசியின் தோற்றம்தான் நீங்கள் பார்ப்பது. சாதாரண கைக்கடிகாரம் அளவிலுள்ள இச்சாதனத்தில் மணியும் பார்க்கலாம், உங்கள் நண்பருடனோ வர்த்தக நிறுவனத்திடமோ பேசலாம்.

மிக நுணுக்கமான பாகங்களைப் பொருத்தி இதனை அமைத்துள்ளார்கள். மிகத் தெளிவான குரல் ஒலியைச் சத்தமாக இக் கருவி ஒலிபரப்புகிறதாம்.

விரைவில் நம் நாட்டுக்கும் வந்துவிடுமாம். இக்கைவடக்கக் கடிகாரத் தொலைபேசி.

தொலைபேசியில் பேசும்போதே, பேசுபவருடைய முகத்தையே பார்க்கக்கூடிய சாதனங்களும் வந்துவிட்டன. கைக்கடிகாரத்துடன் தொலைக்காட்சி பார்க்கும் வசதியும் வந்துவிடும் என்றும் ஹேஷ்யங்கள் கூறப்படுகின்றன.

அப்பப்பா எத்தனை விதமான தொலைபேசிகள்.

புத்தாயிரமாம் ஆண்டில் இன்னும் வேறு என்னென்ன புதுமைகள் வரப்போகின்றனவோ தெரியாது. பொறுத்திருந்து பார்ப்போம்!

## சவால்




↙ டெண்டுல்கர் இந்திய அணியில் சேர்ந்து 10 வருடங்களாகிவிட்டன. இரண்டாவது தடவை கப்டனாகியுள்ளார். முதலில் கப்டனானபோது வெற்றிகளைவிட இவர் தலைமையில் தோல்விகளே அதிகம். கப்டன் என்னும் சுமையால் இவரது துடுப்பாட்டம் பாதித்தது என்பது ஓரளவு உண்மையே. இதனால் இவர் கப்டன் பதவியில் இருந்து இறக்கப்பட்டார்.

உலகக் கோப்பைப் போட்டிக்குப் பின் மறுபடி கப்டனானார். இம்முறை இவர் தலைமையில் இந்திய அணி, இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்த நியூஸிலாந்து அணியை டெஸ்ட் மற்றும் ஒருநாள் தொடர்களில் வெற்றிகண்டது.

அதுமட்டுமன்றி இப்போட்டித் தொடரில் டெஸ்ட் போட்டியில் முதன் முதலாக இரட்டைச் சதத்தை அடித்தார் டெண்டுல்கர். அத்துடன் ஒருநாள் போட்டியில் இந்தியா சார்பாக அதிகூடிய ஓட்டங்களையும் (ஆட்டமிழக்காமல் 186) எடுத்தார்.

இதன்மூலம் கப்டன் பொறுப்பு தனது ஆட்டத்தை எந்தவிதத்திலும் பாதிக்கவில்லை என்பதை நிரூபித்தார். இந்நேரத்தில் ஒன்றைச் சொல்லியே ஆகவேண்டும். டெண்டுல்காரின் இந்த வெற்றியில் பெரும் பங்குவகிப்பவர் இந்தியாவின் முன்னாள் சகலதுறை ஆட்டக்காரரும் தற்போதைய பயிற்சியாளருமான கபில்தேவ் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உள்ளூர்ப் போட்டிகளில் இந்திய வீரர்கள் சூரர்களாக இருப்பார்கள். ஆனால் வெளிநாடுகளில் நடைபெறும் போட்டிகளில் வாலை சுருட்டிக்கொள்வார்கள் என்ற பரவலான கருத்து உண்டு.

அண்மையில் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் செயலர் லேலே, "அவுஸ்திரேலியாவில் இந்தியா விளையாடும் 3 டெஸ்ட் போட்டிகளில் இந்தியா தோற்கும்," என்று கூறியுள்ளார்.

இவையெல்லாம் டெண்டுல்கருக்கும், அவர் தலைமையிலான இந்திய அணிக்கும் விடப்பட்ட சவால்கள்தான். இந்தச் சவால்களை எல்லாம் முறியடிப்பார்களா?

## 2வது பிறந்தநாள் வாழ்த்து



மிதுன் பற்குணராஜா 24.12.1999

யாழ்ப்பாணம் மூட்டுமடத்தைச் சேர்ந்த பற்குணராஜா-மகுகளா தம்பதியினரின் அருந்தவப் புதல்வன் மிதுன் தனது இரண்டாவது பிறந்த தினத்தை 24.12.1999 அன்று கண்டாவிலுள்ள தனது இல்லத்தில் விமரிசையாகக் கொண்டாடுகிறார். மிதுன் குட்டியை அன்பு அப்பா, அம்மா, அம்மம்மா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமாமார், மாமிமார், அண்ணாமார், அக்காமார், மச்சான்மார், மச்சாள்மார், இலங்கையிலுள்ள பாட்டா, பிரேமி சித்தி, ஃபிரான்ஸ் சித்தப்பா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் மகா கணபதி அருள்பெற்று ஆய கலைகளும் கற்று பல்லாண்டுகாலம் சிறப்புற வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: சேனதிராஜா- (பாட்டா- இலங்கை)